உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 161 சித்திரை 25ஆம் நாள் புதன்கிழமை 08 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050

மின் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, மே 8
முல்லைத்தீவு, முத்து ஐயன்கட்டு, ஜீவ நகரில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. பழனியாண்டி குமாரவேல் (வயது - 60) என்பவரே உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ரி3)

தீவிரவாதத் தாக்குதல் திட்டங்கள் முறியடிப்பு

இயல்புக்கு திரும்புகின்றது நாடு பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, மே 8
தீவிரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்களிடம் இருந்து அனைத்து வெடிபொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் நடத்தப்படவிருந்த தாக்குதல்கள் தொடர்பான திட்டங்களும் முறியடிக்கப்பட்டுள்ளன. உறுதிப்படுத்தப்படாத தகவல்களைச் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றுவதைப் பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
இவ்வாறு பதில் 23

பாகிஸ்தானிய ஏதிலிகளை யாழ். கொண்டுவர ஏற்பாடு

நடவடிக்கை எடுக்கின்றது அங்கிலிக்கன் திருச்சபை

யாழ்ப்பாணம், மே 8
நீர்கொழும்பில் தங்கியிருந்த 700 பாகிஸ்தானிய ஏதிலிகளில் ஒரு தொகுதியினர் யாழ்ப்பாணத்தில் தங்க வைக்கப்படவுள்ளனர். அவர்களைத் தங்க வைப்பதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுக் கொண்டிருகின்றன. ஆனால் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை என்று அங்கிலிக்கன் திருச்சபையின் குரு முதல்வர் சாமுவேல் பொன்னையா தெரிவித்தார்.
21

தமிழரைப் போராட தூண்டியதுபோல் முஸ்லிம்களையும் தூண்டக் கூடாது

அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, மே 8
விடுதலைப்புலிகள் என்ற பெயரில் தமிழர்களை போராட்டத்துக்கு தள்ளியதைப்போல் இந்த நாட்டுடன் தொடர்பில்லாத ஒரு இஸ்லாமிய பயங்கரவாதத்தைச் சுட்டிக்காட்டி ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் பயங்கரவாதத்துக்குள் தள்ளவேண்டாம். நாட்டுக்குள் இருக்கும் 150 பயங்கரவாதிகளோடு சேர்த்து அனைத்து முஸ்லிம்களையும் பார்க்க 21

யாழ். பல்கலைக்குத் தகுதிவாய்ந்த அதிகாரியாக கதிர்காமநாதன்

யாழ்ப்பாணம், மே 8
யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தகுதிவாய்ந்த அதிகாரியாக பேராசிரியர் கந்தசாமி கதிர்காமநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.
நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகை 04

ஞானசாரரை விடுவிக்குமாறு ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை

கொழும்பு, மே 8
பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரருக்குப் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் எம்.ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லாஹ் அரச தலைவரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.
இனங்களுக்கு இடையிலான ஒன்றுமையை அதிகரிப்பதற்காக ஞானசார தேரர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.
அதேவேளை, எதிர்வரும் வெசாக் பௌர்ணமி தினத்துக்கு 04

கிரியெல்லவின் ஊடகப் பிரிவின் கடிதத்தால் சபையில் களேபரம்!

கொழும்பு, மே 8
அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவின் ஊடகப் பிரிவினரால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை அவமதிக்கும் வகையில் கடிதம் திட்டமிடப்பட்டிருந்தது என்று கூறப்படும் சம்பவத்தால் நேற்று நாடாளுமன்றில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.
நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. முதன்மை நடவடிக்கைகள் இடம்பெற்ற பின் 23

தனிப்பட்ட அரசியல் போட்டியே நாட்டின் நிலமைக்குக் காரணம்

நாடாளுமன்றில் ஜே.வி.பி. சாட்டை

கொழும்பு, மே 8
நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்க இந்த அரசே காரணம். அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரின் தனிப்பட்ட அரசியல் போட்டியில் தேசிய பாதுகாப்பைப் பலவீனப்படுத்தி விட்டார்கள். தமது தனிப்பட்ட அரசியல் 21

அலுவலவில் ஒருவர் தாக்கி கொலை

கொழும்பு, மே 8
அத்தனகல்ல, அலவலவில் ஒருவர் நேற்றுத் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கொலை செய்யப்பட்டவர் மொஹமட் ஹாதில் என்றும், அவர் அந் 21

அட்சய திருதிக்காக நகைகள் வாங்க குவிந்த மக்கள் கூட்டம்

சாவகச்சேரி, மே 8
அட்சய திருதியையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தங்க நகை வாங்குவதில் மக்கள் ஆர்வம் காட்டியிருந்தனர். நகைக்கடைகள் அனைத்தும் அலங்கரிக்கப்பட்டு, வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வாடிக்கையாளரும் தனக்கு ராசியான நகைக் கடையில் தனக்குரிய பொருளைக் 21

மகிந்தவுடைய ஆசைக்காகவே போட்டியிடுகிறாராம் கோத்தா

கொழும்பு, மே 8
அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவேன் என்று தெரிவித்துள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாத காரணத்தால் தான் நான் போட்டியிட 21

அனுமதி பெறாது அமைத்தவற்றை உடனடியாக அகற்றுமாறு பணிப்பு

அவைத்தலைவர், ஆளுநர், பிரதம செயலர் கையொப்பமிட்டு சிறப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், மே 8.
உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மனிநேயமற்ற முறையில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களால் ஏற்பட்ட அவலம் சகித்துக் கொள்ள முடியாத ஒன்றாகும். இனம், மதம், மொழி, குல பேதங்களால் இவ்வாறான துயரச் சம்பவங்கள் ஏற்படுத்தப்படுவதால் இவற்றை முளையிலேயே கிள்ளி எறிவதற்கான வழிமுறைகளைக் கண்டு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.
இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர், வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாணப் பிரதம செயலர் ஆகியோர் இணைந்து கையொப்பம் 04

யாழ். பாடசாலைகளுக்கு நேரில் சென்ற றொசான் பெர்னாண்டோ

யாழ்ப்பாணம், மே 8
யாழ்ப்பாண நகரத்துக்குட்பட்ட பிரபல பாடசாலைகளுக்கு வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் நேற்று திடீர்ப் பயணம் ஒன்றை மேற்கொண்டனர். 21

விகாரி வருட தமிழ்ப் புத்தாண்டு பொதுப் பலன்கள்

இரக்க சுபாவம் கொண்டவர்களே!

ராசிக்கு 2இல் சுக்கிரன் இருக்கும் வேளையில் தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதால், போராடி வெற்றி பெறுவீர்கள். சாதுர்யமாகவும், சமயோசிதமாகவும் சிந்தித்து பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். வி.ஐ.பி.கள் உதவுவார்கள். திருமணப் பேச்சு கூடி வரும். இழுபறியாக இருந்த வேலைகள் முடிவடையும். உங்கள் ராசிக்கு 7ஆம் வீட்டில் சந்திரன் இருக்கும்போது வருடம் பிறப்பதால் அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

வருடம் முழுவதும் சனி 12 இல் மறைந்து விரயச் சனியாகத் தொடர்வதாலும், கேதுவும் 12ஆம் வீட்டில் நிற்பதாலும் வீண் பழி, பண இழப்பு, ஏமாற்றங்கள் வந்து போகும். உறவினர்களுடன் பனிப்போர் வெடிக்கும். மற்றவர்களின் ஆலோசனையை முழுமையாக ஏற்காமல் நீங்களும் ஒருமுறைக்குப் பல முறை யோசித்து முடிவு எடுக்கவும்.

ராகு வருடம் முழுவதும் 6ஆம் வீட்டிலேயே தொடர்வதால் முக்கிய பிரமுகர்களுக்கு நெருக்கமாவீர்கள். உங்களை ஏமாற்றிக் கொண்டிருந்தவர்களை இனங்கண்டறிந்து ஒதுக்குவீர்கள். ஆன்மிக வழிபாட்டில் மனம் லயிக்கும். வெளிநாட்டிலிருக்கும் நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம் உண்டு. அயல்நாட்டுப் பயணம் சாதகமாக அமையும்.

14.4.19 முதல் 18.5.19 வரை குரு உங்கள் ராசிக்கு அதிசாரமாக 12ஆம் வீட்டில் இருப்பதால் சின்னச் சின்ன செலவுகள் அதிகமாகிக் கொண்டே போகும். ஆக்கப் பூர்வமான பணிகளுக்காக கடன் வாங்க வேண்டியிருக்கும். பூர்வீகச் சொத்தில்

பாகப்பிரிவினை நல்லவிதத்தில் முடியும். குருபகவான் 19.5.19 முதல் 27.10.19 வரை லாப வீட்டிலேயே தொடர்வதால் தொட்டது துலங்கும். சுப நிகழ்ச்சிகள் வீட்டில் ஏற்பாடாகும். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். எங்கு சென்றாலும் வரவேற்பு அதிகரிக்கும்.

28.10.19 முதல் 27.3.20 வரை 12ஆம் வீட்டில் குரு அமர்வதால் எதிர்பாராத பயணங்கள் அதிகரிக்கும். சேமிக்க முடியாதபடி செலவுகளும் அதிகரிக்கும். கடன் கொடுப்பது வாங்குவதில் கவனம் தேவை. கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவரின் ஆலோசனைக்கேற்ப உணவு முறைகளை அமைத்துக் கொள்வது நல்லது. தந்தையாரின் உடல் நலனில் கவனம் தேவை.

6.7.19 முதல் 23.7.19 வரை சுக்கிரன் 6ல் மறைவதால், வாகனத்தில் செல்லும் போது கவனமாக இருக்கவும்.

10.8.19 முதல் 25.9.19 வரை செவ்வாய் 8ல் மறைவதனால் மனஇறுக்கமும், எதிர்காலம் பற்றிய பயமும், எந்தக் காரியத்தை எடுத்தாலும் தாமதமாக முடியும் நிலையும் உண்டாகும்.

மாணவர்கள் உயர்கல்வியில் அதிக மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெறுவீர்கள். விரும்பிய கல்வி நிறுவனத்தில் சேருவீர்கள்.

வியாபாரத்தில் உங்கள் அனுபவ அறிவு பளிச்சிடும். தொழிலை விரிவுபடுத்துவீர்கள். வைகாசி, ஆனி, ஆவணி, ஐப்பசி மாதங்களில் நமுவிச் சென்ற ஒப்பந்தங்கள் கைக்கு வரும். கார்த்திகை, மாசி மாதங்களில் பிரபல நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு இலாபத்தை அதிகரிப்பீர்கள்.

உத்தியோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு தடைப்பட்டாலும் போராடிப் பெற்றுவிடுவீர்கள். சில நேரங்களில் மற்றவர்களின் வேலைகளையும் நீங்களே பார்க்கவேண்டி வரும். சக ஊழியர்களின் விஷயங்களில் தலையிடவேண்டாம். ஆவணி, கார்த்திகை, மாசி மாதங்களில் மாற்றம் ஏற்படும். அயல்நாட்டு நிறுவனங்களில் நல்ல வேலை கிடைக்கும். உங்கள் மேல் தொடரப்பட்ட வழக்கு சாதகமாக முடியும்.

கலைத்துறையினருக்கு அவர்களுடைய படைப்புகளில் மற்றவர்களால் ஏற்பட்ட சட்டச் சிக்கல்கள் தீரும். வாய்ப்புகள் எதிர்பார்த்தபடி அமையும்.

இந்தப் புத்தாண்டு உங்களை வெற்றி பெற வைப்பதுடன், வருமானத்தையும் உயர்த்துவதாக அமையும்.

சும்மஸ் பலன்கள்

தும்முதல் என்பது ஒரு செயல் அப்படியே நிறைவேறும் என்றும், அவரை யாரோ விரும்பு கின்றனர் என்றும், மேலும் வளர்க, பெருுக எனும் பொருளிலும் உள்ளதாய் பழந் தமிழர் நம்பினர். இன்றும் இது நடை முறையில் உள்ளது.

குழந்தை தும்முகின்ற போது ஒரு முறை, இரண்டு முறை, மூன்று முறை என தும் முவதற்கு ஏற்ப நூறு, இருநூறு, முந் நூறு என்று அதன் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆயுள் வளர்க எனும் பொருளில் இன்றும் நாம் சொல்லுகின்ற வழக்கம் உள்ளது.

சில சமயம் நாம் திடீரென்று தும்முவ துண்டு. இப்படித் தும்மல் வந்து தும்முதலுக்கும் பயனுண்டு என்கின்றன சில ஜோதிட நூல்கள்.

பல முறை தும்மினால் காரிய சித்தி, தும் மின பிறகு இருமின் லாபம், ஒரு தும்மல் தீமை, தும்மின பிறகு மூக்குச் சிந்தினால் மரணம், ஒரே தும்மல் தும்மின போது டன் சிந்தின போதும், எடுத்த காரியத்தைச் செய்யாமல் கர்மம் போக்கிப், பிறகு செய்யின் தோடமில்லை.

தாம்பூலம்தரித்துக்கொளப்போகும்போதும், போஜனம் உணவு செயத் தொடங்குகை யிலும், படுக்கைக்குப் போகும் போதும் தும்முதல் நலமாம்.

ஒரு காரியத்தை ஆலோசிக்கும் போதாயினும், காரியத்துக்கு பயணம் செய்யும் போதாயினும், நான்கு கால்களை உடைய உயிர்களில் ஏதேனும் தும்மினால் சாவு அல்லது சாவை ஒத்த தீமையாயினும் விளையும்.

தும்மிக் கொண்டே படுக்கை விட்டெழுதல் நல்லது, தும்மிக்கொண்டு உட்கார்ந்திருத்தல் காரியாலசியம்.

போராடிக் கொண்டே தும்முதல் காரிய ஆனி, தாம்பூலம் தரித்துக் கொண்டு தும்முதல் நல்லது. தும்முங் காலையில் செம்பு, பித்தளை முதலியவைகளைத் தொட்டுக் கொண்டிருக்கில் காரிய நலமாம், இரும்பு, வெள்ளிகளைப் பிடித்துக் கொண்டிருக்கில் காரியங் கெடும்.

இளம் பிள்ளைகள், குழந்தைகள், தும்மின் காரிய சித்தி.

சந்தையில்
குறைந்த வட்டி

சம்பத்
லீஸிங்

13.5%
இலிருந்து

பதிவுசெய்யப்படாத ஜப்பான் மற்றும் ஐரோப்பிய வாகனங்களுக்காக 7 வருடங்கள் வரை
100,000/- ரூபாவிற்கு மாதாந்தம் 1,988/- ரூபாய் மட்டுமே.

0777 66 33 77 அருகிலுள்ள சம்பத் வங்கிக் கிளையை நாடுங்கள்.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

www.sampath.lk

P.P.T
EXPRESS
இரவு பகல் சேவை

பருத்தித்துறை - 7:00 A.M
யாழ்ப்பாணம் - 8:00 A.M
வெள்ளவத்தை - 7:00 A.M
கொட்டாஞ்சேனை - 8:00 A.M

Colombo - Jaffna Buss Services
International Parcel Service

HOTLINE
Colombo - 077 575 5175, 076 440 8951
Jaffna - 077 573 1318, 076 440 8947

மறையா நினைவுகளில் 9ஆம் ஆண்டு திதி



மலர்வு 28 02 1956

உதிர்வு 18 04 2010

அமரர் திரு. இராமநாதன் புஸ்பயோகேந்திரன்

திதி: 08.05.2019

ஆண்டுகள் ஒன்பது ஆனபோதும்
ஆறவில்லை எம் துயரம்
அன்பென்னும் மழை பொழிந்து
அகிலத்தில் எம்மை வாழவைத்து
கலங்கரை விளக்காய், காவல் தெய்வமாய்
எங்களைப் பாதுகாத்தீர்களே - ஐயா
உங்கள் பிரிவால் ஏங்குகின்றோம்
காலமெல்லாம் எம்மைக் காத்திருப்பாய்
என்றிருக்க கண்ணீரைத் தந்துவிட்டு
விண்ணுலகம் சென்றனையோ
ஆற்றொண்ணாத் துயரமது உள்ளத்தில்
ஊற்றாகி ஓடுதையா - பூமிதனில்
பலயுகம் கடந்தாலும் - உள்ளன்பை
என்றும் மறவோம் ஐயா!

ஆன்மா சாந்திபெற உள்ளத்தால் வேண்டுகிறோம்.
சாந்தி! சாந்தி!!
பிரிவால் நினைந்துருகும் அன்புக் குடும்பத்தினர்.

தகவல்: இ. சங்கரநாதன் [சர்வா] தொ. பேசி: 0777555391

மரண அறிவித்தல்கள்

திருமதி சரஸ்வதி கஜமுகன்

(ஓய்வுநிலை நெசவு ஆசிரியர்)

அன்னை மடியில் 20.09.1934
ஆண்டவன் அடியில் 05.05.2019

யாழ். காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும், மூளாய் கிழக்கு, ஏழாலை கிழக்கு ஆகிய இடங்களை வசிப்பிடங்களாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கஜமுகன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 05.05.2019 இரவு 08.45 மணியளவில் தனது வதிவிடமான ஏழாலை கிழக்கில் சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (07.05.2019) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

குறிப்பு:-நேற்றைய உதயன் 6 ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி மரண அறிவித்தலில் **ஆண்டவன் அடியில் 05.05.1994** என இருப்பதை **05.05.2019** எனத் திருத்தி வாசிக்கவும்.

தகவல்:-குடும்பத்தினர்.

திருமதி ச.சந்திரவதனா

பண்ணாகம், சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ச.சந்திரவதனா 07.05.2019 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் திரு. திருமதி அருளம்பலம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் பொ.சண்முகராசா(லண்டன்)இன் அன்பு மனைவியும் ச.பிரசன்னாவின் அன்புத் தாயாரும் திருமதி பி.அமன்டாவின் அன்பு மாமியும் அ.சிவசுப்பிரமணியம்(மயூரன் ஸ்ரோர்ஸ் வடக்கம்பரை), அ.பாஸ்கரன்(ஓய்வு நிலை ஆசிரியர், பண்ணாகம்) காலஞ்சென்ற திருமதி ம.அற்புதமலர்(சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள்.

யாழ்...

யில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று உயர் கல்வி அமைச்சின் செயலர் எம்.எம்.பி.கே மாயாதுன்னே தெரிவித்துள்ளார்.

அதற்கான அரசிதழில் உயர்கல்வி அமைச்சர் கையொப்பமிட்டுள்ளார் என்றும், இது தொடர்பிலான உத்தியோகப்பூர்வ கடிதம் அரச தலைவர் செயலகத்தில் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் உயர் கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகக் கடமையாற்றிய விக்னேஸ்வரனை 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழக சட்டத்தின்படி அரச தலைவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனா அந்தப் பதவியில் இருந்து நீக்கியிருந்தார். அதே சட்டத்தைப் பயன்படுத்தியே பேராசிரியர் கந்தசாமி கதிர்காமநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

துணைவேந்தருக்கு நிகரான, துணைவேந்தர் ஆற்றும் கடமைகளை அவர் இல்லாதபோது ஆற்றுவதற்கு தகுதிவாய்ந்த அதிகாரிக்கு தகுதி உண்டு என்றும் கல்வியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக் கழக சட்டத்துக்கமைவாக புதிய துணைவேந்தருக்கான தேர்தலை நடத்தி, பல்கலைக்கழக பேரவையின் பரிந்துரையுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரை அடிப்படையில் புதியவரொருவர் அரச தலைவரால் நியமிக்கப்படும் வரை - மூன்று மாத காலத்துக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பௌதிகவியல் துறையின் மூத்த பேராசிரியரான க. கந்தசாமி, தனது பல்கலைக் கழக சேவையில் பௌதிகவியல் துறைத் தலைவராகவும், விஞ்ஞான பீடாதிபதியாகவும் பதவி வகித்தார். தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள தொழில்நுட்ப பீடத்தின் ஆலோசகராகப் பணியாற்றுகிறார். (எ-21)

அனுமதி...

இட்டு விடுத்துள்ள சிறப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

சில சட்ட விரோத சமய கலாசார, வியாபாரச் சின்னங்களும் சமயப் பொருள்களும் எந்த அனுமதியும் இன்றி வடக்கு மாகாணத்தில் அரச பொது இடங்களில் நிறுவப்பட்டு வருவது நிறுத்தப்பட வேண்டும் என்பதை அதிகாரிகள், சமூக, சமய தலைவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் வலியுறுத்தி வருகின்றனர். அவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளவை குறித்த கால இடைவெளியில் பொருத்தமான இடங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுவதுடன், தவறின் உரிய நிறுவனங்களால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த நேரிடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

நடைபெற்ற சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களின் மீண்டெழுதலுக்கும், எதிர்காலத்தில் இவ்வாறான விபரீதங்களைத் தடுப்பதற்கும் எனக் குறுகியகாலத் தேவையாக அரசால் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சட்ட விதிமுறைகளுக்கும், ஒழுங்குகளுக்கும் அவற்றை மதிக்கின்ற மக்கள் என்ற ரீதியில் கட்டுப்பட்டு, ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எந்தவொரு சூழ்நிலையிலும் விரோத சக்திகளால் விரிக்கப்படும் சதி வலைகளில் சிக்காமல் தம்மையும், சமூகத்தையும் காத்து மனச் சாட்சியுடனும், சிந்தனைத் தெளிவுடனும் செயற்பட திட சங்கற்பம் கொள்ள வேண்டும் என்று எமது மக்களான உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (எ-21.7)

ஞான...

முன்பாக ஞானசார தேரரை விடுவிக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் விஜேதாச ராஜபக்சவும் அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக ஞானசார தேரருக்கு ஆறு ஆண்டுகள்கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அவர் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். (எ)

வேலைவாய்ப்பு

மிக்சர் தொழிலகத்திற்கு தங்கிநின்று வேலைபார்க்க பெண்கள் தேவை. சுவிற் இனிப்பு வகை, முறுக்கு வகை, அடுப்பில் நின்று வேலை செய்யக் கூடிய வரும் தேவை. ட்ரைவிங் தெரிந்தவர்கள், டாடா (வடி) மூடுவாகனம் வைத்திருப்பவர், சேல்ஸ் செய்பவரும் தேவை.

தொடர்பு - 077998 9533

கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி இரவிசங்கர் மூதினி

அவர்களின் பாசமிகு தாயார்

இராசபூபதி தம்பிப்பிள்ளை

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்
பிரதேச செயலகம், நல்லூர்.

(C/10115)(11.17)

12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11.11.1982
மறைவு 08.05.2007

கந்தையா பிறேம்நாத்

கண்ணிமைக்கும் கணப்பொழுதினை விட
கடுகதியாய் கரைந்ததுவோ பன்னிரண்டு வருடங்கள்
மலரும் நினைவுகளை தேக்கி வைத்து
எவரும் காணாத உலகம் சென்றுவிட்டால்
எம் அன்புச் செல்வமே தவிக்கின்றோம் உன் நினைவால்
உம் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

வரணி இயற்றாலை, வரணி. குடும்பத்தினர்.

6ஆவது நினைவஞ்சலியும் 79ஆவது பிறந்ததினமும்

பிறப்பு 15.04.1940
இறப்பு 15.04.2013

இராமலிங்கம் கந்தையா

(ஓய்வு நிலை தபால் அதிபர்)

எங்கள் ஆருயிர் அப்பா
நீங்கள் எங்களை விட்டு
பிரிந்து ஆறு வருடங்கள் கழிந்தாலும்
அன்று போல் இன்றும்
எம்மனதில் இருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
மாவடியானை பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு: அன்னாரின் நினைவாக இன்று மீசாலை மாவடிப்பிள்ளையார் ஆலயத்தில் அன்னதானம் நடைபெறும். யாவரையும் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

"மணியகம்"
ஐயா கடையடி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
ஆதனப் பெயர்மாற்றம்
06, பாடசாலை வீதி, வட்டாரம் - 06

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் 06 பாடசாலை வீதியிலுள்ள இல : 06 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்திற்கு சொரியலாக **வேலுப்பிள்ளை கைம்பெண் மகேஸ்வரியும், வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியமும், வேலுப்பிள்ளை பரமசாமியும், வேலுப்பிள்ளை இராசதுரையும்** சொந்தக்காரர்களாகவிருந்து குறித்த ஆதனத்தினை சொரியலாக ஆட்சி செய்வது வசதியீனமாக இருந்தமையால் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1206/03.06.1987 ஆம் இலக்க உறுதியால் **பிரிவிடல்** செய்து சொந்தமும் உரித்து முடையவரானார்கள்.

தம்பையா வேலாயுதம் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5946/22.05.2004 ஆம் இலக்க உறுதியால் குறித்த **வேலுப்பிள்ளை பரமசாமி** ஆகியவரிடமிருந்து மேற்குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

இராசையா செகராஜசிங்கம் மகள் ஜெனதீபா, இராசையா செகராஜசிங்கமும் பெண் மங்கையர்கரசியும் ஆகியவர்களின் சீவியவுரித்திற்கமைவாக பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறை வேற்றப்பட்ட 4250/06.08.2012 ஆம் இலக்க உறுதியால் குறித்த **தம்பையா வேலாயுதம்** ஆகியவ ரிடமிருந்து மேற்குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாக பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சற்குணநாதன் கணேஸ்குமாரும் பெண் கேதீஸ்வரியும் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4539/17.12.2012 ஆம் இலக்க உறுதியால் குறித்த இராசையா செகராஜசிங்கம் மகள் ஜெனதீபாவும், **இராசையா செகராஜசிங்கமும் பெண் மங்கையர்கரசியும்,** ஆகியவர்களிடமிருந்து நிபந்தனை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரா னார்கள்.

நமசிவாயம் பாஸ்கரனும் பெண் வாசுகியும் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5423/01.05.2014 ஆம் இலக்க உறுதியால் குறித்த **இராசையா செகராஜசிங்கம் மகள் ஜெனதீபாவும் இராசையா செகராஜசிங்கமும் பெண் மங்கையர்கரசியும் சற்குணநாதன் கணேஸ்குமாரும் பெண் கேதீஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

காந்தி செல்வராசாவும் பெண் சிறிரஜனியும் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற் றப்பட்ட 6298/07.11.2015 ஆம் இலக்க உறுதியால் குறித்த **நமசிவாயம் பாஸ்கரனும் பெண் வாசுகியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

காந்தி செல்வராசாவும் பெண் சிறிரஜனியும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **காந்தி செல்வராசாவும் பெண் சிறிரஜனியும்** ஆகியவர்களிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்
வலிகாமம் மேற்கு பிரதேசசபை.

பெண் கணக்காளர் தேவை
விற்பனை விநியோக நிறுவனம் ஒன்றுக்கு ஏற்கனவே அனுபவமுள்ள பெண் கணக்காளர் தேவை.
(வயதெல்லை 25 - 50) (CS/25196) (11,17)
021 221 3788, 077 583 3045

வேலைக்கு ஆள் தேவை
வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 261 9386 (CS/25198) (11,17)

வீட்டுப்பணிப்பெண் தேவை
வீட்டுப்பணிப்பெண் ஒருவர்
உடனடியாக தேவை சம்பளம்
நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்
078 283 2289, 077 642 9299

நாகபூஷணி திருமண சேவை
மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.
257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306/077 138 7596

மரண அறிவித்தல்



மண்ணில் 01 . 06 . 1948

விண்ணில் 06 . 05 . 2019

வி. சச்சிதானந்தன் (SLPS - 1)

யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம் - ஆசிரியர்	- 01.09.1971
இ/ பலாங்கொடை ஜெயலானி ம.வி - ஆசிரியர்	- 01.01.1974
இ/ பரிலூக்கா ம.வி - ஆசிரியர்	- 01.02.1974
கொ/கொம்பனித்தெரு றோ.க.த.க.வி. - ஆசிரியர்	- 01.01.1976
கொ/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி - ஆசிரியர்	- 01.04.1979
யா/ யூனியன் கல்லூரி - ஆசிரியர்	- 01.01.1982
யா/யூனியன் கல்லூரி - ஆசிரிய ஆலோசகர்	- 01.09.1985
யா/வறுத்தலை விளான் அ.மி.த.க.வி. - தரம் III அதிபர்	- 01.01.1991
யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் - தரம் II அதிபர்	- 01.02.1991
யா/மல்லாகம் மகா வித்தியாலயம் - தரம் - 1C அதிபர்	- 05.11.1993
தி/விவேகானந்தா கல்லூரி - தரம் 1AB தற்காலிக இணைப்பு	- 05.01.1998
யா/மல்லாகம் மகா வித்தியாலயம் தரம் 1C - அதிபர்	- 01.01.1999
யா/ நடேஸ்வராக் கல்லூரி தரம் 1AB - அதிபர்	- 07.04.2000
யா/ இணுவில் இந்துக் கல்லூரி தரம் 1C - அதிபர்	- 05.09.2003

கரம்பனைப் பிறப்பிடமாகவும், சூராவத்தை, சுண்டுக்குளி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட விக்கினராசா சச்சிதானந்தன் நேற்று முன்தினம் 06.05.2019 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விக்கினராசா - மங்களம் தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் - சவுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கலைமகளின் (ஓய்வுநிலை ஆசிரியை, யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்) அன்புக் கணவரும், Dr.மயூரதி (தேசிய வைத்தியசாலை, கொழும்பு), அரிகரன் (இலங்கை கணக்காளர் சேவை) ஆகியோரின் அருமைத் தந்தையும், சயந்தனின் (பொறியியலாளர்- Global Digital (pvt) Ltd) அன்பு மாமனாரும், வெண்பாவின் அருமைப் பேரனும் , காலஞ்சென்ற சபாநாதன் (நீர்கொழும்பு) மற்றும் தில்லையம்பலம் (கொழும்பு), கனகாம்பிகை (கனடா), காலஞ் சென்ற சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வேலணையைச் சேர்ந்த கனகநாயகம் - பானுமதி தம்பதிகளின் சம்பந்தியும், திருமதி சுந்தரலட்சுமி, கனடாவைச் சேர்ந்த கனகசபாபதி, நடராஜா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான தெய்வயானை நடராஜா (சுருவில்), சீதையம்மா சதாசிவம் (சுண்டுக்குளி), பொன்னம்மா கந்தையா (மானிப்பாய்), மாணிக்கம் சுப்பையா (சுருவில்) ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் தங்கரத்தினம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2019) புதன்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30B, விதானையார் வீதி,
சுண்டுக்குளி. (CS/23860)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

021 222 5601

மரண அறிவித்தல்

திருமதி இராசபூபதி (கிளி) தம்பிப்பிள்ளை

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாக வும், வன்னியசிங்கம் வீதி, கோண்டா விலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசபூபதி (கிளி) தம்பிப்பிள்ளை நேற்று (07.05.2019) செவ்வாய்க்கிழமை இறை பதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், மூதினி (நல்லூர் பிரதேச செயலகம்), நிமலா, சுரேந்திரன் (பேப்பர் ஹவுஸ்), லலிதா (கிளிநொச்சி பளை றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரவிசங்கர் (தேசிய கல்வியற் கல்லூரி, கோப்பாய்), ஜெகதாஸ், கார்த்திகாயினி, திலீபன் (ஆளுநர் அலுவலகம், வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பாக்கியம் காலஞ்சென்ற இராசலட்சுமி மற்றும் அன்னலட்சுமி, காலஞ்சென்ற வேலாயுதப்பிள்ளை மற்றும் அன்னசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவமணி, வெற்றிவேல், பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மதுமிலன், யதுசயன், பவதர்சன், பவகாந், மதுசாந், ரஷ்சிதா, சுஷ்மிதன் ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2019) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
கோண்டாவில் தெற்கு, கோண்டாவில். (CS/9352)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

தம்பிப்பிள்ளை சின்னத்துரை



தோற்றம்
09.04.1934

மறைவு
06.05.2019

யாழ். காங்கேசன்துறை தையிட் டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பா ணம், பிரான்ஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப் பிள்ளை சின்னத்துரை 06.05.2019 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரரும், காலஞ்சென்றவர்களான மனுவேற் பிள்ளை - றோசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் ஜெயமணி யின் அன்புக் கணவரும் ஜெயந்தி, வசந்தி (லண்டன்), செல்வந்தி (பிரான்ஸ்), சாந்தி (பிரான்ஸ்), ஆனந்தி (லண்டன்), றுபேந்தி (கனடா), தமயந்தி (லண்டன்), ரவி (பிரான்ஸ்), பவாணி (பிரான்ஸ்), சுமதி, யூட் (குலேன்- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பொன்னம் பலம், சின்னையா, சின்னம்மா, மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இற யாசி மற்றும் அழகம்மா, காலஞ்சென் றவர்களான கணபதிப்பிள்ளை, நவரட்டிணம், திரேசம்மா மற்றும் புஸ்பம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயரட்ணம் மற்றும் அரியரெட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், விக்ரர், யோகநாதன், கந்தசாமி(பிரான்ஸ்), புவனேஸ்வரன்(பிரான்ஸ்), ஆனந்தநாயகம் (லண்டன்), லோகேந்திரன்(கனடா), சரவணபவான்(லண்டன்), சூரியலதா (பிரான்ஸ்), இரட்ணசிங்கம் (பிரான்ஸ்), யூட், றொசிற்றா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சந்திராதேவி, இராசகுமார், ஜெயக்குமார், றஞ்சினிதேவி, ரவீந்திரன் ஆகியோரின் சிறிய தந்தையும், சத்தியானந்தமலர், இராஜகுலதேவி, விமலாதேவி, இந்திராதேவி, சாந்தினிதேவி, சறோஜினிதேவி, குமரகுலசிங்கம், குணசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், அனற், அஜிற், ஷிறாணி, ராஜன், ஜோதினி, அருட்சகோதரி நிஷாந்தினி(செபமாலைக் கன்னியர்சபை), பிரபா, கனிஸ்ரா, சதீஸ், சந்துரு, பிரியா, சஞ்யு, சயு, ராஜ், ராஜா, லக்ஷி, தர்சன், குறோசன், தாரினி, காயத்திரி, றொமான், றொமினா, சஜி, சோபினா, குலேந்தினி, பிருந்தா, ஹரிஷ், கிறிஷா, றைசா, கென்ஸா, அபிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், ஷஹான், ஷவின், மக்டலின், அனுஷியன், அனோஷியன், ஷியானு, றெகாணா, திஷாந்தன், றிதுஷன், அஜய், அருண், அனுஷா, எர்வின், கல்வின், யோகான், லேயா, மக்சோன்ஸ், எமா, எவான், எல்வின், செறோன், அசின், எய்மி, ஏட்ரியன், ஏவா, டியா, தசா, யோசுவா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜெ.ஜெயந்தி (மகள்) - 077 797 8634
இல.05, ஓடக்கரை வீதி, யாழ்ப்பாணம்.
யூ.சுமதி (மகள்) - 077 913 0172
இல.13B, மூளாய் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
சி.குலேன் - 0033 629 303 501 (பிரான்ஸ்)

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25192)(14,17)

கண்ணீர் அஞ்சலிகள்...

மலர்வு
18
-
06
-
1976

உதிர்வு
03
-
05
-
2019

மன்னாரைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

கனகரட்னம் கனகச்சந்திரன்

(குமணன்)

பல்கலை வாழ்வில் வசந்தமாய் வந்தவனே...
எந்நாளும் எம்மை மகிழ்வித்தாய்
உன் நகைச்சுவையால் ..
ஆனால் இன்று வந்த சேதிகேட்டு
நெஞ்சு அடைக்குது நண்பா...
மாரடைப்பில் மரணிக்கும் வயதா உனது
என எண்ணிப்பார்க்கும் வேளையில் - எம்
நெஞ்சு அடைக்குது நண்பா...

அன்னாரை இழந்து தவிக்கும் உற்றார் உறவினர்களின்
பிரிவுத் துயரில் நாமும் பங்கெடுக்கின்றோம்....
யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீட நண்பர்கள்
2001/2002

என்னமா போஸ் கொடுக்கிறாரு...!

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

சுப்பிரமணியம் திருநாவுக்கரசு

(சாமியார்)

(பிரபல பாக்கு வியாபாரி,
முன்னைநாள் வர்த்தக சங்க தலைவர்)

திதி: சதுர்த்தி

தோற்றம்
12.11.1928

மறைவு
29.04.2017

காலச்சக்கரங்கள் சுழன்றோடி கொடிய வருடங்கள் இரண்டு ஆனதையய்யா
பாரினிலே பலரும் போற்றும் பண்பாளனாய் விளங்கிய எங்கள் ஜயாவே
பசுமையான உம் முகத்தை பாரினிலே இழந்ததனால் துடிக்கின்றோம்
மௌனத்தின் வாசலிலே மனக்குமிழி உடைந்தது
மறுபடியும் உயிர்வேண்டி மனமெல்லாம் அழுகிறது.
அன்று நீர் சொன்ன அறிவுரைகள் எங்கள் நெஞ்சம்
நிறைந்து நிறைவுடனே வாழ்கிறோம்.
வீட்டினிலே நடமாடித்திரிந்த நீங்கள் விண்ணகத்தில் தெய்வமையா இன்று
வீட்டில் படமாகிப்போனீர்கள் ஜயா வையகத்தில் நல்வழிகாட்டி வாழவைத்த
எங்கள் அன்புத்தெய்வத்திற்கு எம் கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்கி
உங்கள் ஆத்மா சாந்திபெற வண்ணை பாலம்பிகா சமேத வைத்தீஸ்வரரின்
பாதங்களில் அமைதி வேண்டி நிற்கின்றோம்.

ஸ்ரீரங்கம்
374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

மரண அறிவித்தல்

திருமதி சாந்தினி அருந்தவபாலன்

(ஓய்வுநிலை ஆசிரியை - பளை மத்திய கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)

வேலாயுதம் வீதி நுணாவில் மத்தி சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி சாந்தினி அருந்தவபாலன் 06.05.2019 திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா மகேசன் - ஞானபூங்கோதை தம்பதியினரின் மூத்த புதல்வியும் க. அருந்தவபாலன் (ஓய்வுநிலை அதிபர் - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் திருவதனி (அவுஸ்திரேலியா) தனன்செயன் (அவுஸ்திரேலியா), சித்தார்த்தன் (சிங்கப்பூர்), பார்த்தீபன் (விரிவுரையாளர் தொழில்நுட்ப பீடம் - யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இரத்தினம் தேவானந்தின் (அவுஸ்திரேலியா) அன்பு மாமியும் சிவனயா, சோபியா, சமந்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற தர்மபாலன் மற்றும் ஜெயபாலன் (பிரான்ஸ்), மாலினி (ஜேர்மனி), விக்னகுமார் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் குளோரியா, கேதீஸ்வரி, அன்ரன் அழகராசா, தாமராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.05.2019 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேலாயுதம் வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23136/15/17)

மரண அறிவித்தல்

வயித்தியான் ஞானப்பிரகாசம்

இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயித்தியான் ஞானப்பிரகாசம் நேற்று (07.05.2019) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் · காலஞ்சென்றவர்களான வயித்தியான் - ஆரோக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான செபஸ்ரியான் பிள்ளை - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமக்னும், மாகிறேற்றின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, சவிரியான் சின்னமணி மற்றும் சூசைப்பிள்ளை, மரியம்மா, செபமாலை ஆகியோரின் அன்புச் சகோதரரும், யூட் கிறிஸ்ரியன் (மதன் கடை), யூட் கிறேஷியன் (யூட் - அமெரிக்கா) அமலராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், மேரி மெற்றில்டா, யமுனா, கிருஷாந்தி (அமெரிக்கா), மதுராந்தகன் ஆகியோரின் மாமனாரும், ஜோன்ஏட்ரியன், ஜெனிலியா, ஜோன் பிரட்றியன், ஜோன் ஏட்ரிசியன், ஜொகானா இன்ஷகா, சிலோக், மேரிஷரோனா, பிறினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.05.2019) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியுளவில் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28A, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/9352)(11.17)

இது புதுசு

காய்கறிகள் வெட்டி சேகரிப்பதற்கென புதிய வசதியுடன் 'காய்கறி வெட்டும் பலகை' அறிமுகமாகியுள்ளது. இது ஆயிரத்து 200 ரூபாவிலிருந்து விற்பனை செய்யப்படுகின்றது.

வேலையாள்கள் தேவை

கோழிப்பண்ணையில் வேலைசெய்வதற்கு ஆண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு-077 2718149

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
க.பொ.த (உ/த) புதிய மாணவர் அனுமதி - 2021

க.பொ.த (உ/த) கலைப்பிரிவு, வர்த்தகப்பிரிவு (ஆங்கில மொழிமூலம்) 2021 ஆண்டுக்கான மாணவர் விசேட அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவற்றில் இணைந்து கற்க விரும்புவோர் 13.05.2019 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(C/10134/(11.17)

மஹா சக்தியுள்ள வசிய மாந்திரிகம்

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள், என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

★காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா?
★காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா?
★பெற்றோர் விருப்பமின்மையா?
★கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா?
★வேலைத்தளத்தில் பிரச்சினையா?
★காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா?
{இரகசியம் பேணப்படும்}

■ நம்பிக்கை-உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
■ உங்கள் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
■ நேரடியாக வரமுடியாதவர்களுக்கு பதிவுத்தபால் மூலம் செய்து அனுப்பப்படும்.

ஆண், பெண் வசியம்

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்தவர்
வேலு ராஜேஸ்வரி அவர்கள்
மாத்தளை.
0778 432 602 / 075 302 4239
என்னைத் தொடர்புகொள்பவர்களுக்கு ஒருநாளும் தோல்வியில்லை.

கண்ணீர் அஞ்சலி

எம்முடன் கடமையாற்றும் செல்வி இந்தூசினி குமரசாமி அவர்களின் அன்புத் தாயார்

திருமதி குமாரசாமி இந்திராணி

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்,
தேசிய சேமிப்பு வங்கி, கிளிநொச்சி.

(ADV PTD (54.17)

கண்ணீர் அஞ்சலி

யா/ டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவியும் ஓய்வுநிலை ஆசிரியையும் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன் அவர்களின் அன்பு மனைவியுமான

திருமதி சாந்தினி அருந்தவபாலன்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வட்டமேசை
யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

16ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
18.11.1936

ஆண்டவன் மடியில்
05.05.2003

நீத்: சதுர்த்தி 08.05.2019

"சிவத்தமிழ்மணி"
அமரர் மாப்பாணர் துரைராசா
(முன்னாள் ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - நகரசபை சாவகச்சேரி)

அன்புடன் எமை வளர்த்து அறிவூட்டி
பண்புடன் நாம் வாழ வழிகாட்டி
இன்பமுடன் வாழ்வதற்கு எல்லாம் எமக்களித்து
இறைவனடி சேர்ந்தனையோ!

மீசாலை மேற்கு
மீசாலை.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கேள்விஅறிவித்தல் (IFB-6)
மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்

07.05.2019 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் 3ஆம் பக்கத்தில் பிரசுரமான வேலைக்கான அட்டவணை 02 இல் உள்ளதை பின்வருமாறு திருத்தி வாசிக்கவும்.

02	JK/PROC/Road/ 04/13/2019	RENOVATION OF THIKKAM SCHOOL ACCESS ROAD AND THIKKAM KILIVETTI ROAD at ALVAI WEST	5.91	60 days	C- 7 or Above (highway /Road)	60,000	24.09.2019	2,000

நா.வேதநாயகன்,
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

சின்னத்தம்பி சொக்கலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - பலாலி சித்தி விநாயகர்)



பிறப்பு
26.08.1935

இறப்பு
06.05.2019

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சொக்கலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) கடந்த (06.05.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பறுவதம் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நல்லமுத்து தம்பதிகளின் மருமகனும் அன்னலட்சுமியின் கணவரும் கருணாகரன் (லண்டன்), சசிகலா (டென்மார்க்), சுரேஸ்கரன் (லண்டன்), வித்தியாகரன் (லண்டன்), லோகிதகலா (சுவிஸ்), அமிர்தகலா, ஸ்ரீகலா, தனேஸ்கரன் (லண்டன்), பிரதீபன் ஆகியோரின் தந்தையாரும் விஜிதா, அன்னராஜா, சிவதீபா, சிவரூபினி, பிரபாகரன், சுதர்சன், சிவகரன் ஆகியோரின் மாமனாரும் அபிராம், விஷ்ணுகரன், வைஷ்ணவி, செந்தூரன், நிலவன், எழிலன், சிவகீரன், வாரணன், ஜோதனா, ரதிவர்ணன், அஸ்வினி, மகிழினி, பெளர்ணிகா, சந்தோஸ், கருணிகா, பூர்வீகன், கனிஷ்கா, சகிந் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா, பத்மாவதியம்மா மற்றும் ஞானலிங்கம் (டென்மார்க்), அருள்ராசலிங்கம் (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற இராசையா மற்றும் சிங்கராசா, மல்லிகாதேவி, காலஞ்சென்ற ரேவதிதேவி (கிளி), பரிமளம், காலஞ்சென்ற ஜீவராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியள வில் குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மனைவி - 0094 77 334 3339
மகன் - கருணா - 0044 74 8858 1456
மகள் - சசி - 0045 626 14880
மகன் - கரன் - 0044 799 979 2424
மகன் - லோகன் - 0044 753 195 3165
மகள் - றோசா - 00417795 10099
மகள் - அமுதா - 0094 212 059 325
மகன் - புஷ்பா - 0094 213 007 795
மகள் - லக்ஷன் - 0044 750 8366 269
தம்பி - அருள்ராசலிங்கம் - 0094 777 495 019
தம்பி - ஞானலிங்கம் - 0045 517 25828

(CS 25189/15/18)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

ஊடகங்களை விலக்கி வைப்பது தவறு

இலங்கையின்தற்போதைய சூழ்நிலையில்தீவிரம் பெற்றிருக்கும் சோதனை நடவடிக்கைகளில் இருந்து ஊடகங்களை விலக்கி வைக்கும் அறிவிப்பு ஒன்றை அரசதலைவர்மைத்திரிபால சிறிசேன விடுத்திருக்கிறார். பாதுகாப்பு நடவடிக்கைகளின்போது பாதுகாப்புத் தரப்பினர் அல்லாத வேறு ஊடகவியலாளர்களையோ வேறு தரப்பினரையோ அனுமதிக்கக்கூடாது என்று அரச தலைவர் சகல பாதுகாப்புத் துறையினருக்கும் அறிவுறுத்தல் அனுப்பி வைத்திருக்கிறார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்திருக்கிறது.

படையினரின்சோதனைநடவடிக்கைகள்தொடர்பான காட்சிகள் ஊடகங்களில் காட்சிப்படுத்தப்படும் சில சந்தர்ப்பங்களில் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புஅற்றவர்கள்கூட அதில்தொடர்புபட்டவர்களாக அடையாளப்படுத்தப்படும் ஏதுநிலை உருவாகுவதனால் அவர்கள் வசதியீனங்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டதைஅடுத்தேஅரசதலைவர்இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்என்றும்கூறப்பட்டிருக்கின்றது.

ஊடகங்களால் இதுபோன்ற வசதியீனங்கள்பலருக்கு ஏற்படுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. அது தவிர்க்கப்படவேண்டும், தடுக்கப்படவேண்டும்என் பதிலும் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அதனை முன்னெடுப்பதற்கான வழி சோதனையிடங்களில் இருந்து ஊடகங்களை அகற்றுவதல்ல. பொறுப்பு வாய்ந்த ஊடகவியலின்தரத்தை மேம்படுத்தி வளர்ப்பதன்ஊடாகவே அதனை முன்னெடுக்கவேண்டும்.

அவற்றைவிடுத்துசோதனைஇடங்கள், சம்பவஇடங்களில் இருந்து ஊடகங்களை அப்புறப்படுத்தவது படையினரின்மனிதஉரிமைமீறல்கள்அதிகரிப்பதற்கு வழியைஏற்படுத்திவிடும். அந்தஇடங்களில்ஊடகங்கள் இருப்பது முக்கியம். களத்தில் ஊடகங்கள் இல்லையெனில் உண்மைகள் மிக இலகுவில் மறைக்கப்பட்டுவிடும்.

ஊடகங்கள்அப்புறப்படுத்தப்பட்டுநடத்தப்பட்ட30 வருட காலப் போரில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களால் பன்னாட்டு அரங்கில் இலங்கை ஏற்கனவே தலைகுனிந்துநிற்கின்றது. சாட்சியங்கள்இன்றிபடையினர் வகைதொகையற்ற மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதற்கு அங்குஊடகங்கள்இல்லாமல்இருந்தமையும் ஒரு பெரும் காரணம் என்பதை மறுக்க முடியாது.

சண்டைக் காலங்களில் யாழ்ப்பாணம் போன்ற சண்டைக்களங்களில்தப்பிப்பிழைத்திருந்தஊடகங்களாலேயே ஒரு சில மனித உரிமை மீறல்களையாவது வெளி உலகுக்குக் கொண்டுவர முடிந்தது என்பது வரலாற்று உண்மை.

இலங்கையில்தற்போதுஏற்பட்டுள்ளசூழலிலும்சிறுபான்மை மக்கள் முக்கியமாக முஸ்லிம்களின் மனித உரிமைகள் மீறப்படுவதற்கான ஆபத்துக் குறித்த கரிசனைஇருக்கும்போது, அத்தகைய குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே எழுந்திருக்கும்போது ஊடகங்களையும் சோதனை இடங்களில் இருந்து அகற்றுவது படையினருக்கு மேலும்சுதந்திரம்வழங்கியதைப்போன்றாகிவிடும்.

அதிலும்அவசரகாலத்தடைச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம்என்பனபடையினருக்குவழங்கியிருக்கக்கூடியவரன்முறையற்றஅதிகாரங்களுக்குமத்தியில் ஊடகங்களையும்சோதனைஇடங்களில்இருந்துஅகற்றுவதுசிறுபான்மைமக்களுக்குஎதிரானஒடுக்குமுறைகள் அதிகரிப்பதற்கு வழியை தீவிரப்படுத்திவிடும். அத்தகையதொரு நிலமை தற்போதைய சூழலை மேலும் தீவிரமாக்கி வன்முறைக்கான பாதையைப் பலப்படுத்திவிடும். எனவே வெளிப்படைத்தன்மையானசோதனைகளும்,கைதுகளும்நீதிவிசாரணைகளும் உறுதிப்படுத்தப்படுவது அவசியம்.

சட்டம், ஒழுங்கு அமைச்சு வலுவாதல் மிக அவசியம்

இந்துமதி

முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவை சட்டம் ஒழுங்கு அமைச்சராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருவதைக் காண முடிகின்றது. தற்போது பாதுகாப்பு அமைச்சுடன் சட்டம் ஒழுங்கு அமைச்சும் அரசதலைவர் வசமே உள்ளது. இந்த அமைச்சுக்கள் ஊடாகவே நாட்டின் பாதுகாப்பையும் ஒழுங்கையும் உறுதி செய்துகொள்ள முடியும் என்பதால் மேற்படி அமைச்சுப் பொறுப்புக்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன.

பொருத்தமானவரா பொன்சேகா?

சட்டம் ஒழுங்கு அமைச்சை சரத் பொன்சேகாவுக்கு வழங்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்டநாள்களாகவேவிடுக்கப்பட்டு வருகின்றது. அவர் இராணுவத் தளபதியாக இருந்த போதே போரை வெல்ல முடிந்தது என்பதால் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் அவரால் நிலை நாட்ட முடியுமெனப் பலரும் நம்பினார்கள். ஆனால் அரச தலைவரின் விருப்பம் வேறாக இருந்தது. பொன்சேகாவுடன் மனக்கசப்பு இருந்ததால் அவரை அமைச்சராக்குவதற்கு அவருக்கு விருப்பம் இல்லாதிருந்தது. தலைமை அமைச்சர் பல தடவைகள் பொன்சோகவுக்கு அமைச்சுப் பதவியை வழங்குமாறு கோரிக்கை விடுத்த போதிலும் அரச தலைவர் அதை முற்றாகவேநிராகரித்துவிட்டார். ஆனால் ராஜபக்ச குடும்பத்தினர் எதிர்த்ததன் காரணமாகவே தாம் பொன்சேகாவுக்கு அந்த அமைச்சுப் பதவியை வழங்கவில்லையென அவர் கூறியது கேலிக்குரியது. அரச தலைவர் இந்த முழு நாட்டுக்கும் தலைவர் என்ற வகையில் தமது அதிகாரங்களைப் பாரபட்சமின்றி நிறைவேற்றக் கூடிய வல்லமை படைத்தவராக இருத்தல் வேண்டும். நாட்டின் பாதுகாப்பும் சட்டம் மற்றும் ஒழுங்கும் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதை அவர் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

பொன்சேகாவிடம் அமைச்சு சென்றால் ராஜபக்சாக்களுக்கு பெரும் பின்னடைவு

நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அமைச்சர்களே பதவி வகிக்க முடியும். தற்போதுள்ள நிலையில் குறித்த எண்ணிக்கைக்கு மேலதிகமாக அமைச்சரொருவரை நியமிக்க முடியாதெனக் கூறப்படுகின்றது இதைக் கருத்தில் கொண்டு பொன்சேகாவுக்கு அமைச்சுப் பதவியை வழங்கும் பொருட்டு அமைச்சரொருவர் தமது அமைச்சுப் பதவியைத் துறப்பதற்கு முன்வந்ததாகச் தெரிகின்றது. ஆனால் அரச தலைவர் கூறியதைப் போன்று சட்டம், ஒழுங்கு அமைச்சு பொன்சேகாவிடம் செல்வதை ராஜபக்சாக்கள் விரும்பமாட்டார்கள் என்பதை உறுதியாகக் கூற முடியும். ஏற்கனவே இரண்டு பகுதியினருக்குமிடையே பகைமையுணர்வு உள்ள நிலையில் பொன்சேகா தம்மைப் பழிவாங்கி விடுவரா என்ற அச்சம் ராஜபக்சாக்களிடம் நிறைவே உள்ளது. மகிந்த மற்றும் அவரது குடும்ப உறுப்பினர் சிலர் மீது மோசடிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இதைவிட வேறு சிற குற்றச்சாட்டுக்களும் தெரிவிக்கப்பட்டன. ஆனால் இவை தொடர்பாக அரசு உரிய நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை. அரசின் பலவீனத்தை நன்குணர்ந்து கொண்ட மகிந்த அரசுக்கு எதிரான கருத்துக்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றார். இந்த அரசு விரைவில் கவிழ்ந்துவிடுமெனக் கூறி வருகின்றார். அண்மையில் நாட்டில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் அரசைக் குறைகூறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பை அவருக்கு வழங்கி விட்டன. முன்னாள் இராணுவ உயரதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கான துணிவையும் அவருக்கு இந்தச் சம்பவம் அளித்து விட்டது. எந்த வகையிலாவது ஆட்சியைக் கைப்பற்றுவது ஒன்றே அவரது நோக்கமாகக் காணப்படுகின்றது.

வடக்கில் பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெறாத போதிலும் உள்ளூர் வன்முறைக் கும்பல்களின் அட்டகாசம் அத்துமீறிச் சென்று கொண்டிருப்பதன் காரணமாக மக்கள் அச்சமடைந்த நிலையில் காணப்படுகின்றனர். கொலை, திருட்டு, கொள்ளை, தாக்குதல்கள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்று தினமும் இடம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது. வடபகுதியில் சட்டமும் ஒழுங்கும் சீரழிந்து காணப்படுவதையே இந்தச் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. உள்ளூர் அரசியல் வாதிகள் கூட இவை தொடர்பாகக் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. ஆனால் அரசு மக்கள் துன்பப்படும்போது அக்கறையின்றி இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஐ.எஸ்ஸின் தாக்குதலுக்கு அரச தலைவரே பொறுப்பு

பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் என்ற வகையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட அவர் பொறுப்பேற்கத்தான் வேண்டும். அதுமட்டுமல்லாது சட்டம், ஒழுங்கு அமைச்சை அவர் தொடர்ந்தும் தமது வசம் வைத்துக்கொண்டிருப்பதை ஏற்க முடியவில்லை. சரத் பொன்சேகா சட்டம், ஒழுங்கு அமைச்சராக நியமிக்கப்பட்டால் ராஜபக்சாக்களுக்கு நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அதைப்போன்று தமிழர்களுக்கும் அவர் நல்லதைச் செல்வாரென எதிர் பார்க்க முடியாது.

கடந்த கால அனுபவங்கள் இதைத் தெளிவாக எடுத்துக்காட்டி விட்டன. ஆகவே பக்கச்சார்பின்றி நேர்மையாகச் செயற்படவேண்டிய ஒருவரை அந்த அமைச்சுப் பதவிக்கு உடனடியாக நியமிப்பதே புத்திசாலித்தனமானது. இதில் தவறு ஏற்படுமானால் நாடு பாதகமான விளைவுகளை எதிர் கொள்வதைத் தடுத்து நிறுத்த முடியாது. ■

> அரசின் பலவீனத்தை நன்குணர்ந்து கொண்ட மகிந்த, அரசுக்கு எதிரான கருத்துக்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றார். இந்த அரசு விரைவில் கவிழ்ந்துவிடுமெனக் கூறி வருகின்றார். அண்மையில் நாட்டில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் அரசைக் குறைகூறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பை அவருக்கு வழங்கி விட்டன.

அமைச்சர் ரிஷாட் வீட்டில் பாதுகாப்பு தரப்பு சோதனை

மன்னார், மே 8

அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் மன்னார் தாராபுரத்திலுள்ள வீட்டை படையினரும் பொலிஸாரும் நேற்று முன்தினம் சோதனையிட்டனர். எனினும் சந்தேகத்துக்கு இடமாக எதுவும் இருக்கவில்லை என்று சோதனையிட்ட தரப்பினர் கூறினர்.

மன்னார் தாராபுரம் அதனை அண்மித்த முஸ்லிம் கிராமமான துருக்கி சிட்டி போன்ற கிராமங்கள் படையினர் மற்றும் பொலிஸார் நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணி தொடக்கம் சுற்றி வளைத்துச் சோதனை நடத்தினர். அங்கு ஒரு வீட்டில் கூரிய கத்திகள், பிஸ்டல் பயிற்சி ரவைகள் மீட்கப்பட்டன என்றும் அங்கிருந்த ஒருவர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாணைக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(த-213)

தாக்குதல்களை மறைக்கவே பல்கலை மாணவர்கள் கைது

பிரபா கணேசன் கூறுகிறார்

கொழும்பு, மே 8

குண்டுத்தாக்குதல் சம்பவங்களை மறக்கடிக்கவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் கைது இடம்பெற்றுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப இது இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் இஸ்லாமிய பயங்கரவாதத்தை அடிப்படையாகவைத்தே இடம்பெற்றுள்ளன. இந்தத் தருணத்தில் சோதனைகள் என்ற போர்வையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் கைது மீண்டும் தமிழர்களுக்கு எதிரான ஒரு நிலைப் பாட்டை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முயற்சி எடுப்பதாகவே தோன்றுகின்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா விடயத்தில் பல பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டும் அரசதலைவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததைப் பார்க்கும் போது கவலையளிக்கின்றது.

(த)

வதந்திகளைப் பரப்பாது பொறுப்போடு செயற்படுக

பாதுகாப்புச் செயலர் கோருகின்றார்

கொழும்பு, மே 7

முழுமையான அர்ப்பணிப்புடன் முப்படையினரும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளார்கள். பாதுகாப்பு தொடர்பில் அசசுறுத்தல் காணப்படுகின்றது அரசு எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என்று வதந்திகளைப் பரப்புவோர் பொறுப்புடன் செயற்படுதல் அவசியம். குறுகிய காலத்துக்குள் தீவிரவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்க முடியும் என்று பாதுகாப்புச் செயலர் சாந்த கோட்டேகொட தெரிவித்தார்.

பாதுகாப்பு செயலகத்தில் நேற்றுமுன்தினம் முப்படை தளபதிகளுக்கிடையில் தேசிய பாதுகாப்பு தொடர்பில் இடம் பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

நாட்டுக்குள் ஊடுருவியுள்ள தீவிரவாதத்தை குறுகிய காலத்துக்குள் முழுமையாக துடைத்தெறிய முடியும். கடந்த மாதம் 21ஆம் திகதி தற்கொலை குண்டுதாரிகளின் தாக்குதலைத் தொடர்ந்து பல சவால்கள் ஏற்பட்டன. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த பாதுகாப்பு தரப்பினர் முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள். அனைவரது ஒத்துழைப்பின் மத்தியில் தற்போது தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் அரசு எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என்று ஒரு தரப்பினர் போலியான வதந்திகளை பரப்பி வருகின்றனர். தேசிய பாதுகாப்புக்கு பங்கம் விளைவித்தலும், பொதுமக்கள் மத்தியில் போலியான செய்திகளை பரப்பி அமைதியற்ற நிலையினை ஏற்படுத்துவதும் தண்டனைக்குரிய செயற்பாடாகும். நெருக்கடி நிலையில் உறுதிப்படுத்தப்படாத கருத்துக்களை பறிமாற்றிக் கொள்வதை முழுமையாக தவிர்த்துக் கொள்வது அவசியம். மக்கள் தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளார்கள். பாடசாலையில் இரண்டாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சவால்களை எதிர்க்கொண்டு முன்னோக்கி செல்ல வேண்டும். பாடசாலைகளினதும், மத தலங்களினதும், பொதுமக்களினதும் பாதுகாப்பு அரசால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து நெருக்கடிகளையும் வெற்றி கொள்ள பொதுமக்கள் தற்போது வழங்குகின்ற ஒத்துழைப்புக்களைத் தொடர்ந்து வழங்க வேண்டும் - என்றார்.

(எ-31)

நினைவுகூரும் வகையில் வெசாக் கூடு அமைக்குக

அமைச்சர் சம்பிக்க வேண்டுகோள்

கொழும்பு, மே 8

உயிர்த்த ஞாயிறு தினத்தில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வெடிப்புக்களில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் முகமாக அனைத்து வீடுகளிலும் வெசாக் தோரணங்களை தொங்க விடுங்கள் என்று பெருநகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக ரணவக்க பொது மக்களிடம் கோரியுள்ளார். பயங்கரவாத செயற்பாடுகளின் காரணமாக வெசாக் வலயம் அமைத்தல் மற்றும் தானசாலைகள் அமைத்தல் குறித்து பாதுகாப்பு பிரிவு மற்றும் மகாநாயக்க தேரர்களால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் தெரிவித்ததாவது:

பிரதான வெசக் வழிபாடுகள் நடத்தப்பட வேண்டியது அவசியமாகும். எனவே நாடளாவிய ரீதியிலுள்ள சகல வீடுகளிலும் வெசாக் தோரணங்களை தொங்கவிடப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் இம்முறை வெசாக் தினத்தை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

(எ-61)



சாவகச்சேரியில் வாள்வெட்டு; மேலும் மூவர் கைது

யாழ்ப்பாணம், மே 8

சாவகச்சேரியில் இடம் பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவர் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி பாலாவி தெற்கில் கடந்த 30 ஆம் திகதி நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். 7 பேர் படுகாயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் முதலாம், இரண்டாம் திகதி களில் சந்தேகத்தில் 6 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கடந்த 4 ஆம் திகதி இருவரையும், நேற்று முன் தினம் ஒருவரையும் கைது செய்தனர்.

இவர்கள் மூவரையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

(ஜ-159,9)

ஆளில்லாத வீடு மீது குழு ஒன்று தாக்குதல்

கொடிகாமம் மே 7

ஆள்களில்லாத வீடுபுகுந்த இனந்தெரியாத கும்பல் வீட்டின் வேலிகளை வெட்டியும் கேற்றை அடித்து நொருக்கிவிட்டும் சென்றுள்ளனர்.

சம்பவம் மந்துவில் கிழக்கில் நேற்றுமுன்தினமிரவு 7 மணியளவில் இடம்பெற்றது. பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் அங்கு செல்ல அந்தக் கும்பல் தப்பியோடிவிட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

(த-159)

முப்படையினரும் இணைந்து நாட்டில் தொடர்ந்து தேடுதல்

கொழும்பு, மே 8

பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் முப்படையினர் இணைந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் சோதனையின் போது, வெடிபொருள்களும் ஆயுதங்களும் கைப்பற்றப்படுகின்றன என்றும் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது, தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த பயிற்சி முகாம் ஒன்று பொலன்னறுவை வெலிகந்த பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று வெலிகந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரால் இந்தப் பயிற்சி முகாம் சுற்றி வளைக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியா அலகல்ல அளுத்கம பகுதியிலிருந்து சொப்பர் விமானங்களுக்கு பயன்படுத்தப்படும் 80க்கும் மேற்பட்ட குண்டுகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. அவை சுமார் 50 வருட பழமையானவை எனவும், அவற்றை சிறப்பு அதிரடிப்படையினர் நேற்று செவ்வாய்க்கிழமை அப்புறப்படுத்தியுள்ளனர் என்றும் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே இந்த குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று அவர் தெரிவத்தார்.

அநுராதபுரம் சேனபுர பகுதியில் பொலிஸார் நடத்திய சோதனை நடவடிக்கையின் போது இராணுவ சீருடைகள் மற்றும் இராணுவ சீருடைகளை ஒத்த உடைகள் பலவும் கைப்பற்றப்பட்டன என்று அநுராதபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அநுராதபுரம் கலாவெவ பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது வயர் சுற்றுக்கள், 243 ஜெலனயிட் குச்சிகளும், 145 டெட்டனேட்டர்களும், வெடிமருந்துகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றுபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(எ-61)

ஒரே இரவில் வீடுகளை உடைத்து கைவரிசை காட்டினர் திருடர்கள்

சிறுப்பிட்டியில் சம்பவம்

அச்சுவேலி, மே 8

சிறுப்பிட்டிப் பகுதியில் இரு வீடுகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச சபை புத்தூர் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் ஒருவரின் வீட்டில் யன்னல் கம்பியைப் பிரித்துக் கொண்டு உள்ளே புகுந்த திருடன் இரண்டு லட்சம் ரூபா பணம் மற்றும் நகைகளைக் களவாடியுள்ளான்.

இரண்டாவதாக தனியார் காப்புறுதி நிறுவன முகாமையாளர் வீட்டில் கதவை உடைத்து உள்ளே புகுந்த திருடன் பணத்தைக் களவெடுத்த பின்னரும் வீட்டில் சல்லடைபோட்டு தேடுதல் நடத்தியுள்ளான். இதன்போது சத்தம் கேட்டு உறக்கத்தில் இருந்தவர்கள் விழித்து எழுந்து அயலவர்களை அழைத்துச் சத்தமிட்டதை அடுத்துத் திருடன் ஓடித் தப்பியதாக கூறப்படுகின்றது.

சிறுப்பிட்டி விஸ்ணு துர்க்கா ஆலயத்துக்கு அண்மையில் முதன்மை வீதியோரத்தில் உள்ள வீடுகள் இரண்டில் இந்தத் திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளன.

வீதிகளில் கண்காணிப்பு கடமையில் பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபட்டிருந்த போதிலும் முதன்மை வீதியோரத்தில் சம்பவம் நடைபெற்றதை அடுத்து பொது மக்கள் திகில் அடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ஜ-11)

ஒன்றுகூடல் நிகழ்வு

ஜே/120 கோண்டாவில் தென்கிழக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

திருமதி லலிதா சிவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் மூத்த விரிவுரையாளருமான வசந்தி அரசரட்ணம் கலந்துகொண்டார்.

ஒன்று கூடல் நிகழ்வின் போது மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட நிறைவையொட்டி கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. (ஜ)

கிராம சக்தி செயற்றிட்டத்தின் கீழ் 3 பேருக்கு வாழ்வாதார உதவிகள்

கொடிகாமம், மே 8

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/433 முள்ளியான் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கிராம சக்தி செயற்றிட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

இதனடிப்படையில் மூன்று பயனாளிகளுக்கு தலா 30 ஆயிரம் ரூபா வீதம் சுழற்சி முறைக் கடன்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வடமராட்சி கிராம சக்தி சங்க அலுவலகத்தில் சங்கத் தலைவர் நி. விமலதாஸ் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முள்ளியான் கிராம அலுவலர் செல்வி. காந்தரூபன், பொருளாதார அபிவிருத்தி அலுவலகர் ச. ஜெகராசா மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர். (ஜ-159)

பெருந்திருவிழா

அளவெட்டி, மே 8
யாழ்ப்பாணம்
சண்டிலிப்பாய் ஆலங்குழாய் சுப்பிரமணிய சுவாமி
ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா
நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், 18 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலயபரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

(ஜ-63)

★★★

சாவகச்சேரி, மே 8
யாழ்ப்பாணம்
சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய பெருந்திருவிழா
நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு
கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும்.
எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு
தீர்த்தத்திரு விழா வும் நடைபெறும்.

(ஜ-9)

★★★

யாழ்ப்பாணம். மே 8
புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழா நாளை
புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 13 நாள்கள் நடைபெறும்.
எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 18 ஆம் திகதி பகல் 11 மணிக்கு தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (த)

மாணவர்களை விடுவிக்குமாறு மைத்திரியிடம் கோரும் அங்கஜன்

கொடிகாமம், மே 8

கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்களை விடுவிக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளேன். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கைதுசெய்யப்பட்டிருக்கும் இருவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இதன் மூலம் பல்கலைக்கழக நீண்டகால பாரம்பரியம் பேணப்படுவதுடன், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படையாமல், சுமுகமாக இடம்பெறுவதற்கும் வழியேற்படுத்த வேண்டும்.

கூடுதலான அரசியல்வாதிகள் மக்கள் நலன் சாராமல் தமது எதிர்கால அரசியல் இருப்புக்களை கருதி அரசியல் பேசுவது இலங்கையின் இன்றைய அரசியல் போக்காக காணப்படுகின்றது.

நான் சரியான பொறிமுறைகளை பின்பற்றி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண விரும்புகின்றேன். படித்த இளையோர் திசைமாறி போகக்கூடாது என்பதில் நீண்டகாலமாகவலியுறுத்தி வருகின்றேன்.

ஆரம்பிக்கப்பட்ட இடம் வேறாக இருந்தாலும் அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முடிந்தமை கவலையளிக்கின்ற விடயமாகவுள்ளது - என்றுள்ளது. (ஜ-159)

வீதியால் சென்ற பெண்ணின் 13 பவுண் தாலிக்கொடி அறுப்பு

யாழ்ப்பாணம், மே 8

வீதியால் சென்ற குடும்பப் பெண்ணின் 13 பவுன் தாலிக் கொடி கொள்ளையர்களால் அறுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் நல்லூர் மகா விஷ்ணு ஆலயத் திருவிழாவுக்குச் சென்று கச்சேரி - நல்லூர் வீதியால் வீடுதிரும்பிய அவரை பின்தொடர்ந்து உந்துருளியில் வந்த இருவர் தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

கொள்ளையர்களால் தாலிக்கொடி இழுத்து அறுக்கப்பட்டதில் கழுத்துப்பகுதியில் படுகாயமடைந்த பெண், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் நல்லூர் - நாவலர் வீதியைச் சேர்ந்த பெண்ணே இவ்வாறு படுகாயமடைந்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஜ-37)

பல்கலை மாணவர்கள் கைதை வன்மையாக கண்டிக்கின்றோம்

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 8

பல்கலைக்கழக மாணவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமையை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச்செயலர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், செயலர் ஆகியோரை இராணுவத்தினர் கைதுசெய்து பொலிஸார் ஊடாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

இராணுவ, பொலிஸ் நடவடிக்கையானது, அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராக ஒடுக்குமுறை நடவடிக்கைகள் மீண்டும் கட்டவிழ்த்து விடப்படுகிறதா? எனும் கேள்வியைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த 40 வருடங்களாக நாட்டு மக்களுக்கு எதிரானதாக நடைமுறையில் இருந்துவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அகற்றப்போவதாகவும் அதற்கு மாற்றான புதிய சட்டமாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவரப் போவதாகவும் கூறிவரும் அரசு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மாணவத் தலைவர்களைத் தடுத்து வைத்திருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

புலிகள் இயக்கத்தின் தலைவரினதும், ஏனையோரதும் பழைய படங்களை வைத்திருந்ததாகக் கூறிக் கைதுசெய்து தடுத்துவைத்திருப்பது அற்பத்தனமான காரணமே அன்றி, பழிவாங்குதலும் அச்சுறுத்தலுமே அடிப்படை நோக்கங்களாகும்.

அரசின் இச் செயலை அனைவரும் இணைந்து கண்டிக்கவேண்டும் என அழைப்புவிடுப்பதுடன், அம் மாணவர்கள் விரைவாக விடுதலை செய்யப்படவேண்டும் எனவும் எமது கட்சி வலியுறுத்துகின்றது என்றுள்ளது. (ஜ)

அசாதரண சூழலால்

நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கை இரண்டு நாள்களாகக் குறைப்பு

யாழ்ப்பாணம்,மே 8

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை கருதி தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இரண்டு நாள்களாகக் குறைக்கப்பட்டுள்ளன.

இன்று 8 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து ஒரு வார காலத்துக்குத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக மாநகர சுகாதாரப் பிரிவால் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இரு நாள்களாக குறைக்கப்பட்டுள்ளன.

இந்த நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கை இன்று புதன்கிழமையும், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையும் யாழ்ப்பாண மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நடைபெறும்.

இன்று ஜே/74 ,ஜே/ 78 ஆகிய கிராம அலுவலகர் பிரிவுகளிலும், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை ஜே/100, ஜே/101 ஆகிய கிராம அலுவலகர் பிரிவுகளிலும் இந்தத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டுநடவடிக்கைகள் இடம்பெறும்.

நுளம்புக் கட்டுப்பாட்டுநடவடிக்கையின் போது மேற்குறித்த கிராம அலுவலகர் பிரிவுகளில் உள்ள குடியிருப்பாளர்களின் சுற்றாடல்கள் சோதனை செய்யப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

(ஜ-17)

படையினரின் சீருடை வைத்திருந்த சந்தேகநபருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, மே 8

இராணுவச் சீருடையை வீட்டில் வைத்திருந்தார் என்று குற்றம் சுமத்தி கைது செய்யப்பட்டவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரையில் விளக்கமறியில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸாரும் படையினரும் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் தனன்களப்பு வீதி தொடக்கம் உதயசூரியன் கிராமம் வரையான பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

வீட்டில் மறைத்து வைக்கப்பட்டதாகத் தெரிவித்து படையினர் பயன்படுத்தும் சீருடை, ரீ சேட், தொப்பி, இராணுவச் சின்னம், பாதுகாப்பு அலுவலகர் பயன்படுத்தும் அடையாள அட்டை ஆகியவை மீட்கப்பட்டன. வீட்டு உரிமையாளர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது இவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஜ-9-131)

உக்கும் கழிவுகளை சேமித்து பயனுள்ளதாக மாற்றுங்கள்

வலி. மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு

வலி. மேற்கு. மே 8

குப்பை கூழங்களையும், சமையலறைக் கழிவுகளையும் ஒருமுகப்படுத்தி அவற்றை உங்களுடைய வீடுகளிலேயே புதையுங்கள்.

அவை உக்கும் கழிவுகளாக இருப்பதால் நீங்கள் நடுகை செய்துள்ள அல்லது நடுகை செய்யவுள்ள கனி தரும் மரங் களுக்கு மிகவும் பயனுள்ளதாக மாறும். எனவே கழிவு களை பயனுடையதாக்கி முழுப் பயனை அடையுங்கள். இவ்வாறு வலி. மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் த.நடேந் திரன் தெரிவித்தார்.

கழிவு முகாமைத்துவம் தொடர்பான சிறப்புச் செயலமர்வு வலி. மேற்கு பிரதேச சபையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :

வடக்கு மாகாணம் 34 உள்ளூராட்சி சபைகளைக் கொண் டது. இங்கு உள்ளூராட்சி சபைக்குட்பட்ட வகையில் வாழும் மக்கள் தங்கள் வீடுகளில் சேரும் உக்கும் கழிவுகளை குழிகளில் சேமித்து அதனை வயல்களுக்கு இடுங்கள். அல் லது பசளைகளைச் சேகரித்து குழிகளில் பயன் தரு மரங் களை நட்டு பயனடையுங்கள்.

இன்று மக்களுக்கு உக்கும் கழிவுகள் தொடர்பான விழிப்பு ணர்வை பரந்தளவில் வழங்கியுள்ளோம். விரைவில் மக்க ளிடத்தில் உக்கும் கழிவுகள் தொடர்பான மாற்றங்களை எதிர்பார்ப்போம். இதனூடாக மனித சமூகத்துக்கு கேடாக மாறி வரும் அசேதன பசளை தொடர்பான பயன்பாடு குறை வடையும். அதன் மூலம் எமது சமுதாயம் முழுமையாக நோய் நொடி இன்றி வாழும் நிலை ஏற்படும் - என்றார். (ஜ-50)

கடந்த நான்கு மாதங்களில் 381 பேர் டெங்கால் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் கடந்த நான்கு மாத காலப்பகுதி யில் மட்டும் 381 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஜனவரியில் 241 பேரும் பெப்ரவரியில் 83 பேரும், மார்ச் மாதத்தில் 37 பேரும், ஏப்ரல் மாதத்தில் 20 பேருமாக மொத் தம் 381 பேர் பாதிக்கப்பட்டனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

டெங்கு நோயின் தாக்கம் ஜனவரியில் அதிகரித்துக் காணப் பட்டாலும் கூட பின்னர் படிப்படியாக தாக்கம் வெகுவாகக் குறைந்துள்ளது. இந்த மாதத்தில் இதன் தாக்கம் மேலும் குறைவடைய வாய்ப்பு உள்ளதாகச் சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர். டெங்கின் தாக்கம் காணப்படும் இடங்களில் தொடர் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன. (ம-17)

வழிப்பறிக் கொள்ளைகள் அதிகரிப்பு பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவும்

யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.மே 8

நாட்டில் உள்ள அசாதாரண சூழ்நிலையை சாதகமாக்கி யாழ்ப்பாணத்தில் வழிப்ப றிக் கொள்ளைகள் நடை பெற்று வருகின்றன. இது தொடர்பில் பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறு யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நல்லூர் பகு தியில் நின்ற இளைஞர்களி டம் ஈருருளியில் வந்த கும் பல்தம்மை பொலிஸார் என அறிமுகம் செய்து, விலைம திப்பு மிக்க அலைபேசி களை சோதனையிட வேண்டும் எனக் கூறி அவற்றைப் பறித்து தப்பி சென்றுள்ளனர். இது தொடர் பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யபட்டது.

அதே போன்று கடந்த 5 ஆம் திகதி திருநெல்வேலி பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த முதியவரை உந்துருளியில் வந்த கும் பல் தம்மை பொலிஸார் என அறிமுகப்படுத்திக்கொண்டு அவரது அலைபேசி மற்றும் பணத்தை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளது. அது தொடர்பிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாவடி உப்புமட பகுதியில் நேற்றுமுன்தினம் வீதியில் சென்ற முதியவரை உந்துரு ளியில் வந்த கும்பல் அடை யாள அட்டையை காண்பிக் குமாறு கோரி பணப் பையை (பேர்ஸ்) பறிமுதல் செய்து கொண்டு தப்பி சென் றுள்ளது.

குறித்த சம்பவங்கள் தொடர் பில் பொலிஸாரிடம் கேட்ட போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

பொலிஸார் மேலும் தெரி வித்ததாவது:

இவ்வாறான வழிப்பறிச் சம் பவங்கள் அதிகரித்து உள் ளன. இதுவரை இரண்டு முறைப்பாடுகள் தமக்கு கிடைக்க பெற்று உள்ளன. பல சம்பவங்கள் நடை பெற்று உள்ளதாக அறியமு டிகிறது. ஆனால் அவை தொடர்பில் முறைப் பாடுகள் கிடைக்கப் பெற வில்லை.

கிடைக்கப்பெற்றமுறைப்பாடு களின் அடிப்படையில் உந் துருளி இலக்கம் ஒன்றை அடையாளம் கண்டு கொண்டோம். குறித்த இலக்கம் தென்பகுதியை சேர்ந்தவரின் பெயரில் காணப்படுகின்றது. இது போலியான இலக்கத் தகடாக இருக்கலாம் என நம்புகின் றோம். குறித்த சம்பவங்கள் தொடர்பிலான விசாரணை களை துரித கதியில் முன்னெ டுத்து வருகின்றோம். குற்றவா ளிகளை மிக விரைவில் கைது செய் வோம் எனத் தெரிவித்த னர். (ஜ-37)

பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்புமாறு அறிவுறுத்தல்

ஒலிபெருக்கியில் வழங்கினர் பொலிஸார்

சாவகச்சேரி, மே 8

பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதால் மாணவர் களை பாடசாலைக்கு அனுப்பி வைக்குமாறு சாவகச்சேரி பொலிஸ் நிலைய முதன்மைப் பரிசோதகர் கே.எம்.ஏ.கே. கோனார ஒலிபெருக்கி மூலம் அறி வித்துள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி இடம் பெற்ற குண்டுவெடிப்பு கார ணமாக நாட்டில் குழப்ப நிலை ஏற்பட்டது.

பொலிஸார் படையினரு டன் இணைந்து பாது காப்பை அனைத்துப் பகுதி யிலும் பலப்படுத்தியுள்ள தால் அச்சமின்றி மாணவர் களைப் பாடசாலைக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸார் அறிவித்து வரு கின்றனர்.

தென்மராட்சி கல்வி வலயத் தில் உள்ள ஆரம் பப் பிரிவுக ளைக் கொண்ட பாடசா லைகள் (வகை 1ii) தவிர்ந்த இடைநிலை உயர்தர வகுப் புகளைக் கொண்ட 32 பாடசாலைகள் நேற்றுமுன் தினம் ஆரம்பமாகின .

பாடசாலைக்கு ஓரளவு மாணவர்கள் வருகை தந் திருந்தனர். பாடசாலைக்கு வருகை தந்திருந்த மாண வர்களின் புத்தகப் பைகள் பொலிஸார் ஆசிரியர் பெற் றோர் பழைய மாணவர் கள் போன்றோரால் சோதிக் கப்பட்டு உட்செல்ல அனும திக்கப்பட்டனர்.

காலை 7.30 மணிக்குப் பாடசாலைகள் ஆரம்பமா னதும் வாசல் கதவு மூடப் பட்டு அங்கு பாடசாலைப் பணியாளர் காவலில் வைக்கப்பட்டார். (ஜ-9)

பனைமரத்தில் இருந்து தவறி வீழ்ந்த சிறுவன்

பனைமரத்தில் ஏறி நுங்கு வெட்டுவதற்கு முயற்சித்த சிறுவன் ஒருவர் தவறி வீழ்ந்து பாதிப்புக்குள்ளா னான்.

இந்தச் சம்பவம் சரசாலை தெற்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த காண்டீபன் டினுசன் (வயது-15) என்ற சிறுவனே பாதிப்புக்குள்ளான நிலை யில் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட் டார். (ஜ-9)

தனியார் கல்வி நிலையங்களில் பாதுகாப்புக் குழு அமைக்க வேண்டும்

யாழ். பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம். மே 8

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங் களில் பாதுகாப்புக் குழுக் கள் உருவாக்கப்பட்டு மாணவர்கள் அனைவரும் சோதனையிடப்பட்ட பின் னரே வகுப்புக்குள் அனும திக்க வேண்டும். இவ்வாறு யாழ்ப்பானப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்ச கர் தினேஷ் கருணாநா யக்க தனியார் கல்வி நிறு வன இயக்குநர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பணத்தில் உள்ள தனியார் கல்வி நிலைய நிர்வாகிகள், பொலிஸார் மற்றும் அதிகாரிகளுக்கி டையிலான கலந்துரையா டல் வடக்கு மாகாண ஆளு நரின் ஏற்பாட்டில் யாழ்ப் பாண மாவட்ட செயல கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்;

அவர் மேலும் தெரிவித்ததா வது;

நாட்டில் இடம்பெற்ற குண் டுவெடிப்பு சம்பவங்களைய

டுத்து தற்போது பாடசாலை கள் பலத்த பாதுகாப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நாம் தனி யார் கல்வி நிறுவனங்க ளின் பாதுகாப்புக்களையும் உறுதிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அந்தவ கையில் இந்தக் கலந்தரை யாடல் ஏற்பாடு செய்யப் பட்டது.

தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள் மாணவர்க ளின் பாதுகாப்பில் அக்கறை காட்டுங்கள். உங்கள் கல்வி நிறுவனத்துக்கு என பாது காப்பு குழு ஒன்றை முத லில் நியமியுங்கள். அத்து டன் மாணவர்களுக்கு என பிரத்தியேகமான அடை யாள அட்டைகளை வழங் குங்கள். மாணவர்கள் வகுப்புக்கு வரும் போது நுழைவாயிலில் வைத்து முழுமையாகச் சோதனை யிடுங்கள். அவர்கள்கொண்டு வரும் பொருள்களில் கூடு தல் அவதானம் செலுத்துங் கள். பின்னர் வகுப்பு நிறை வடையும் போதும் அவர் கள் பயணிக்கும் வாகனங் கள் தொடர்பில் அக்கறை செலுத்துங்கள்.

மாணவர்களின் பாதுகாப்பு தேவைகளுக்கு இராணு வம் மற்றும் பொலிஸாரின் உதவிகள் தேவைப்படின் உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தற்போதைய நாட்டு சூழ்நி லையில் இரவு நேர வகுப் புக்களை முற்றாக தடை செய்யுங்கள். குறிப்பாக மாலை 5.30 மணிக்கு முன்னர் கல்வி நிறுவனங் களை முடித்துக் கொள்ளுங் கள். மாணவர்களின் பாது காப்பில் அனைத்து தரப்பி னரும் அக்கறை கொண்டு செயற்படுங்கள் - என் றார். (ஜ-7,ரி)

மணல் அனுமதியில் பாரபட்சம் உண்டா?

குற்றச்சாட்டை மறுக்கிறார் செயலர்

மன்னார், மே 8

மன்னார் முசலி பகுதியில், தேசிய வீடமைப்பு அதிகார சபை நிதியில் மக்கள் வீடுகள் கட்டுவதற்கு மணல் பெற அனுமதி கோரிச் சென்றால், பிரதேச செயலக அதிகாரி முகம் பார்த்து அனுமதிப் பத்திரம் வழங்குகிறார் என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அந்தக் குற்றச்சாட்டைப் பிரதேச செயலர் மறுக்கிறார்.

முசலிப் பகுதியில் 800க்கும் அதிகமான வீடுகள் இன்னமும் கட்டி முடிக்கப்படாமல் உள்ளன.

இதற்கு முக்கியமான காரணம் மணல் தட்டுப்பாடு என்று முசலிப் பகுதி வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவிக்கின்றார்கள்.

"எமக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான மணல்களைப் பெறுவதற்காக விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கிராமஅலுவலரின் உறுதிப்படுத்தலுடன் பிரதேசசெயலகத்துக்குச் சென்றால் மணல் அனுமதிப்பத்திரத்துக்கான புத்தகம் முடிந்து விட்டதாகக் கூறியவர்கள் சிறிது நேரத்தில் எங்களுக்குப் பின்னால் சென்ற சிலருக்கு அனுமதிப்பத்திரம் வழங்குகின்றார்கள்.

தமக்கு இசைவானவர்களுக்கு மட்டுமே பிரதேச செயலர் மணல் அனுமதிப்பத்திரம் வழங்குகிறார்" என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றார்.

"வீட்டுத்திட்டப் பயனாளிகள் பிடித்துச் செல்லும் டிப்பர் மற்றும் உழவியந்திரங்களுக்கான அனுமதியை பிரதேச செயலகம் நிராகரித்து விடுகிறது. இதற்கான காரணத்தை பிரதேச செயலர் எமக்குத் தெளிவு படுத்த வேண்டும். எங்களுடன் சேர்த்து வீடுகள் கட்ட நிதி வழங்கப்பட்ட மன்னாரில் உள்ள இதர பகுதிகளைச் சேர்ந்தவர்கள் வீடுகள் கட்டி முடிவடையும் நிலை யிலுள்ளனர்.

முசலிப் பகுதியிலுள்ள பல வீடுகள் அத்திபாரம் கட்டப்பட்டு மேற்கொண்டு கட்டட வேலைகள் இன்றிக் காணப்படுகின்றன. முசலிப் பிரதேச செயலர் முகம் பார்த்து சேவை செய்வதை நிறுத்தி அனைத்து மக்களுக்கும் சமனான சேவை வழங்க வேண்டும்" என்று முசலிப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மக்களின் இந்தக் குற்றச்சாட்டுக்களை முசலி பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் மறுக்கிறார். "தனிப்பட்ட நபர்கள் தனிப்பட்ட கோபத்தில் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

வீட்டுத்திட்டப் பயனாளிகள் எவருக்கும் மணல் அனுமதிப்பத்திரம் வழங்காமல் இல்லை. மணல் வியாபார நோக்கத்தில் செயற்படுபவர்களுக்கு அனுமதி வழங்க முடியாது. வியாபார நோக்கத்தில் செயற்படுபவர்கள்தான் இவ்வாறான குற்றச்சாட் டுக்களை முன் வைக்கிறார்கள்" என்று வசந்த குமார் தெரிவித்தார். (த-213)

வவுனியாவில் ஒருவர் விசாரணைக்காக அழைக்கப்பட்டார்

வவுனியா, மே 8

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் நேற்றுக் காலை விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டார் என்று வவுனியா பெரும் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக
இந்துக் கற்கைகள் பீடத்தினது பதில் பீடாதிபதியாகச் சுகந்தினி

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புதிய பீடமான இந்து கற்கைகள் பீடத்தின் பதில் பீடாதிபதியாக கலாநிதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ். தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினரும், தமிழ்ச்சங்கம் சார்ந்த பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தவருமாவார். யாழ். பல்கலைக்கழகத்தில் 11ஆவது பீடமாக இந்து கற்கைகள் பீடம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்து நாகரிகத் துறை, சைவ சித்தாந்தத் துறை, சமஸ்கிருதத் துறை ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்து கற்கைகள் பீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

நாட்டைப் பாதுகாப்பது ஒவ்வொருவரதும் கடமை

மன்னார் பிரிகேடியர் சேனரத் பண்டார தெரிவிப்பு

மன்னார்,மே 8

இந்த நாட்டைப் பாதுகாப்பது பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினரின் பொறுப்பு மட்டுமல்ல ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அதில் பங்குண்டு.

இவ்வாறு மன்னார் தள்ளாடி 54 ஆவது பிரிகேட் பிரிகேடியர் சேனரத் பண்டார தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் பாதுகாப்புத் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :

தற்போது நாட்டில் அசாதாரண நிலமை காணப்படுகிறது. இந்த நிலையில் மன்னாரில் அமைதியும் பாதுகாப்பும் நிலவ வேண்டும் என்பதற்காக மன்னார் பகுதியில் பொலிஸ், இராணுவம் மற்றும் கடற்படையினர் ஆகியோர் ஒன்றிணைந்து பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

போர் முடிவுக்கு வந்து பத்து வருடங்கள் கடந்த பின்பும் மீண்டும் ஒரு துர்ப்பாக்கியமான சம்பவம் ஏற்பட்டுள்ளதால் நாம் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

பாதுகாப்புப் படையினர், பொலிஸார்தான் இந்த நாட்டைப் பாதுகாக்கவேண்டும் என்பது அல்ல. மாறாக இது எமது ஒவ்வொருவரினதும் கடமையாகும் -என்றார். (ஜ-60)

பூநகரி அபிவிருத்தி கலந்துரையாடல்

கிளிநொச்சி, மே 8

பூநகரி பகுதிக்குட்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிராம எழுச்சி அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் கிராமிய வீதிகள், ஆலயங்கள், பாடசாலைகள், மைதானங்கள் உட்பட 38 அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றம், மீளாய்வு தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடலில் பிரதேச செயலர், பிரதேச சபைத் தவிசாளர், உதவிப் பிரதேச செயலர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட்டார அமைப்பாளர்கள் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்ட ஒப்பந்தகாரர்கள் பயனாளிகள் கலந்துகொண்டனர். (த-6)

வானூர்திகளைத் தாக்கும் குண்டுகள் மீட்கப்பட்டன

வவுனியா, மே 8

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் 85 குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. அவை சொப்பர் வானூர்திகளைத் தாக்குவதற்குப் பயன்படுத்தப்படுபவை என்று என்று ஈரப்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் மாலை அலகல்ல அளுத்கம பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் மோப்ப நாய் உதவியுடன் அவை மீட்கப்பட்டுள்ளன. அவை பயன்படுத்த முடியாதவாறு பழுதடைந்துள்ளன. நீதிமன்ற அனுமதியுடன் அந்தப் பகுதியில் நேற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் தேடுதல் நடத்தினர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடந்த 21ஆம் திகதி குண்டு வெடிப்புக்களின் பின்னர் நாட்டின் பல பகுதிகளிலும் வெடிப்பொருள்கள் மீட்கப்பட்டு வருகின்றன. (த-110)

கா.பொ.த உயர்தர புதிய வகுப்புக்கள் நாளை ஆரம்பம்

கிளிநொச்சி, மே 8

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்பில் இணைந்துகொள்ளவுள்ள மாணவர்கள் பெற்றோருடன் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குச் சமூகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

மாணவர்கள் பாடசாலைச் சீருடையில் பெற்றோருடன் உரிய ஆவணங்களைக் கொண்டுவரவேண்டும் என்றும் பாடசாலை அதிபர் மு.இரவீந்திரன் கேட்டுள்ளார். (த)

3 கல்வி நிலையங்களே வரி செலுத்துகின்றன

வவுனியா, மே 8

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களில் மூன்று நிலையங்கள் மட்டுமே பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்டு நகரசபைக்கு வருடாந்தம் தொழில் வரி செலுத்தி வருகின்றன என்று நகரசபையினர் தெரிவிக்கின்றனர்.

தகவல் அறியும் சட்டத்தினூடாக நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட நிலையங்களின் விவரங்களைக் கோரியபோது இந்த விடயம் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் நூற்றுக்கும் மேற்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் இயங்கி வருகின்றன. நகரில் இயங்கும் பல தனியார் கல்வி நிலையங்களை அரச சேவையிலுள்ள ஆசிரியர்களே இயக்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

குண்டுகளின் வெளிக்கோதுகள் மன்னாரில் நேற்று மீட்கப்பட்டன

மன்னார், மே 8

மன்னார் எழுத்தூர் பெரியகமம் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் 6 குண்டுகளின் வெளிக்கோதுகள் மீட்கப்பட் டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் நேற்று சம்பவ இடத்துக்குச் சென்று அவற்றை மீட்டோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காணி ஒன்றில் கொட்டப்பட்டிருந்த குப்பையுடன் அவை மீட்கப்பட்டன.

வெடிப்பொருள்கள் எவையும் மீட்கப் படவில்லை என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-56)

தெய்வீகப்பேருரை

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணம் தென்மராட்சி கொடிகாமம் பதியுறை திருவருள் எருவன் பிள்ளையார் திருக்கோவில் மணவாளக் கோல தின நவோத்திர சகஸ்திர நாமசங்காபிஷேக பெருவிழா நாளை 9ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

நாளை மாலை 4.30 மணிமுதல் சங்காபிஷேக பெருவிழா மகத்துவம் எனும் விடயத்தில் தெய்வீக ஞானத் தமிழருவி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் ஆசிரியரின் தெய்வீகப் பேருரை இடம்பெறும் இந்தப் பேருரையில் கலந்து கொள்ளும் மாணவரிடையே சமய அறிவு வினாக்கள் வினாவி பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ம)

வருடாந்த திருவிழா

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 6 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் 16ஆம் திகதி மாலை 6மணிக்கு சப்பறத் திருவிழாவும் 17ஆம் திகதி காலை 9.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் 18ஆம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 19ஆம் திகதி பிற்பகல் 6 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் 20ஆம் திகதி பிற்பகல் 6 மணிக்கு வைரவர் சந்தியுடன் திருவிழா நிறைவுபெறும்.

இதேசமயம் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை கருதி இம்முறை திருவிழாவை இரவு 7.30 மணிக்கு முன்னர் நடத்தி முடிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ம-17)

க.பொ.த உயர்தர புதிய வகுப்புகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே 8

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மகாஜன கல்லூரியில் 2021 ஆம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான புதிய வகுப்புகள் நாளை வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

குறித்த பாடசாலை மாணவர்களையும், வேறு பாடசாலையில் இருந்து உயர்தரத்துக்கு இந்தப் பாடசாலையில் இணைந்த மாணவர்களையும் அவர்களது பெற்றோருடன் நாளை வருகைதருமாறு அதிபர் அதிபர் ம.மணிசேகரம் அறிவித்தார். (ஜ)

பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,மே 8

அருள்மிரு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயப் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஜ)

முகநூலில் இருந்து படம் தரவிறக்கியே சுண்டிக்குளி பாடசாலைக்கு எச்சரிக்கை

யாரோ திட்டமிட்டுச் செய்துள்ளனர் என்று வாக்குமூலம்

யாழ்ப்பாம், மே 8

தனது முகநூலில் உள்ள ஒளிப்படத்தை எடுத்தே, மிரட்டல் கடிதம் தயாரித்துத் தனது படத்தையும் அதில் பதிவுசெய்து சுண்டிக்குளி பாடசாலைக்கு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பியுள்ளனர். தனக்கும் சம்பவத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று சந்தேகத்தில் கைதானவர் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு நேற்றுமுன்தினம் அனுப்பிவைக்கப்பட்ட பயங்கரவாத அமைப்பின் பெயரிலான மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதிலுள்ள ஒளிப்படத்தில் காணப்பட்டவர் சுன்னாகத்தைச் சேர்ந்தவர். அவரை பொலிஸார் விசாரணைக்கு அழைத்திருந்தனர்.

அதன்போதே யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் அவர் மேற்கண்டவாறு வாக்குமூலம் வழங்கியுள்ளார். "யாரோ விசமிகள் அவ்வாறு செய்துள்ளனர்.

தனக்கும் கடிதத்துக்கும் எதுவித சம்பந்த முமில்லை" என்றும் கூறியுள்ளார். அதன் பின்னர் அவர் விடுவிக்கப்பட் டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞனின் ஒளிப்படத்தை அவரது முக நூலிலிருந்து தரவிறக்கம் செய்து அந்தக் கடிதத்தில் பயன்படுத்தியவர்கள் தொடர் பில் மேலதிக விசாரணைகளைப் பொலி ஸார் ஆரம்பித்துள்ளனர். தேசிய தௌஹீத் ஜமாத்தைச் சேர்ந்த சிலர் ஒருவருடத்துக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து தமது கொள்கைப் பரப்பில் ஈடுபட்டனர் என்ற தகவல் தொடர்பில் விசாரணைகள் எடுக்கப்படுகின்றன என்றும் பொலி ஸார் கூறுகின்றனர். (த-37)

மொழி பெயர்ப்பாளர் திறந்த போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 8

வடக்கு மாகாண மொழி பெயர்ப்பாளர் சேவையின் திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 11,12ஆம் திகதிகளில் இடம்பெறும் என்று மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மொழி பெயர்ப்பாளர் சேவையின் மொழி பெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது கடந்த 27, 28 ஆம் திகதி களில் நடத்துவதற்கு தீர்மா னிக்கப் பட்டது. எனினும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளைக் கருத்தில்கொண்டு பரீட்சையானது பிற்போடப்பட்டிருந்தது

பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டதற்கமைவாக 27ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை 11 ஆம் திகதி சனிக்கிழமையும், 28 ஆம் திகதி நடைபெற விருந்த பரீட்சைகள் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

கைதான மீனவர்களுக்கு 20வரை விளக்கமறியல்

முல்லைத்தீவு, மே 8

முல்லைத்தீவு செம்மலை கடற்பகுதியில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட நான்கு மீனவர்களையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

முல்லைத்தீவு செம்மலை கடற்பரப்பில் வைத்து அவர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர். அவர்களின் படகில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைக்குப் பயன் படுத்தப்படும் வலைகள் மற்றும் உபகரணங்கள் காணப் பட்டன என்றும் படையினர் தெரிவித்தனர்.

அவர்கள் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். திணைக்களத்தினர் நால்வரையும் முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். அதன்போதே விளக்கமறியல் உத்தரவு விடுக்கப்பட்டது. (த-ரி3)

வவுனியாவில் இரு சடலங்கள் நேற்று மீட்பு

வவுனியா, மே 8

வவுனியாவில் வெவ்வேறு இடங்களில் தூக்கில் தொங்கிய நிலையில் இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா ஆச்சிபுரம் முதலாம் ஒழுங்கைப் பகுதியில் நேற்று அதிகாலை இரண்டு பிள்ளைகளின் தாய் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

வவுனியா தரணிக்குளம் பத்தாம் ஒழுங்கையில் உள்ள வீட்டு வளாக மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆணின் சடலம் மீட்கப்பட்டது. அந்த வீட்டில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டார்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி கருணாநிதி ஹரிபிராசாத் விசாரணைகளை மேற்கொண்டார். சடலங்கள் வவுனியா பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணை இடம்பெறுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-222)

தனியார் கல்வி நிலையத்தில் ஈ. கற்றல் முறை அறிமுகம்

கிளிநொச்சி, மே 8

கிளிநொச்சி மலையாளபுரம் பாரதிபுரம் பகுதியில் அமைந்துள்ள விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் இலத்திரனியல் மூலமான கல்வி கற்பிக்கும் அறிமுக நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளரும் கல்வி வளர்ச்சி அறக்கட்டளைத் தலைவருமான மருத்துவர் த.சத்தியமூர்த்தி இதனை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் கல்வி நிலைய ஆசிரியர்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை உறுப்பினர்கள், அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன் நோக்கம் மாணவர்கள் தமது கல்வியை இலகுவான முறையில் கிரகித்து விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதே என்று அந்த நிலையத்தினர் தெரிவித்தனர். (த)

அவசர தேவைகள் ஆராயப்பட்டன

வவுனியா தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட 13 வட்டாரங்களிலும் முன்னுரிமை அடிப்படையில் அடையாளங் காணப்பட்ட தேவைகளை வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யும் கூட்டம் நேற்றுக்காலை நடைபெற்றது. வவுனியா தெற்கு பிரதேச சபை சபையில்தவிசாளர் து.நடராஜசிங்கம்தலைமையில் இது நடைபெற்றது.

பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை அதிகாரிகள், அலுவலர்கள், ஊழியர்கள், பிரதேச சபைக்குட்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். தெரிவு செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் இறுதியில் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. முதன்மை வேலைத் திட்டங்களுக்கான வாக்கெடுப்பும் நடைபெற்றது. (த-110)

எங்கள் நாட்டுத் தலைவர்கள் பொய்யுரைக்க பழகிவிட்டார்கள்

கடுமையாகச் சாடுகிறார் கர்தினால்

கொழும்பு, மே 8

எமது தலைவர்கள் எல்லோரும் பொய்யுரைப்பதற்கு நன்கு பழகிவிட்டார்கள். அவர்கள் பொய்களையே அதிகம் சொல்லுகின்றார்கள். இவ்வாறு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

நீர்கொழும்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை, அந்தப் பகுதிக்கு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சென்றிருந்தார். அங்கு வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் பாதுகாப்புச் சம்பந்தமாக சில கோரிக்கைகளை முன்வைத்தி ருந்தேன். எனது கோரிக்கைகளை நாட்டின் தலைவர்கள் கண்டுகொள்வதாக இல்லை. தற்கொலைத் தாக்குதல் நடந்த பின்னர் நீர்கொழும்புப் பகுதியை முழுமையாகச் சோதனைக்கு உட்படுத்துமாறு கோரியிருந்தேன். நீர்கொழும்பு நகரின் எல்லைகள், நகரப் பகுதிகளை கடுமையாகச் சோதனை செய்யுமாறு கேட்டிருந்தேன்.

அரசின் உயர்மட்டங்களிடமும் இந்த விடயத்தைக் கூறியிருந்தேன். அவர்களிடம் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக கேள்வி எழுப்புகின்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும், நீர்கொழும்பை சோதனைக்கு உட்படுத்திவிட்டோம் என்றுதான் பதில் தந்தார்கள்.

ஆனால் இங்குஏற்பட்டுள்ளநிலைமையைப் பார்க்கும்போது அது பொய்யென்றே தோன்றுகின்றது. இதனைச் சொல்வதற்கே நான் கவலைப்படுகின்றேன். எமது அரசியல் தலைவர்கள் பொய்கூறுவதற்கு நன்றாகவே பழக்கப்பட்டுவிட்டார்கள். அவர்கள் பொய்களைத்தான் சொல்லுகின்றார்கள் - என்றார். (ஒ.5,61)

மரபணுச் சோதனைக்கு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மே 8

ஈஸ்ரர் அன்று கொழும்பில் மூன்று விடுதிகளில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த, மரபணுச் சோதனைகளை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சங்ரிலா விடுதியில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்திய ஸஹ்ரான் காசிம் தொடர்பாக, தற்போது தடுப்புக்காவலில் உள்ள அவரது சகோதரியின் குருதி மாதிரியைப் பயன்படுத்தி, சோதனை நடத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கிங்ஸ்பெரி விடுதியில் தாக்குதல் நடத்திய அப்துல்லா எனப்படும், மொகமட் அசாம் முகமட் முபாரக் தொடர்பான மரபணுப் பரிசோதனையை, அவரது மகளின் குருதி மாதிரியைக் கொண்டு நடத்துமாறும், அரச பகுப்பாய்வாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சினமன் கிராண்ட் விடுதியில் குண்டுத் தாக்குதல் நடத்திய இன்சாப் அகமட் தொடர்பாக, கொழும்பு7, பிளவர் ரெரன்சில் வசிக்கும் அவரது தாயாரின் குருதி மாதிரியைப் பயன்படுத்தி, மரபணுச் சோதனையை நடத்துமாறும், நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஒ.5)

தீவிரவாதிகளுக்கு உதவியோரை பிடிக்க சட்டம் தாமதிப்பது ஏன்?

ரெலோவின் சிறிகாந்தா கேட்கிறார்

யாழ்ப்பாணம், மே 8

சில அடிப்படை மதவாதிகள் மற்றும் மதவெறியர்களின் அக்கிரமங்களுக்கு முஸ்லிம் மக்கள் பலிக்கடாக்கள் ஆக்கப்படக்கூடாது. இஸ்லாமிய அடிப்படைவாதம் விடுத்தி ருக்கும் சவாலுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவியவர்கள் யாராக இருந்தாலும் எந்த அரசியல் நிலையில் இருந்தாலும் அவர்களைச் சுற்றி வளைப்பதில் சட்டத்தின் நீண்டகரம் இனியும் தாமதிக்கக்கூடாது.

இவ்வாறு ரெலோ கட்சியின் செயலர் நாயகமும் மூத்த சட்டத்தரணியுமான ந.சிறிகாந்தா தெரிவித்தார்.

ரெலோ தலைவர் அமரர் சிறிசபாரத்தினம் மற்றும் போராளிகளின் நினைவுசலிக் கூட்டம் யாழ்ப்பாண விழிப்புலனற்றோர் சங்கத்தில் ரெலோவின் உறுப்பினரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான என்.விந்தன் கனகரட்ணத்தின் ஏற்பாட்டில், ரெலோவின் மூத்த உறுப்பினர் ரூ. ரூபன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் உரையாற்றுகையில் சிறிகாந்தா மேலும் தெரிவித்ததாவது:

நீர்கொழும்பு வன்முறையில் அவசரகாலச் சட்டம் உறக்கமா?

நீர்கொழும்புப் பகுதியில் சிறிய தகராறு ஒன்று வன்முறைக்கு வழி அமைத்திருக்கின்றது. முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவெறி சீறி எழுந்து அமைதியை அடித்து நொருக்கிய வேளையில் அவசரகாலச் சட்டவிதிகள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தமை ஏன்?

அடிப்படை வாதத்துக்கு எதிரான நடவடிக்கை திசைதிருப்பமா?

இஸ்லாமிய அடிப்படை வாதத்தைத் துடைத்தெறிவதற்கான போராட்டம் திசைமாறுவதை நாம் மௌனமாகப் பார்த்திருக்கக்கூடாது. இலங்கைத்தீவின் அனைத்து இனங்களும் தமது முழுமையான ஒத்துழைப்பை இந்தப் போராட்டத்துக்குத் தொடர்ந்து வழங்கும் விதத்தில் அவசரகால நிலைமை நடைமுறைப்படுத்தப்படுவதை நாம் அனைவரும் காண்காணிக்க வேண்டும்.

நீதி நிலைநாட்டப்படவேண்டும்

இந்த நிலையில்தான், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உட்பட மூவர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

விரைவில் நீதி நிலை நாட்டப்படவில்லையெனில் அதை சாதிக்க அரசுக்கு அழுத்தம்கொடுக்க நாம் தயங்கப் போவதில்லை - என்றார்.

இந்த நினைவுதினம் கட்சியின் மன்னார் மாவட்ட தலைமை அலுவலகத்திலும் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் தலைமையில் இது இடம்பெற்றது. ரெலோவின் போராளிகளின் பிள்ளைகளுக்கு பாடசாலைப் புத்தகப் பைகள் வழங்கப்பட்டன. (த-ரி1,56)

குப்பைக்குள்ளிருந்து ராணுவச் சீருடைகள் ஹற்றனில் மீட்பு

கொழும்பு, மே 8

ஹட்டன் பேருந்து நிலையத்துக்கு அருகில் டிக்கோயா நகர சபையால் குவிக்கப்பட்ட குப்பைக்குள் இருந்து இராணுவ சீருடைகள் நேற்றுக் காலை 9 மணியளவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

டிக்கோயா நகர சபை கழிவு அகற்றும் ஊழியர்கள் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர். அங்கு வந்த பொலிஸார் குப்பைக்குள் இருந்து இராணுவச் சீருடைகள் தொப்பிகளை மீட்டனர். (ஒ.5)

ஸஹ்ரானின் வீட்டை பொறுப்பேற்றது சி.ஐ.டி

கொழும்பு, மே 8

இலங்கையில் இடம்பெற்ற தொடர் தற்கொலைத் தாக்குதல்களின் சூத்திரதாரி என்று பொலிஸாரால் கூறப்படும் ஸஹ்ரானுக்குச் சொந்தமான, தற்கொலை குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற தெமட்டகொடை, மஹவில கார்டினில் அமைந்துள்ள வீட்டைக் குற்றப்புலனாய்வு பிரிவினர் பொறுப்பேற்றுகொண்டதாக பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர். (ஒ.5)

தற்கொலைத் தாக்குதல்

விசாரணைக் குழுவின் அறிக்கை சபைக்கு

கொழும்பு, மே 8

இலங்கையில் உயிர்த்த ஞாயிறன்று ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு விசாரணைக் குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரச தலைவரின் செயலரிடம் கடிதம் மூலம் கோரவுள்ளதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை நடத்துவதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் மூவரடங்கிய சிறப்பு விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவின் அறிக்கை அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று ஊடகங்கள் மூலம் அறியக்கிடைத்தது. அந்த அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள், என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசுமாரசிங்கவால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதிலளிக்கையிலேயே சபாநாயகர் மேற்கண்டவாறு கூறினார். (ஒ.5)

தொடர் தற்கொலைத் தாக்குதலால் முஸ்லிம் சமூகம் இரட்டிப்பு வேதனை

அக்குறணை பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 8

நாட்டில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களால் தமிழ், சிங்கள சமூகங்கள்படும் வேதனையைவிட இரண்டு மடங்கு வேதனையை முஸ்லிம் சமூகம் அனுபவிக்கின்றது. இவ்வாறு அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் தெரிவித்தார்

அக்குறணை பிரதேச சபையில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் உயிர் நீத்த ஞாயிறு தினத்தில் உயிரிழந்த கிறிஸ்தவ மக்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தும் நிகழ்விலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஆயிரம்ஆண்டுகளுக்குமேலான வரலாற்றைக் கொண்ட முஸ்லிம் சமூகம் மன்னர்களுடைய ஆட்சி அதனைத் தொடர்ந்து வெளிநாட்டவர்களுடைய ஆட்சிக் காலம் முதல் இன்று வரையிலும் அரசுகளுக்கு ஆதரவாகவே இருந்து வந்துள்ளனர். 1987ஆம், 1988ஆம் ஆண்டுகளில் மக்கள் விடுதலை முன்னணியால் முன்னெடுக்கப்பட்ட தீவிரவாத காலகட்டத்தில் கூட அரசு பக்கமே தொடர்ந்து இருந்து வந்துள்ளனர். எத்தனையோ முஸ்லிம் இந்தக் காலகட்டத்தில் பாதுகாப்பு படையினருக்கு தகவல்கள் வழங்கினார்கள் என்ற வகையில் துப்பாக்களுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்கள்.

1990 ஆண்டு காலப் பகுதிகளில் வடக்கில் இருந்து இரண்டு மணித்தியாலயங்களுக்குள் வெளியேற்றப்பட்டோம். முஸ்லிம்கள் பூர்விக இடங்களையும் சகல பொருளாதாரங்களையும் இழந்தனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவுவழங்கவில்லை என்ற காரணத்தால் வெளியேற்றப்பட்டோம். முஸ்லிம் பெயர் தாங்கிகள் தீவிரவாதம் செய்தார்கள் என்ற வகையில் நாம் மிகவும் கவலையடைகின்றோம் - என்றார். (ஒ.5)

வெளிநாட்டுப் புலம்பெயர்வாளர்களை குடியேற்றுவது பற்றித் தீர்மானமில்லை

மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

வவுனியா, மே 8

வெளிநாட்டிலிருந்து புலம்பெயர்ந்தவர்களை குடியேற்றுவது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் பிரியதர்சன தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பன்னாட்டு நிறுவனங்கள், ஐ.சி.ஆர்.சி மற்றும் தூதரகங்களிலிருந்து சில அதிகாரிகள் தொடர்பு கொண்டு இவ்வாறான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்று எங்களிடம் வினவினர். நாங்கள் அவ்வாறான தீர்மானம் எதுவும் நிறைவேற்றவில்லை என்று கூறுகிறோம்.
சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் னஇது தொர்டர்பில் கலந்துரையாடப்பட்டது. எந்தவிதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. நாங்கள் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு என்ற ரீதியில் பொறுப்புணர்வுடனும், பன்னாட்டுச் சட்டங்கள் மற்றும் மனித உரிமைச் சாசனங்களைக் கவனமாகக் கையாள வேண்டியதரப்பினராகஇருக்கின்றோம். இலங்கை பன்னாட்டு அகதிகள் சாசனத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இங்கு வருகை தந்திருக்கின்ற பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் நாட்டவர்கள் மற்றும் கிறிஸ்தவ, சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் அரசியல் ரீதியாகத் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி இலங்கையில் பாதுகாப்புக் கோரியிருப்பவர்களாகவே தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதிலி அந்தஸ்து இங்கே கிடைப்பதற்குரிய வாய்ப்புக்கள் இல்லை.
அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் ஒன்று இங்கே இருப்பதன் காரணமாக அவர்களுக்கு ஏதிலி அந்தஸ்து ஒன்றை மூன்றாம் தரப்பு நாட்டிடம் கோருவதற்குரிய விண்ணப்பத்தை ஐ.நாவினுடைய அலுவலகத்தில் கையளிக்க முடியும். ஐ.நா அதிகாரிகள் பரிசீலித்து தீர்வு வழங்க நடவடிக்கை எடுப்பார்கள். அதுவரைக்கும் பாதுகாப்பை மட்டும் அவர்கள் இந்த நாட்டில் பெற்றுக்கொள்ளலாம். பன்னாட்டுச் சட்ட விதிகளுக்கு அமைய தேசிய அரசு என்ற வகையில் பாதுகாப்பு வழங்குவதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். இதுதான் அவர்களது சட்ட அந்தஸ்து.
அவர்கள் எவ்விதத்திலும் நிலத்தை பெறுவதற்கோ, வேலைவாய்ப்பைப் பெறுவதற்கோ முடியாது. பன்னாட்டுச் சட்டங்களுக்கும் பன்னாட்டு மனித உரிமைச் சாசனங்களுக்கும் மதிப்புக்கொடுக்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு இருக்கிறது - என்றார் இணைப்பாளர்.
ஊடக சந்திப்பில் சட்டத்தரணியும் விசாரணை அதிகாரியுமான ஆர்.எல். வசந்தராஜ்ஜும் உடனிருந்தார். (த)

பாடசாலைகளில்

விளையாட்டுப் பயிற்சிகள் தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, மே 8

பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் விடயங்களுக்கு அப்பாலான செயற்பாடுகள் மற்றும் பாடசாலை நேரத்துக்கு பின்னர் இடம்பெறும் விளையாட்டுப் பயிற்சியை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலர் ஆரம் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.
தற்போதைய பாதுகாப்பு நிலைமையை கவனத்தில் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் கூறினார். இந்த நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் மேலும் விடயங்களை கண்டறிந்த பின்னர் அவை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.
பாடசாலை வளவுக்குள் எந்தவித பாதுகாப்புமற்ற நிலையும் இல்லை. பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். பாடசாலை பாதுகாப்பு தொடர்பில் பாதுகாப்பு பிரிவினரின் உறுதிமொழிக்கு அமைவாகவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
சகல தரப்பினரதும் உடன்பாட்டுக்கு அமைவாகவே நாம் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம். மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றை முழுமைப்படுத்த வேண்டும் அதன் பின்னர் விளையாட்டு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்- என்று அவர் குறிப்பிட்டார். (ஒ.5)

கொச்சிக்கடை தேவாலயம் மீண்டும் வழிபாட்டுக்கு

கொழும்பு, மே 8

ஈஸ்ரர் நாள் அன்று தற்கொலைக் குண்டுதாரிகள் தாக்குதல் நடத்திய கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் நேற்று முதல் வழிபாடுகள் ஆரம்பமாகியுள்ளன.
கடற்படையினர் ஆலய மறுசீரமைப்பு பணிகளை முன்னெடுத்துள்ள நிலையில், ஆலய வழிபாடுகள் ஆரம்பமாகியுள்ளன. இரவு 7 மணிவரை ஆலயம் திறக்கப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் சோதனைக்குப் பின்னர் ஆலயத்துக்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்கள் பெரிய பைகளை எடுத்து வர வேண்டாம் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ.5)

தமிழர்களிடத்தில் ஒற்றுமையில்லை இதுவே எங்களின் பெரிய சாபக்கேடு

இலக்கை எட்டாமைக்கு இதுவே காரணம் என்கிறார் செல்வம் எம்.பி.

வவுனியா, மே 8

போராட்ட காலத்திலும் சரி தற்போதும் சரி ஒற்றுமை இல்லாத நிலமை எங்கள் மத்தியில் நீடித்துக்கொண்டிருக்கிறது. எமது இலக்கை எட்டமுடியாத இக்கட்டு நிலையிலிருக்கிறோம். இது தமிழ் மக்களின் சாபக்கேடு என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.
தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறீ சபாரத்தினத்தின் 33 ஆவது நினைவு தினம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அமெரிக்காவில் முஸ்லிம் தீவிரவாதத் தாக்குதல் மேற்கொண்டதன் பின்னரே எமது விடுதலைப் போராட்டமும் திசைதிருப்பப்பட்டது. இன்று அரசியல் தீர்வைப் பெற்றுகொடுப்பதற்காக ஜனநாயக ரீதியாக நாம் செயற்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய சூழலில் அதையும் மறைக்கின்ற வகையிலான சம்பவங்கள் முஸ்லிம் தீவிரவாதத்தால் அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
நாம் இனியும் ஒற்றுமைப்படவில்லை என்றால் முஸ்லிம் தீவிரவாதத்தால், இலங்கை அரசு எம்மீது அடக்குமுறைச் சூழலை ஏற்படுத்தும். அதற்கு உதாரணமாகவே பல்கலைக்கழக மாணவர்களின் கைதைப் பார்க்கமுடியும். விடுதலைப் போராட்ட அமைப்பின் தலைவரின் படத்தை வைத்திருப்பது சட்டவிரோதமல்ல. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் எந்தவிதிகளிலும் அது சொல்லப்படவில்லை. ஜனநாயக ரீதியாக தமிழ் மக்களின் போராட்டங்களை நசுக்குவதே இந்த அரசின் நோக்கம். எத்தனை வருடங்கள் கழிந்தாலும் அரசின் சிந்தனையில் மாற்றம் வரவில்லை என்பதையே மாணவர்களின் கைது காட்டுகிறது.
இனிமேலாவது ஆளுக்காள் குறை சொல்வதை தவிர்த்துவிட்டு ஒற்றுமையாகச் செயற்படுவதற்கான வழியைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டும். அதற்கு தமிழீழ விடுதலை இயக்கம் என்றும் உறுதுணையாக இருக்கும்.
பாகிஸ்தானிலிருந்து புலம்பெயர்ந்த வர்களை வன்னி மாவட்டத்தில்தங்கவைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அப்படியான முடிவை அரசோ, எம்மைச் சார்ந்தவர்களோ எடுத்தால் அதற்கு எதிராக மக்கள் போராட்டங்களை முன்னெடுப்போம் - என்றார்.
(த-110)

ஹற்றன் தேவாலய மர்மம் விலகியது

சுற்றுலா வந்த இளைஞர்கள் ஒளிப்படம் எடுத்துள்ளார்கள்

கொழும்பு, மே 8

கடந்த மாதம் 7 ஆம் திகதி முஸ்லிம் இளைஞர்கள் ஹட்டன் அந்தோனியார் ஆலயத்துக்கு வந்தது சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அது தொடர்பான மறைகாணிக் காட்சிகளும் வெளியாகியிருந்தன.
இந்த இரண்டு இளைஞர்கள்உள்பட 7 இளைஞர்கள் ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்னிலையா கினர். இந்த இளைஞர்கள் கொழும்பு வெல்லம்பிட்டிய பகுதியை சேர்ந்தவர்கள் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
கொழும்பு பிரதான பள்ளிவாசலில் இருந்து ஜமாத்துக்காக நாட்டில் உள்ள ஒவ்வொரு பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசல்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் இவர்கள் ஹட்டன் பகுதிக்கு வந்தது இதுவே முதல் தடவை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
கடந்த 7 ஆம் திகதி பழம்மை வாய்ந்த ஹட்டன் அந்தோனியார் ஆலயத்தைப் பார்வையிட சென்றபோது ஆலய பூசைக்கான மணி சத்தத்தைக் கேட்ட பிறகு இவர்கள் பயத்தில் சென்றுள்ளதாகவும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
இந்த இளைஞர்கள் பயங்கரவாதத்தோடு எவ்வித தொடர்புகளும் இல்லையெனவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(ஒ.5)

போராட்டங்களை முடக்கவே மாணவர்களின் கைது

சிவசக்தி ஆனந்தன் எம்.பி கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 8

தமிழர்களுக்கான ஜனநாயக போராட்டங்களையும், நிகழ்வுகளையும் முன்னெடுக்காது அவர்களின் பங்குபற்றலை குறைப்பதை பின்னணியாகக் கொண்டே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களது கைது இடம்பெற்றுள்ளது. இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.
பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமைக்கு கண்டனம் தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அண்மைக்காலமாக பல்கலைக்கழக மாணவர்கள் தமிழினத்தின் உரிமைகளுக்காகவும் மற்றும் நீதிக்காகவும் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு போன்ற போராட்டத்தில் இதய சுத்தியுடன் பங்கேற்று வருகின்றார்கள்.
இவ்வாறு மாணவர்கள் இனம் சார்ந்து செயற்படுவதானது தமிழ் மக்களின் ஆணை பெற்றவர்கள் என்று மார் தட்டிக் கொண்டு, அடிப்படைக் கோட்பாடுகளை கைவிட்டு, கொள்கை விலகி, ஆட்சியில் அமர்ந்து அரசியல் சுகபோகத்தை அனுபவித்து வருபவர்களுக்கும் தலையிடியாக இருக்கின்றது.
அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் அவசரகால சட்டத்தினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கைதானது மிகவேச்சத்தன மானதும், கண்டனத்திற்குரியதுமாகும்.
ஆகவேஎந்தவிதவழக்குவிசாரணைகளும் இன்றி அம்மாணவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.
இத்தகைய கைதுகள் ஒருபோதும் நாட்டின் நல்லிணக்கத்துக்கோ சகவாழ்விற்கோ துணைபுரியாது என்பதை அனைவரும் உணர்ந்துகொள்வது அவசியம்.
எனவே அரசு உரிய நடவடிக்கையை மேற்கொண்டு அப்பாவி பல்கலைக்கழக தமிழ் மாணவர்களை தாமதமின்றி விடுதலை செய்யும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றுள்ளது (ஐ)

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையேயுள்ள காசாப் பகுதியில் இருந்து இஸ்ரேலுக்குள் போராளிகள் குழு ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியது. அதற்குப் பதிலடியாகப் பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்தியது. அதில் கொல்லப்பட்ட பாலஸ்தீனர் ஒருவரின் உறவினர்கள் ஓலமிடும் சோகக் காட்சி இது.

4 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமையான கல்லறைகள்

எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டன

கெய்ரோ,மே 8

எகிப்தின் தலைநகர் கெய்ரோவுக்கு அருகே சுமார் 4ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமையான கல்லறைத் தோட்டம் ஒன்றைஅந்தநாட்டுத்தொல்லியல்துறையினர்கண்டுபிடித்தனர். கீசாபீடபூமியின் தெற்குப் பகுதியில் இது அமைந்துள்ளது. அலங்கரிக்கப்பட்ட சவப்பெட்டிகள், சுண்ணாம்புக் கற்களால் செய்யப்பட்ட ஒரே குடும்பத்தின் சிலைகள் மற்றும் விலங்குகள் உருவம் ஆகியவை இதில் காணப்படுகின்றன.

மன்னராட்சியில் முக்கிய பொறுப்புகள் வகித்த பெனுய் கா மற்றும் நிவை ஆகிய இருவரின் கல்லறைகள் உட்படப் பல வேறு காலகட்டங்களில் சாவடைந்தவர்களின் கல்லறைகளும் இதில் இடம்பெற்றுள்ளதாகத் தொல்லியல்துறை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கிலாந்து இளவரசிக்கு ஆண் குழந்தை பிறந்தது

லண்டன்,மே 8

இங்கிலாந்து இளவரசர் ஹாரி மேகன் தம்பதியருக்கு நேற்று ஆண் குழந்தை பிறந்ததாகப்பிரிட்டன்ஊடகங்கள்செய்தி வெளியிட்டன.

ஹொலிவுட்நடிகையானமேகனைஇங்கிலாந்து இளவரசர் சார்லஸ், டயானா தம்பதியரின் இளைய மகன் இளவரசர் ஹாரிகாதலித்துவந்த நிலையில், கடந்த ஆண்டுமேமாதம்19ஆம்திகதிஅவர்கள் இருவரும்திருமணபந்தத்தில்இணைந்தனர்.

இந்த அரச தம்பதியினருக்குக் குழந்தை பிறந்ததைப் பிரிட்டன் மக்கள் பலரும் கொண்டாடினர்.

பிரிட்டனின்அரசகுடும்பத்தினருக்கென்று தனியான ஆதரவு, இரசிகர் பட்டாளம் பிரிட்டனிலும்பிரிட்டனுக்கு,வெளியேயும் இருந்துவருவது குறிப்பிடத்தக்கது.

விடுவிக்கப்பட்டனர் 'ரொய்டர்ஸ்' செய்தியாளர்கள்

நெப்பிட்டோ,மே 8

மியான்மரில் ரோஹிங்கியா முஸ்லிம்கள் மீது அந்த நாட்டுப் பௌத்த பெரும்பான்மையினரும், இராணுவத்தினரும் இணைந்து நிகழ்த்திய ஒடுக்குமுறைகள், வன்முறைகள் குறித்துச்செய்திவெளியிட்டதால், பன்னாட்டு ஊடகமான ரொய்டர்ஸின் செய்தியாளர்கள் இருவரை அரச இரகசியங்களைத்திருடியகுற்றச்சாட்டில் மியன்மார் அரசு கடந்த 500 நாள்களுக்கு மேலாகச் சிறைப்படுத்தியிருந்தது.

தற்போது அவர்கள் இருவரையும் விடுவித்துள்ளது. அந்த நாட்டு அதிபரால்மன்னிப்பளிக்கப்பட்டுவிடுதலை செய்யப்பட்ட 6ஆயிரம் கைதிகளுடனேயே மியன்மாரின் தலைவரான ஆங் சாங் சூகிக்கு வழங்கப்பட்ட அமைதிக்கானவிருதுமற்றும்கனடா நாடு வழங்கியிருந்த சிறப்புக் குடியுரிமை என்பன இந்த இரண்டு செய்தியாளர்களும்விடுதலைசெய்யப்பட்டனர். இந்த இரண்டு செய்தியாளர்களையும்சிறைப்படுத்தியதால்அவரிடமிருந்துதிரும்பப்பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னணி

மியான்மரின்ரக்கூன்மாகாணத்தில் முஸ்லிம்கள்அதிகஅளவில்வசிக்கின்றனர். நீண்டகாலமாகவசித்துவரும் இவர்களுக்குமியன்மார்அரசுகுடியுரிமை வழங்க மறுக்கிறது. அவர்களுக்கும் பௌத்த மதத்தினருக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்படுகிறது. இந்தமோதல்2017ஆம்ஆண்டு ஓகஸ்ட் மாதம் உச்சத்தை எட்டியது. முஸ்லிம்கள்மீதுகொடூரத்தாக்குதல் நடத்தப்பட்டதுடன், அவர்களது வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதில் அந்த நாட்டு இராணுவமும் முஸ்லிம்களுக்கு எதிராகத் தாக்குதலில்ஈடுபட்டது.இதனால்,அங்கிருந்து தப்பிய ரோஹிங்கியா முஸ்லிம்கள் பக்கத்து நாடான பங்களாதேஷில் அகதிகளாகக் குடியேறினர். இந்த நிலையில் ரோஹிங்கிய முஸ்லிம்களுக்கு எதிராக மியான்மரில் நடந்த தாக்குதலையும், அதில் அந்த நாட்டு இராணுவத்தின் பங்கு இருந்ததையும் வெளிக்கொண்டு வந்த ரொய்ட்டர்ஸ் செய்தியாளர்களான வோ லோன், யாவ்தோஒஆகிய இருவருக்கும் மியான்மர் நீதிமன்றம் சிறை தண்டனை விதித்தது. செய்தியாளர்களை விடுதலை செய்யக் கோரிப் பலரும் வலியுறுத்தி வந்த நிலையில் 500 நாள்களுக்குப் பிறகு அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இன்றைய நாள்

மேடம்: சங்கடமான சூழ்நிலை ஏற்படலாம். பொறுமையுடன் செயல்படுவது எதிர்காலத்தில் நன்மை பெற உதவும். தொழில், வியாபார நடைமுறை சீராக கூடுதலாக பணிபுரிவீர்கள். பணச் செலவில் சிக்கனம் கடைப்பிடிப்பீர்கள்.

இடபம்: உங்கள் செயலில் சமயோசிதம் நிறைந்திருக்கும். முக்கிய பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாகும். உபரி பணவருமானம் கிடைக்கும்.

மிதுனம்: சிறு அளவிலான தொந்தரவுகளை எதிர்கொள்ள நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் ஆரவார நடைமுறை தவிர்க்க வேண்டும். பணவரவு குறைந்த அளவில் கிடைக்கும்.

கடகம்: நிலுவைப்பணிகளை நிறைவேற்ற புத்துணர்வுடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரம் செழிக்க தேவையான உதவி கிடைக்கும். பணப் பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு.

சிம்மம்: மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். .தொழில் உற்பத்தி, வியாபார வளர்ச்சிக்கான பணிகள் எளிதாக நிறைவேறும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

கன்னி: செயல்களில் தகுந்த தற்காப்பு வேண்டும். எவருக்கும் தகுதி மீறிய வாக்குறுதி தராதீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குறுக்கீடுகளை சரி செய்வது அவசியம். அளவான பணவரவு கிடைக்கும்.

துலாம்: உங்களின் பிரச்னைகளை பிறரிடம் சொல்ல வேண்டாம். புதிய முயற்சியை பின்னொரு அனுகூல நாளில் துவங்கலாம். தொழில், வியாபார நடைமுறை மந்த கதியில் இயங்கும்.

விருச்சிகம்: நண்பர் ஒருவர் உங்களிடம் உதவி கேட்டு பெறுவார். தொழிலில், உற்பத்தி விற்பனை இஷ்ட தெய்வ அருளால் அதிகரிக்கும். குடும்பத்தின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

தனுசு: அன்றாடபணிகளில்ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். தாராள பணவரவு கிடைத்து மனதில் மகிழ்ச்சி கூடும்.

மகரம்: சிலர் உங்களை ஏளனமாக பேசலாம்; பொறுமையுடன் அவற்றை அலட்சியம் செய்யுங்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு படிப்படியாக நிறைவேறும்.

கும்பம்: சிலர் உங்களுக்கு உதவாத ஆலோசனை சொல்வர். உங்களின் வாழ்வியல் நடைமுறை சீராகும். உற்பத்தி விற்பனையை உயர்த்தலாம்.

மீனம்: உங்களின் தனித்திறமை நண்பர்களிடம் வரவேற்பு பெறும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி பெருமளவில் குறையும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

புதன் பொய்கை

உதயன்

UthayanPrint

மே 08, 2019

@UthayanPrint

கல்வியின் வேர்களோ கசப்பானவை; ஆனால் கனியோ இனிப்பானது.

அரிஸ்டாட்டில்

இராமபுரத்தூர் நிசாந்தன்

பெரியாழ்வார் திருமொழியில் அம்புலிப்பருவம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியங்களும் சிறப்பிடம் பெறுகின்றன என்றால் மிகையில்லை. பெரும்பாலான பக்தி இலக்கியங்கள் தமிழ்மொழியில் எழுந்தமை நாம் அறிந்ததே. நாயன்மார்கள், மற்றும் ஆழ்வார்களால் பாடப்பட்ட பக்தி இலக்கியங்கள் இன்றும் நம் தமிழ் இலக்கியங்களுடன் ஒன்றுபட்டு கலந்து பேணப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், விஷ்ணுவைப் போற்றிப்பாடிய ஆழ்வார்களில் பெரியாழ்வாரும் ஒருவர். கண்ணன் மீது பெரும் விருப்பம் கொண்டு கண்ணனைத் தன் குழந்தையாகக் கருதி, அவ்வாறே தன்னை கண்ணனை வளர்க்கும் தாய் யாசோதையாகப் பாவனை செய்து தாய்மை உணர்வு தன் உள்ளத்தில் பொங்கிப் பெருகிட அந்த உணர்வுகளை பாடல்களாகப் பாடிச் செய்தார்.

அம்புலிப்பருவம் என்பதன்
பொருள் காண்போம்

அம்புலி என்றால் சந்திரன் அல்லது நிலா. கண்ணன் ஆயர் பாடியில் தாய் யசோதையின் அரவணைப்பில் வளர்ந்து வருகின்றான். குறும்புகள் பல செய்வதில் வல்லவனாக விளங்குகியவன் அவன். அப்போது தாய் யசோதை கண்ணனுக்கு வானில் காட்சியளித்த நிலாவைக் காண்பித்து உணவை ஊட்டுகின்றாள். அப்போது நிலாவின் அழகினால் கவரப்பட்ட கண்ணன் தன் கைகளை நீட்டி தன்னுடன் விளையாட வரும்படி சந்திரனை அழைக்கின்றான். இதைக் கண்ணுற்ற யசோதை கண்ணனின் விருப் பத்தினை நிறைவேற்றும் பொருட்டு சந்திரனை கண்ணனுடன் விளையாட வரும்படி கோரிக்கை வைக்கின்றாள்.

என் மகன் கோவிந்தன் கூத்தினை இள மா மதீ
நின் முகம் கண்ணுள ஆகில் நீயிங்கே நோக்கிப் போ
ஆகா அருமை.

கண்ணனுடன் விளையாட
விரைந்து வா மதியே

கண்ணன் புழுதி அளைந்து விளையாடுகின்றான். அப்போது வானில் தோன்றிய சந்திரனைக் கண்ணுற்றான். உடன் தன் பிஞ்சுக் கரங்களை மேலே உயர்த்தி சந்திரனை தன்னருகில் வரும்படி சைகை புரிகின்றான். யசோதை பாடுகின்றாள்,

என் சிறு குட்டன் எனக்கோர் இன்னமுது எம்பிரான்
தன் சிறுக் கைகளால் காட்டிக் காட்டிக் அழைக்கின்றான்
அஞ்சன வண்ணனோடு ஆடல் ஆட உறுதியேல்
மஞ்சில் மறையாதே மாமதீ மகிழ்ந்தோடி வா...

சந்திரனே, என் மகன் சிறியவன், எனக்கு அமுதம் போல் இனிப்பவன்;, அவன் உன்னுடன் விளையாட விருப்பம் கொண்டுள்ளான். கருநிறக் கண்களை உடைய எம் பிரான் கண்ணனோடு விளையாடும் எண்ணம் உனக்கு இருக்குமாயின், மேகத்தில் சென்று மறையாமல் மகிழ்ச்சியோடு இங்கு விரைந்து வந்திடுவாய் என்கின்றாள் யசோதைப் பிராட்டியார்.

தாய் யசோதை கண்ணனுக்கு வானில் காட்சியளித்த நிலாவைக் காண்பித்து உணவை ஊட்டுகின்றாள். நிலாவின் அழகினால் கவரப்பட்ட கண்ணன் தன் கைகளை நீட்டி தன்னுடன் விளையாட வரும்படி சந்திரனை அழைக்கின்றான். இதைக் கண்ணுற்ற யசோதை கண்ணனின் விருப் பத்தினை நிறைவேற்றும் பொருட்டு சந்திரனை கண்ணனுடன் விளையாட வரும்படி கோரிக்கை வைக்கின்றாள். இதுவே அம்புலிப்பருவமாகும்.

இதுவே அம்புலிப்பருவமாகும். வாருங்கள் யசோதையாக பெரியாழ்வார் நிலாவை நோக்கி, கண்ணனிடம் விரைந்து வரும்படி அழைக்கும் காட்சிகளை கண்ணுறுவோம்.

நிலாவே, கோவிந்தன்
அழகைக் கண்டு போவாய்

மாடுகளை ஆளுகின்ற கோவிந்தன், அழகிய நெற்றிச் சுட்டி அசைய, பொன்னாலாகிய சலங்கைகள் ஒலிக்க, தவழ்ந்து சென்று புழுதியை அளைந்து விளையாடு கின்றான். இளமை பொருந்திய சந்திரனே, உன் முகத்தில் கண்கள் உள்ளது எனில் கண்ணனுடைய அத்தகு குறும்புச் செயலை ஒரு முறை வந்து பார்த்து விட்டுப் போவாயாக என அழைக்கின்றாள் யசோதை. பாடல் இது தான்,

தன் முகத்துச் சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்து போய்
பொன்முகக் கிண்கிணி ஆர்ப்பப் புழுதி அளைகின்றான்

சந்திரனே உன் செயல் நன்று அல்ல

கண்ணன் கை அசைத்தும் சந்திரன் வருவதாக இல்லை. இதைப் பார்த்து கவலை கொண்ட தாய் யசோதை, சற்று கோபத்துடன், சந்திரனை நோக்கி, பிரகாசமும், பெருமையும் உடைய சந்திரனே, என் மகன் ஸ்ரீதரன் தன் மழலைச் சொற்களால் உன்னைக் கூவி அழைக்கின்றான். எல்லோரோடும் கலந்திருக்கும் தன்மை கொண்டவனாகிய இக் கண்ணன் கூப்பிடக் கூப்பிட நீ அதை கேளாதவனாய்

போனால் உன்னைச் செவிடன் என்றே எண்ண வேண்டி வரும் என்கின்றாள் யசோதை.

அழகிய வாயில் அமுத ஊறல் தெளிவுறா
மழலை முற்றாத இளஞ் சொல்லால் உன்னை கூவுகின்றான்
குழகன் சிரீதரன் கூவக் கூவ நீ போதியேல்
புழையில ஆகாதே நின் செவி புகர் மாமதீ
ஆம். யசோதை கூறுவதும் ஏற்புடையதே.

சிறு பிள்ளை இவன் என
அலட்சியம் செய்யர்தே

யசோதையின் அழைப்பிற்கு சந்திரன் இயைவதாக இல்லை. இருந்தாலும் யசோதையோ விடுவதாயில்லை.

பாலகன் என்று பரிபவம் செய்யேல் பண்டொரு நாள்
ஆலின் இலை வளர்ந்த சிறுக்கன் அவன் இவன்
மேல் எழப் பாய்ந்து பிடித்துக் கொள்ளும் வெகுளு மேல்
மாலை மதியாதே. மாமதீ மகிழ்ந்தோடி வா

அதாவது, பெருமையுடைய சந்திரனே, இவன் சிறு பிள்ளை எனக் கருதி அலட்சியம் செய்யாதே. பிரளய காலத்தில் ஆலிலையில் கண் வளர்ந்த பெருமாள் இவன். இவனுக்கு கோபம் வந்தால் உன் மீது தாவிப் பாய்ந்து உன்னைப் பிடித்து விடுவான். அதனால் அவன் உருவத்தை வைத்து எடை போடாமல் இந்தக் கண்ணனால் அழைக்கப் பெற்றோமே என பெருமை கொண்டு மகிழ்வுடன் இவனிடம் ஓடி வருவாய் மதியே.

சக்கரம் கொண்டு
தாக்கிடுவான் கண்ணன்

சந்திரனோ யசோதையின் வார்த்தைகளுன்கு கட்டுபடுவ தாயில்லை. இதனால் யசோதை சந்திரன் அச்சம் கொள்ளும் படி உரைக்கின்றாள். குளிர்ச்சியுடைய சந்திரனே, பானையில் உள்ள வெண்ணெய்யை தன் பிஞ்சுக் கை நிறைய அள்ளி உண்டு பெருத்திருக்கின்ற வயிற்றை உடைய எம்பிரான் கண்ணன் உன்னை அழைக்கின்றான். ஆனால் நீ அதை அலட்சியமாக நோக்கினால் இக் கணமே உன் மீது அவன் சக்கரத்தை ஏவி உன் சிரசைக் கொய்து விடுவான் என்பதில் சந்தேகம் இல்லை. நீ உயிரோடு இருக்க விரும்பினால் தாமதியாமல் மகிழ்ச்சியுடன் ஓடி வருவாயாக என வேண்டுகின்றாள் யசோதை. பாடல் இது தான்,

தாழியில் வெண்ணெய் தடங்கை ஆர விழுங்கிய
பேழை வயிற்று எம் பிரான் கண்டாய் உன்னைக் கூவுகின்றான்
ஆழி கொண்டு உன்னை எறியும் ஐயுறவில்லைக் காண்
வாழ உறுதியேல் மா மதீ மகிழ்ந்தோடி வா
அடடா, பாவம் சந்திரன் என்ன தான் செய்திடுவான்.

இவ்வாறு தன் கண்ணனுக்காக சந்திரனை அழைத்திட பல்வேறு வார்த்தைகளை கூறி தாயன்பு கொண்டு பெரியாழ்வார் யசோதை எனும் நிலையிலிருந்து பாடல் பாடிச் செய்தார். இதிலிருந்தே நம் அன்னையர் தம் குழந்தைகளுக்கு நிலாவைக் காண்பித்து நிலாச் சோறு ஊட்டினர். நிலாவும் குழந்தைகளின் தோழனாக மாறி குளிர்ச்சியான ஒளிபரப்பி வான வீதியில் உலா வருகின்றான்.

உன்னதமான சேவையாற்றும் உலக செஞ்சிலுவை சங்கம்!

கு.பாலகிருஸ்ணன்

பன்னாட்டுச் செஞ்சிலுவை சங்கம் என்பது சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஹென்றி டுனான்ட் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட மனிதாபிமான தொண்டு நிறுவனம் ஆகும். ஹென்றி டுனான்ட் என்பவரின் பிறந்த தினமாகிய மே 8ஆம் திகதியை பன்னாட்டுச் செஞ்சிலுவை சங்கத்தின் தினமாக அறிவிக்கப்பட்டது. இது ஏழு கொள்கைகளை அடிப்படையாக உருவாக்கப்பட்டது. மனிதாபிமானம், பாரபட்சமின்மை, சுயாதீனம், ஒருமைப்பாடு, நடுநிலைமை, தொண்டர் சேவை, பன்னாட்டு மயப்படுத்தல் போன்றனவாகும். இன்று ஜெனிவாவை தலைமையகமாக கொண்ட இந்த அமைப்பு 194 நாடுகளில் மனித நேயத்தையும் சுய மதிப்பையும் பாதுகாக்கின்ற ஓர் அமைப்பாக செயற்பட்டு வருகின்றது. சொல்பரினா என்ற இடத்தில் ஏற்பட்ட போர் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட்ட ஹென்றி டுனான்ட் 1962ஆம் ஆண்டில் 'சொல்பரினா நினைவுகள்' என்ற புத்தகத்தை வெளியிட்டு உலகம் முழுவதும் இந்த அமைப்பின் அவசியத்தை உணர்த்தினார். பல்வேறு தொண்டர்களையும் இணைத்து 1863ஆம் ஆண்டு பன்னாட்டுச் செஞ்சிலுவை சங்கத்தை உருவாக்கினார்.

சின்னத்தின் தோற்றம்

இந்த நிறுவனத்தின் சின்னமாக ஹென்றி டுனான்ட் பிறந்த சுவிஸ் நாட்டின் தேசியக் கொடியாகிய சிவப்புப் பின்னணியை கொண்ட வெள்ளை சிலுவையை மாற்றியமைத்து வெள்ளை பின்னணியில் சிவப்பு சின்னத்தை அமைத்து உருவாக்கியதே செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னமாகும். செஞ்சிலுவை சங்கம், பன்னாட்டுச் செஞ்சிலுவை சங்க குழு, பன்னாட்டுச் செஞ்சிலுவை சங்க சம்மேளனம், தேசிய சங்கங்கள் எனச் செயற்பட்டு வருகின்றன. மனிதனால் ஏற்படுத்தப்பட்ட இடருக்கும், இயற்கை இடருக்கும் பாதிக்கப்படும் மனித சமுதாயத்திற்குத் துன்பங்களைத் துடைத்து நலிவுற்றிருக்கும் மக்களுக்கு உடன் நிவாரணமும் மாற்று உதவிகளையும் வழங்கி வருகிறது. செஞ்சிலுவை சங்க குழு, பன்னாட்டுச் செஞ்சிலுவை சங்க சம்மேளனம், தேசிய சங்கங்கள் என செயற்பட்டு வருகின்றன. இவைகளின் உத்தி இடர்களுக்கும் சுகாதார நிலைமைகளிற்கும் பதிலிறுத்தல் மேம்படுத்துவதன் மூலம் இறப்பைக் குறைத்தலும் சொத்துக்களிற்கும் வாழ்வாதாரத்திற்கும் ஏற்படும் சேதங்களை குறைத்தலும் ஆகும். காலநிலை மாற்றத்தின் விளைவுகளிற்கும் பதிலிறுத்தல் மூலம் பாதுகாப்பான ஆரோக்கியமான நடத்தைகளை மேம்படுத்துவதுடன் நோய் அதிகரிப்பதனை குறைத்தல் ஆகும். சமூகம் மற்றும் பொருளாதார கடமைகளில் இளைஞர்களையும் இளம் பெண்களையும் பின்தங்கிய குழுக்களையும் இணைப்பதன் மூலம் அதிகரிக்கப்பட்ட சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தல். இவற்றின் முக்கிய நோக்கம் மனித மதிப்பு, சமமான வாய்ப்புக்கள், நல்லிணக்கம், சகலருக்குமான மனிதாபிமான குரல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

பன்னாட்டுச் செஞ்சிலுவை சங்க குழு

பன்னாட்டுச் செஞ்சிலுவைச்சங்க குழு ஆயுத மோதலினாலும் உள்நாட்டு கலவரங்களினாலும் மற்றும் ஏனைய கலவர நிலைமைகளிலும் மக்களது உயிரையும் கௌரவத்தையும் வழங்கும் ஒரு பாரபட்சமற்ற, நடுநிலைமையாக, சுயாதீனமாக செயற்படும் மனிதாபிமான அமைப்பாகும். ஆயுத மோதலின் போது பன்னாட்டு நிவாரணப்பணிகள், சுகாதார சேவைகள், உயிர்ப்பாதுகாப்பு என்பவற்றில் பங்களிப்பு செய்கின்றது. 1863ஆம் ஆண்டில் செஞ்சிலுவைச் சங்க இயக்கத்தின் தோற்றத்தின் போது நிறுவப்பட்ட பன்னாட்டு மனிதாபிமான சட்டத்தினையும் பன்னாட்டு மனிதாபிமான கொள்கையினையும் மேம்படுத்தி வலுப்படுத்தி



துன்பப்படும் மனிதர்களுக்கு உதவுகின்றது. பன்னாட்டுச் செஞ்சிலுவைக்குழு 1989ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் இயங்கி வருகின்றது.

பன்னாட்டுச் செஞ்சிலுவைச் செம்பிறை சங்கத்தின் சம்மேளனம்

இது தேசிய சங்கங்களின் வலையமைப்பாகும். தேசிய சங்கம் என்பது அந்த நாட்டுக்குரிய செஞ்சிலுவைச்சங்கம் ஆகும். அது ஒவ்வொரு நாட்டினையும் இணைக்கின்றது. இந்த நாடுகளின் இணைப்பே பன்னாட்டுச் செஞ்சிலுவைச் செம்பிறை சங்கத்தின் சம்மேளனம் ஆகும். இதுவே பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் பலம் ஆகும். தேசிய சங்கங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு தேவையுடையோருக்கு உதவுவதற்கும், திறன் அபிவிருத்தி செய்வதற்கும் பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கங்களின் சம்மேளனத்திற்கு மிகப்பலத்தைக் கொடுக்கிறது. உள்ளூர் மட்டத்தில் பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கங்களின் சம்மேளனத்தினால் தேசிய சங்கங்கள் இணைந்திருப்பதால் சமூகத்தினை அடைய இந்த வலையமைப்பு உதவுகின்றது. தேசிய சங்கங்களிற்கு நிவாரண நடவடிக்கைகளுக்கு உதவுதல், ஆலோசனை வழங்குதலும் பிராந்திய அலுவலகத்தின் ஒத்துழைப்பினை ஊக்குவித்தலும் ஆகும். இலங்கை செஞ்சிலுவைச்சங்கமும் இந்த அமைப்புடன் இணைந்து செயற்படும் ஓர் அமைப்பாகும்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 1936ஆம் ஆண்டு இலங்கையில் உருவாகியது. 1972ஆம் ஆண்டு செஞ்சிலுவைச் சங்கம் என உருவாக்கப்பட்டது. இந்தச் சங்கம் இடர் வேளைகளில் நிவாரணமும் சுகாதார பாதுகாப்பு, மக்கள் மத்தியில் மனித விழுமியங்களை மேம்படுத்தல் நல்லதோர் சமூகத்தை கட்டியெழுப்புதல் போன்ற தன்னார்வ மனிதாபிமான சேவைகளை கிளை வலையமைப்பின் மூலம் நாடு முழுவதிலும் வழங்க ஜெனிவா சாசனங்களின் கீழ் இலங்கையில் ஒரு தேசிய சங்கமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கிளை அதிகாரத்தின் கீழ் அடிமட்டம் வரையிலான மனிதாபிமான செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு இலகுவாக அனைத்து மாவட்டங்களிலும் அதாவது 25 மாவட்டங்களிலும் செஞ்சிலுவைச்சங்க பிரிவுகள் அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன. அலகுகள் தான் சமூகத்தின் அடித்தளமாகும். இயற்கை அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட இடர்களின் போது தொண்டர்களை அணிதிரட்டுவதன் மூலம் தொண்டர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்து சமூகத்தில் நெகிழ்திறனைக் கட்டியெழுப்பி அவர்கள் மூலம் அபாயங்கள் ஆபத்துக்களில் இருந்து காக்கும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் அதனது மனித நேய அடிப்படையிலான மனிதாபிமானம், பாராபட்சமின்மை, நடுநிலைமை, சுயாதீனம், ஒருமைப்பாடு, சர்வதேசமயம், தொண்டர் சேவை ஆகிய ஏழு கொள்கைகள் மூலம் வழி நடத்துகின்றது.

கட்டுரையாளர் : தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை

நெஞ்சில் இடம்பிடித்துள்ள அஞ்சலகம் சாவகச்சேரியே

கே.எஸ்.சிவஞானராஜா

பொதுமக்கள் நலன் கருதிய ஒரு ஊடக சமூகமாகத் தன்மைப் பிரகடனப்படுத்தி அளப்பரிய சேவைகளை ஆற்றிவருவதில் வெற்றிக்கண்டுள்ளது சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம்.

ஒரு தபாலகத்தில் தபாலதிபர் வினைத்திறன் மிக்கவராக இருப்பாராயின் அவருடைய சகாக்களும் சாதனையாளர்களாகவே பணிபுரிவார்கள். சாவகச்சேரி தபால் அதிபரும் அவரது சக பதவிநிலை பணியாளர்களும் புதுமை செய்பவர்களாகவே வெற்றி பெறுகிறார்கள்.

ஒவ்வொரு வருடமும் தபாலக வாரத்தில் சாவகச்சேரி தபாலகம் தமது சேவையிலும் போட்டிகளிலும் முதன்மை பெறுவதை ஊடகங்கள் முன்னிலைப்படுத்துவதிலிருந்து அறிய முடிகிறது. இம்முறையும் முத்திரைகள் தொடர்பான விவரமான கண்காட்சியும் மக்கள் மனம் விரும்பிய அஞ்சல்பெட்டி நிறுவியமையும் மற்றும் தபாலகம் சார்ந்த விழிப்புணர்வும் தபாலகப் புறம்சார்ந்த விழிப்புணர்வும் செவ்வனவே அரங்கேறியுள்ளன.

சாவகச்சேரி தபாலகத்துக்கு ஒருமுறை தரிசனம் செய்து உள்ளக நிர்வாக விடயங்களை ஆராய்ந்தபோது தபாலக அதிபர் இன்பராஜ் லம்போட் இன்முகத்துடன் வரவேற்று பொதுமகனாகிய எனக்குப் போதிய விளக்கம் அளித்து, தபாலகப் பொறுப்புக்கள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்ற என்பதுபற்றி தெரிவித்து பொதுமக்கள் எப்படிக் கவனிக்கப்படுகிறார்கள் என்பதையும் அவர்களது தேவைகள் தாமதியாது சீக்கிரம் பூர்த்தி செய்யப்படுவதையும் நேரிலே அவதானிக்கும் படியும் கருணை

கூர்ந்தார். இது எனக்கு அதிசயமாக இருந்தது. காரணம் பெரும்பாலான தபாலகங்களில் மக்களுடனான நல்லுறவு பேணப்படுவதில்லை. மக்கள் அறிய வேண்டிய தகவல்கள் பேணப்படுவதில்லை. உதாரணமாக சாவகச்சேரி தபாலகத்தைப் பற்றி ஒரு மாணவன் தெரிய வேண்டுமாயின் அது எப்போது ஆரம்பிக்கப்பட்டது. அது சொந்தக் கட்டடமா? வாடகைக் கட்டடமா? இதுவரை காலம் இருந்த தபாலக அதிபர்களின் பெயர்ப்பட்டியலும் காலங்களும் நடைபெறும் சேவைகளின் வழிகாட்டுதல்கள், படிவங்கள், வர்த்தகமானிகளின் ஒழுங்கமைப்பு, சம்பந்தப்பட்ட தபாலகத்தின் குறியீட்டு எண், அந்த எண்களைக் கொண்ட புத்தகம் கடமையாற்றுவோரின் பட்டியல், அவரவர் பணியாற்றும் இடங்கள், தபால் பெட்டிகளின் அமைவிடம், அதற்கான எண்கள், இதுவரை காலமும் நடைபெற்ற நிகழ்வுகளின் ஆதாரபூர்வமான பதிவுகள் என யாவும் சொல்லாமலே விளங்கும். படிப்படியாகப் பரப்புரை செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இவற்றை சாவகச்சேரி தபாலக சமூகம் செவ்வனவே ஆற்றியிருக்கின்றது. மேலும் குறைநிறைகளை எவருமே அங்குவைக்கப்பட்டிருக்கும் முறைப் பாட்டுப் பெட்டிக்குள் இடலாம். எழுதலாம். சொல்லலாம். அவை கவனமாகப் பரிசீலிக்கப்படும்.

மேலும் இயற்கைச் சூழல், குடிதண்ணீர் வசதிகள், மலசலகூட வசதிகள், பூமரங்கள், பொதுமக்கள் இருக்கை வசதிகள், விலாசமிடுதலுக்கான மேசை பேனா பசை வசதிகள் எல்லாம் நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன. வேறு என்னதான் வேண்டும்?

கே.எஸ்.சிவஞானராஜா

காலத்தை வென்ற ஈழத்துத் தமிழிசை

நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்" என்ற மகாகவியின் கூற்றுக்குத் தலைசிறந்த எடுத்துக் காட்டாக ஈழத்தின் தமிழிசை அரங்கேற்று விழா அமைந்துள்ளது. இந்த விழா ஈழத்தின் தமிழிசையை உலகத்துக்கு எடுத்தியம்புகிறது.

ஈழத்துப் பூதந்தேவனாரில் இருந்து இற்றைவரை இசைபடக் கவிபுனைந்த ஈழத்துக் கவிராயர்களின் நூறு பாடல்களை மரபுவழிச் செழுமையோடு இசைகூட்டி ஈழத்தின் செந்நெறி இசையாளர்களால் ஒரே நாளில் ஒரே அரங்கில் ஈழத்தின் தமிழிசை என்னும் தனித்துவ அடையாளத்தோடு அரங்கேற்றப்பட்ட வரலாற்றுச் சாதனையாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது.

ஏப்ரல் 21ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் தவநாதன் றொபேட் ஈழத்தின் தமிழிசைக்கு உயிர்ப்புக் கொடுத்திருப்பதையிட்டுக் காலம் அதனைப் பேறாக்கியுள்ளது. கலைகள் அவரைத் தவமாக்கியுள்ளன. அதனால்போலும் அவருக்குத் தவநாதன் என்ற பெயரும் றொபேட் மியூசிக் பேர்ட் ஆகவும் தரமுயர்ந்துள்ளார்.

குரலிசையும் விரலிசையும் றொபேட்டின் பாரம்பரிய சொத்தாகும். கர்நாடக சங்கீதத்தில் கனகச்சிதமான பாக்கியவானாகவும், கல்பித மனோதர்ம பரோபகாரத்தில் ஒரு பாக்கியசாலியாகவும் இன்று உச்சத்தில் சஞ்சரிக்கின்றார்.

இரண்டு வருட உழைப்பு

இரண்டு வருடங்களுக்கு மேலாக ஈழத்துக் கவிராயர்களின் உருப்படிகளுக்குப் பொருள்தேடி, இசையூட்டி, ஸ்வரப்படுத்தி, காலப்பிரமாணமாக்கி, பிரயோகித்து, பதின்மரின் மிடற்றிசையில் குராலாக்கி, விரலிசை யாளர்களுடன் அழகூட்டி, மெருகூட்டி, அரங்கேற்றமாய், வலுவூட்டி இலங்கை வேந்தன் கல்லூரியில் கடந்த மாதம் 21ஆம் திகதி வரலாறாகச் சாதித்து ஆற்றுகையுபகாரப்படுத்தியமை ஒரு சாதனையாகும்.

குரலிசைக் கலைஞர்கள் பத்துப்பேர்களும், துணை இசைக் கலைஞர்கள் இருபத்தாறுபேர்களும் குருவாக ஒப்பேற்றி அரங்கேற்றிய முதுநிலை இசை விரிவுரையாளர் தவநாதன் றொபேட்டும் இந்த மண்ணினால் போற்றப்பட வேண்டியவர்கள்.

சுவாமி விபுலானந்தர், ஆறுமுகநாவலர், யோகர் சுவாமிகள், விநாசித்தம்பிப்புலவர், வீரமணி ஐயர், கல்லடி வேலுப்பிள்ளை, சோமசுந்தரப்புலவர், கிருஷ்ணபிள்ளை, மகாகவி உருத்திரமூர்த்தி, நீலவாணன், முருகையன், சொக்கன், சிவகுருநாதன், ஏரம்பமூர்த்தி, திலகநாயகம் போல், பாலசிங்கம், சிற்பி சரவணன், கணபதிப்பிள்ளை, முழக்கம் மருகப்பா, வே.கந்தையா, மூளாய் தவம், அகத்தியர் அடிகள், வண.நீ.மரிய சேவியர் அடிகள், சோ.பத்மநாதன், செ.சிவசுப்பிரமணியம், அகளங்கன், பொ.ஸ்ரீ.வாமதேவன், ப.சின்னராசா, மா.சிதம்பரநாதன், எதிர்வீரசிங்கம், மயில்வாகனம், மோகனா, மணிடேகலாதேவி, வசாவிளான் தவமைந்தன் ஆகிய 34 கவிராயர்களின் இயலழகினை இசையழகால் அமுதூட்டி, அழகாக்கி, தேன்கலந்து, ஊன் பெருக்கி, உதிரமாக்கி, இந்த மண்ணில் பதியவைத்து, பாடவைத்து, ஈழத்து இசை வரலாற்றில் புதுவிதி சமைத்த தேசியக் கலைஞன் தவநாதன் றொபேட் ஆவார். உலகின் முதலிசை தமிழிசை உயிரிசையே எங்கள் உயிரிசையென, யாழ்ப்பாணம் குரலிசை நுண்கலைகளின் தாயக இயக்குநர் தவநாதன் **றொபேட். ஈழத்தமிழிசை** ஆக்குநராக, பயிற்சியாளராக, நெறியாள்கையாளராக, இயல் இசைவாணராக, கல்பித மனோதர்ம உபகாரியாக, மூலாதார மூர்த்தியாக வரம் பெறுகின்றார். சமயச் சார்பினூடாகப் பல சமூகச் செய்திகளை றொபேர்ட் எமக்குப் பதிவிடுகிறார்.

பாடல்களின் சிறப்பு

நூறு பாடல்களுக்குள்ளும் தவத்திரு யோகர் சுவாமிகளின் பாடல்கள் நெஞ்சகத்தில் நீடு வாழ்வனவாய் அமைந்துள்ளன.

வீடுநமக் கெப்போதும் சொந்தமென்றே
வீணாசைப்படுவதெல்லாம் பந்தமென்றே
கூடுவிட்டுயிர்போ(கு)முன் கும்பிட்டுக் கொண்டே
குழைந்து குழைந்து நின்றாடு மயிலே
ஆடு மயிலே பணிந்தாடுமயிலே
ஆண்டவனைக் கண்டு தெளிந்தாடுமயிலே
எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணிக்கொண்டே
இரந்திரந்து ஐந்தெழுத்தைப் பன்னிக்கொண்டே
ஒளவியம் பெறாமை கோபம் அகற்றிக் கொண்டே,
ஆண்டவனைக் கண்டு தெளிந்தாடுமயிலே

மேற்படிப் பாடல் 64ஆவது பாடலாக இசையழகு மேன்மையுற ஹம்சாநந்தி இராகம் றொபேட்டுக்கு வாலாயமாயிற்று. யோகரின் ஏழு பாடல்களும் பிரம்மாதம். அவர் தவமுனிவர் அல்லவா. ஆன்மிக வாசனை உடலெங்கும் பரவுகின்றன.

மொத்தம் 21 இசை நிகழ்வுகளும் மேடையில் கொலுவாகிய தமிழன்னைக்குப் பதக்கங்களாகச் சூட்டப்பட்டன. ஒவ்வொரு பதக்கத்துள்ளும் இரத்தினங்கள் இசையோடு பேறாகின்றன. இயலிசை வாரிதி வீரமணிஜயா கீரவாணியாகிறார்.

வீரமணியின் கற்பனையோ அபாரம்! அற்புதம். அருட்கவி.சீ.விநாசித்தம்பிப்புலவரின் 12 உருப்படிகள் வசீகாரம் செய்து வரலாறு படைக்கின்றன.

கவிஞர் சோ.பத்மநாதன் இலக்கண இலக்கிய நயம் மிக்க பாடல்கள் ஹரிகாம் போதியாகி, மாயாமாளவ கௌளையில் மிதந்து, சிந்தும் பைரவியோடு சல்லாபம் புரிந்தன.

வசாவிளான் தவமைந்தனின் இயலிசை அழகுடன் தேன் சிந்தும் பாடல்கள் இருபத்துநான்கும் இசையழகு ஊட்டிய தொண்ணூறு பாடல்களும் இராத பாவ லய கல்பிதவாலாயம் மிக்கவையாகும்.

ஒவ்வொரு பாடல்களையும் தேடுவதும், இனங்காண்பதும், இராகமாக்கி ஸ்வரலயப்படுத்துவதும், சிட்சைப்படுத்துவதும், சித்திகரமாக அரங்கேற்றுவதும், இரகசியப் பெருமக்களிடையே சோராமல் கொள்ளாமல் கொண்டு சேர்ப்பதும் எல்லாவற்றுக்கும் மேலாக அங்கீகாரம் பெறுவதும், ஆசீர்வாதம் பெறுமாறு சிரமேற் கைகூப்புவதும் இலேசான காரியங்களல்ல! இறையருளின்றி ஏதுமாகாது. அவனன்றி ஓரணுவும் அசையாது.

வர்ணம், மத்திமகால சௌக்ககாலக் கீர்த்தனைகள், இராகம் தானம் பல்லவி, பதம், தில்லானா, இராகமாலிகை, பாமரஜனகானம், துக்கடா, மெல்லிசை,பக்தி, மங்களம் என இலங்கை வேந்தன் மண்டபம் இசையால் நனைந்து குளிர்ந்தது.

றொபேட் என்ற நாமம், சீடர்களாலும் விருந்தினர்களாலும் இரசிகப் பெருமக்களாலும் மந்திரமாக உச்சரிக்கப்பட்டது. சித்திரைச் சிறுமாரியில் முத்திரை பதித்த இசைமாரி இதுவாகும்.

முதன்மை விருந்தினராக முன்னாள் இசை விரிவுரையாளர் சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீ வாமதேவன், சிறப்பு பிருந்தினராக வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் அழகியற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலைஞர் வேல் ஆனந்தன், ஆசி வழங்கிச் சிறப்பித்த நல்லை ஆதீன குரு முதல்வரான ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திருமறைக் கலாமன்ற நிறுவுநர் கலைத்தூது வணக்கத்துக்குரிய நீ.மரிய சேவியர் அடிகள், தென்கயிலை ஆதீனம், குருமுதல்வர் அகத்தியர் அடிகள் ஆகியோர் அரங்கேற்ற விழாவுக்கு ஆசீர்வாதமளித்து தவப்பேறளித்தனர்.

இன்னும் பல தேடல்களுக்காய் இலங்கைவேந்தன் கல்லூரி ஈழத்துத் தமிழிசைக்குத் தன்னை அர்ப்பணக்கும் என **நம்பலாம்.**

தமிழ் மொழியியலில் குறிப்பாக இலங்கைத் தமிழ்மொழி ஆய்வுகள், இந்து பண்பாட்டு ஆய்வுகள், நாட்டாரியல் ஆய்வுகள் மற்றும் ஆங்கில தமிழ் மொழிக் கற்பித்தல் என மொழியியலின் பல்வேறு பிரிவுகளிலும் ஆய்வுப் பணியை மேற்கொண்ட பேராசிரியர் கிறிஸ்தவ நாகரிகத்துறை, இஸ்லாமிய நாகரிகத்துறை மற்றும் தமிழ்த் துறைகளின் வளர்ச்சியில் தமது பங்களிப்பை வழங்கினார் என்பது வரலாற்றுப் பதிவு.

கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன்

யாழ்ப்பாணத் தமிழை ஆங்கில உலகுக்கு உணர்த்தியவர் பேராசிரியர் சுசீந்திரராஜா!

உலர் அறியாத புலமையாளர் உலகறிந்த மொழியியலாளர்' என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சுவாமிநாதன் சுசீந்திரராஜாவைக் குறிப்பிட்டு 1999ஆம் ஆண்டில் பேராசிரியர் சிவச்சந்திரன் பத்திரிகை ஒன்றில் எழுதியிருந்தார். ஆம். திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில முன்னாள் அதிபர் மயிலிட்டி சுவாமிநாதனின் ஒன்பது பிள்ளைகளில் ஏழாவது பிள்ளையான சுசீந்திரராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறையின் முதல் தலைவராகவும், பேராசிரியராகவும், சிரேஸ்ர பேராசிரியராகவும் இருந்து ஓய்வு நிலை தகைசார் பேராசிரியராகவும் பெருமைபெற்றவர்.

அண்மையில் தனது 85 ஆவது வயதில் அவர் காலமானார். அவரது இறப்பு மொழியியல் அன்பர்களுக்கு ஒரு துயரச் செய்தியே.

இளமையில் புலமை

இளமையிலே தந்தையாரின் கல்விச் சூழல் காரணமாகத் தமிழோடும் சைவ சமயத்தோடும் இரண்டறக் கலந்த புலமைச் சூழல் அவருக்கு வாய்த்தது. சைவா சிரிய கலாசாலை உப அதிபர் பொ. கைலாசபதி மற்றும் பண்டிதமணி கணபதிப் பிள்ளை ஆகியோரின் புலமை நுட்பங்களை சிறு வயதில் உள்வாங்கிய பேராசிரியர், 'பொ. கைலாசபதியின் சிந்தனைகள்' எனும் நூலை (ஆ. சபாரத்தினத்துடன் இணைந்து) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில் தொகுத்து நூலாக வெளியிட்டதோடு பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் இலக்கியப் பணி பற்றி ஆராய்ந்து 'ஈழத்துப் பண்டிதமணி' எனும் நூலையும் ஆக்கியிருந்தார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் 'எம். ஏ.' பட்டம் பெற்ற பேராசிரியர் ஆரம்பத்தில் தினகரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும், யாழ்ப்பாணக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும் சிறிது காலம் பணியாற்றியிருந்தார். தொடர்ந்து பட்டப் பின்படிப்பை மொழியியலில் கலாநிதிப் பட்டப் படிப்பை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார். பிரபல தமிழ் அறிஞர்களான பேராசிரியர்கள் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் மு. வரதராசன், எம். சண்முகம்பிள்ளை, எஸ். அகஸ்தியலிங்கம், எஸ். வி. சண்முகம் ஆகியோரிடம் கல்வி கற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல் கலாநிதியாகப் பெருமை கொண்ட பேராசிரியர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் களனியாப் பல்கலைக்கழகத்திலும் மொழியியல் விரிவுரையாளராகப் பணியாற்றிச் சிரேஸ்ர விரிவுரையாளராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்

தில் 1981ஆம் ஆண்டு முதல் பணியாற்றத் தொடங்கினார்.

'யாழ்ப்பாணத் தமிழ்' பற்றிய தமது ஆய்வை லண்டன் எடின்பரோப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து மேற்கொண்டு அதை நூலாக்கி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடாகக் கொண்டு வந்தார்.

பிறமொழி பேசுவோருக்கும் தமிழ் அளித்தார்

களனியாப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டபிள்யூ. எஸ். கருணாதிலக மற்றும் அமெரிக்க கோர்னெல் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜேம்ஸ். டபிள்யூ. கெயர் ஆகியோருடன் இணைந்து 'பேச்சுத்தமிழுக்கு ஓர் அறிமுகம்' எனும் நூலையும், பேராசிரியர் கருணாதிலகவுடனும் இணைந்து 'இலக்கியத் தமிழுக்கான ஓர் அறிமுகம்' எனும் நூலையும்

எழுதி வெளியிட்டு தமிழ்க் கல்வியைப் பிறமொழி பேசுவோரும் கற்பதற்கு வழி கோலினார். தஞ்சாவூர் பல்கலைக்கழக 'தமிழ் சொற்களஞ்சியத்தின்' ஈழத்துத் தமிழ்ச் சொற்களின் பகுதிக்குப் பொறுப்பாக இருந்து பணியாற்றியதோடு இந்திய மொழியியல் சங்கத்தின் உறுப்பினராகவும் கேரளா திராவிட மொழியியல் கழகத்தின் வாழ்நாள் உறுப்பினராகவும் திகழ்ந்தார். ரஷ்யத் தமிழறிஞர் அந்தனோவ், இலண்டன் தமிழறிஞர் ஆகியோரின் பாராட்டுக்களைப் பெற்ற பேராசிரியரின் மொழியியல் ஆய்வுகள் ஈழத்துத் தமிழியலுக்கு ஒரு புதிய பரிமாணம் எனலாம். அதனால் உலகப் பேரேடுகளான அமெரிக்க தம் வரலாற்று நூலிலும் ("றிசேர்ச் போர்ட் ஒவ் அட்வைசெர்ஸ் 2000") எனும் கேம்பிறிட்ஜ் பன்னாட்டுப் புலமையாளர் தம் வரலாற்று அகராதியிலும் பேராசிரியரின் பெயர் பதிவுபெற்றுள்ளமை ஈழத்தவர்களுக்கு ஒரு பெருமையான செய்தியாகும்.

பல்வேறு பிரிவுகளில் ஆய்வுகள்

தமிழ் மொழியியலில் குறிப்பாக இலங்கைத் தமிழ்மொழி ஆய்வுகள், இந்து பண்பாட்டு ஆய்வுகள், நாட்டாரியல் ஆய்வுகள் மற்றும் ஆங்கில தமிழ் மொழிக் கற்பித்தல் என மொழியியலின் பல்வேறு பிரிவுகளிலும் ஆய்வுப் பணியை மேற்கொண்ட பேராசிரியர் கிறிஸ்தவ நாகரிகத் துறை, இஸ்லாமிய நாகரிகத்துறை மற்றும் தமிழ்த் துறைகளின் வளர்ச்சியில் தமது பங்களிப்பை வழங்கினார் என்பது வரலாற்றுப் பதிவு ஆகும். மொழியியலோடு ஆங்கில மொழி மற்றும் இலக்கியம் ஆகிய துறைகளின் வளர்ச்சியிலும் பேராசிரியரின் பங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். மொழியின் எல்லைகள் பொது மனிதரின் வெளிப்பாட்டிலிருந்து வகுக்கப் படுகிறது. ஆயினும் மொழியின் தரத்தைப் பேணுவதற்கு அறிஞர்களும், இலக்கண வித்தகர்களும் தங்களது அளவுகோல்களையும் இறுக்கமாகக் கடைப்பிடித்தனர் என்பதே மொழிக் கற்கையின் விநோதம்.

யாழ்ப்பாணத் தமிழை ஆங்கில உலகுக்கு உணர்த்தியவர்

பாமரர் அறியாத புலமையாளராகத் தமிழ் மொழியியல் ஆய்வாளர் பேராசிரியர் சுசீந்திரராஜா விளங்கினாலும் யாழ்ப்பாணத்தமிழை ஆங்கில உலகுக்கு உணர்த்தியவராக என்றும் போற்றப்படும் தகைமைசார் பெரியார் அவரே. மலையாளம், சமஸ்கிருதம் மற்றும் ஆங்கில மொழிகளில் பாண்டித்தியம் மிக்கவராக விளங்கிய பேராசிரியர் இந்திய, ஆஸ்திரேலிய பல்கலைக்கழகக் கலாநிதிப்பட்ட ஆய்வேடுகளின் மதிப்பீட்டாளராகவும் இலங்கை அரசின் நூலாக்கக் குழுவின் உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு சங்கங்களின் அங்கத்தவராக விளங்கி நேர்மையுடனும், ஒழுங்கமைப்புகளைப் பேணும் சீலராகவும் வாழ்ந்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழிகாட்டிச் சென்றமை பாராட்டுதற்குரியதாகும்.

உயர்ந்த ஆய்வு, கொள்கையில் இறுக்கம், தமிழ், சைவம் என்பவற்றின் பண்பாட்டம்சங்களில் ஆய்வு நுணுக்கம் எனப் பல விடயங்களில் பேராசிரியர் சுசீந்திர ராஜா பலராலும் போற்றப்பட்டமை அறிவுலகம் அறிந்ததே.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் களனியாப் பல்கலைக்கழகம் ஆகியன பேராசிரியரைப் பெருமையான இலக்கிய கலாநிதியாகப் போற்றியமை பாராட்டுக்குரியதாகும். பேராசிரியர் ஓய்வுகாலத்தில் எழுதிய 'தமிழியல் சிந்தனைத் துளிகள்' பாகம் 1, பாகம் 2 என்பன சேமமடு புத்தக வெளியீடுகளாக வந்தன.

அத்துடன் இன்னொரு நூலான 'இலங்கை இந்தியத் தமிழ் வழக்குகளில் சொற்களின் பயன்பாடு' என்பது கலாநிதி க. இரகுவரனின் தொகுப்பாக இந்து கலாசாரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

குமரன் புத்தக இல்லத்தின் வெளியீடாக வந்த 'கல்விசார் தொடர்புகள், நினைவுகள், சிந்தனைகள்' எனும் வரலாற்றுப் பதிவு நூல் பேராசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தை எதில்காலச் சந்ததியினர் அறிய வழிகோலும் என்றால் மிகையாகாது.

பாகிஸ்தானிய...

பாகிஸ்தானில் இருந்து 6 ஆண்டுகளுக்கு முன்னர் அகதிகளாக வந்த பாகிஸ்தானியர்கள் நீர்கொழும்பில் தங்கியிருந்தனர். கடந்த 21ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்பை அடுத்து அவர்கள் அச்சத்தால் அங்கிருந்து வெளியேறினர். அவர்களைப் பொறுப்பேற்கப் பள்ளிவாசல்கள் மறுத்த நிலையில் இறுதியில் ஓர் அமைப்பு பொறுப்பேற்க முன் வந்தது. எனினும் அங்கு போதிய பாதுகாப்பு இல்லாததால் அவர்களை வவுனியாவுக்கு அழைத்துவருவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. வவுனியாவுக்கு அழைத்துவரப்படும் அவர்கள் வவுனியா செட்டிக்குளம் மெனிக்பாம், பூந்தோட்டம் ஆகிய இடங்களில் தங்கவைக்கப்படவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகள், அவர்கள் எப்போது அழைத்துவரப்படுவார்கள் என்பது தொடர்பில் ஆராய்வதற்கு அமைச்சர் திலக் மாரப்பன இன்று வவுனியா வருகிறார். இதேவேளை பாகிஸ்தானியர்களில் ஒரு தொகுதியினர் யாழ்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டு தங்க வைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பில் தற்போது அங்கிலிக்கன் திருச்சபையின் பாதுகாப்பில் உள்ள அவர்களை யாழ்ப்பாணத்திலுள்ள அங்கிலிக்கன் திருச்சபையே பொறுப்பேற்கவுள்ளது என்ற தகவல்களும் கிடைத்துள்ளன.

அது தொடர்பில் அந்தச் திருச்சபையின் குரு முதல்வர் சாமுவேல் பொன்னையாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

ஏதிலிகள் எப்போது அழைத்துவரப்படப்போகின்றார்கள் என்பது பற்றி இதுவரை எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்க வைப்பதற்கான கலந்துரையாடல்கள் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களை எங்கு தங்க வைப்பது என்பது இன்னும் முடிவாகவில்லை. நாம் ஏதிலிகளாக மாற்றப்பட்ட போது எமக்கு வலித்தது போன்றே அவர்களுக்கும் இருக்கும். எனவே அந்த வலியைப் புரிந்து கொண்டவர்களாக நாங்கள் அவர்களை அரவணைக்க வேண்டும் என்று அவர் உதயனுக்குத் தெரிவித்தார். (எ-21)

அலுவலவில்...

தப் பகுதியில் வடை விற்பனையில் ஈடுபட்டு வந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. தாக்கப்பட்டுப் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றும், சிசிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, இவர் அடிப்படைவாதச் செயற்பாடுகள் தொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல்களை வழங்குபவர் என்று கூறப்படுகின்றது. அதனால் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நீட்டம்புவப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

தனிப்பட்ட...

விளையாட்டைக் கைவிட்டு அரச தலைவரும், தலைமை அமைச்சரும் ஒன்றிணைய வேண்டும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கடந்த 21ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலையடுத்து சுற்றுலாத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத சூழலை அமைத்துக்கொடுத்தது முஸ்லிம் அரசியல்வாதிகளே. இப்போது இது கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம். எனினும் இறுதியில் இந்தப் பூதம் முஸ்லிகளையும் அழித்துவிட்டே முடிவுக்குவரும்என்பதைமறந்துவிடவேண்டாம். இந்தக் குற்றம் தடுக்க முடியாது போனமைக்கு அரசியல் போட்டியே காரணமாகும். கோத்தபாய, பசில் என்ன செய்கின்றார்கள் என்பதைத் தேடவே புலனாய்வு பயன்படுத்தப்பட்டது. இந்த அரசியல் மோதலில் விளைவாகே கடந்த 21 ஆம் திகதி நாட்டில் பயங்கரவாதம் வெடித்தது. இந்தத் தாக்குதல் இரகசிய தாக்குதல் அல்ல. கடந்த காலங்களில் அளவுக்கு அதிகமாக இந்த தாக்குதல் குறித்துப் பேசப்பட்டு இயக்கமாக செயற்பட்டபோதே அதனைத் தடுக்க முடியாது நடக்கவிட்டு இந்த ஆட்சியாளர்கள் வேடிக்கை பார்த்தனர்.

அதேபோல் முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லிம் மக்கள் குறித்து கவனிக்காது வியாபாரம் மட்டுமே செய்தீர்கள். முஸ்லிம் வாக்குகளை கொண்டு அரசியல் வியாபாரம் செய்தீர்கள். ஒவ்வொரு முஸ்லிம் அமைச்சரும் மக்களுக்காக அரசியல் செய்யவில்லை. இந்த அரசியல் வாதிகள் ஒருபோதும் தற்கொலை செய்யப்போவதில்லை. இவர்களின் வாழ்க்கை வேறு. இவர்களுக்கு உள்ள சலுகைகள் எவற்றையும் கைவிட முடியாது. இந்தப் பூதத்தை சாடியில் இருந்து வெளியில் எடுத்தது முஸ்லிம் அமைச்சர்களே. அமைச்சர்கள் நேரடியாக குண்டுத்தாக்குதலை செய்யாது போனாலும் கூட அதற்கான சூழலை அமைத்துக்கொடுத்தது முஸ்லிம் அரசியல்வாதிகளே. தமிழர் தரப்பை நிராகரித்து அவர்களை இந்த நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றியதன் விளைவு இறுதியில் விடுதலைப் புலிகளில் வந்து முடிந்தது. அதே தவறை இப்போதும் நாம் செய்ய வேண்டுமா? இப்போது முஸ்லிம் சமூகத்தை அவ்வாறு வழிநடத்த வேண்டுமா? இதனை தடுக்க வேண்டியது முஸ்லிம் தலைவர்கள் மூலமாகவே. அதே போல் முஸ்லிம் சமூகம் இதற்கு இடமளிக்கக் கூடாது. முஸ்லிம் சமூகத்தில் தான் இந்த அடிப்படைவாத குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. அதை வளர்ப்பதா, அழிப்பதா என்பதை முஸ்லிம் மக்கள் தீர்மானிக்க வேண்டும். முஸ்லிம் சமூகமே அதை நீக்க வேண்டும். ஆகவே நீங்களே இதற்கு தீர்வை கூறுங்கள்.

அதேபோல் பொது சமூகமாக நாம் அனைவரும் என்ன செய்ய வேண்டும். இன்று எதுவுமே நியாயமான செயற்பாடுகள் அல்ல. ஒருபுறம் சிங்கள இனவாதம், இன்னொரு புறம் தமிழ் இனவாதம், இன்னொரு புறம் முஸ்லிம் இனவாதம் தான் அரசியலை கொண்டு செல்கின்றது. ஒரு இனவாதத்தை இன்னொரு இனவாதத்தால் அழிக்க முடியாது. ஆனால் சிலர் இந்த காரணிகளை வைத்துக்கொண்டு மகிழ்சிகரமான அரசியலை செய்கின்றனர். அதற்கு இனவாதத்தை கையில் எடுக்கின்றனர். இனவாதமும் அடிப்படைவாதமும் இன்னொரு இனவாதத்தை பலப்படுத்தும். அது அழிவினை உருவாக்கும். இந்த நேரத்தில் மிகவும் கடினமான அரசியல் என்னவென்றால் ஜனநாயக அரசியல். அதனை செய்யவே நாம் முயற்சித்து வருகின்றோம்.

முதலில் தலைமை அமைச்சர், அரச தலைவர் இருவரும் ஒன்றிணைய வேண்டும். உங்களின் கற்பனை அரச தலைவர் கனவுகள் அனைத்தையும் ஒரு ஓரமாக வைத்து விட்டு முதலில் இரண்டு தலைவர்களும் மீண்டும் ஒரு இடத்துக்கு வர வேண்டும். அதுதான் தலைமைத்துவ பண்பு. அரச தலைவர் தனது கடமை பொறுப்புக்களை தெரிந்து கொள்ள வேண்டும். தலைமை அமைச்சரும் அதையே செய்ய வேண்டும். இவர்கள் இதற்கு தகுதியானவர்களா என்பதை நீங்களே கேட்டுக்கொள்ள வேண்டும். உங்களின் தனிப்பட்ட அரசியல் நிலைப்பாட்டை கைவிட்டு பொதுமக்கள் குறித்து கருத்தில் கொண்டு தேசிய பாதுகாப்பு மற்றும் நாட்டின் இறையாண்மையை கட்டியெழுப்ப ஒன்றிணைய வேண்டும்.

இந்த அரசு தூரநோக்குடன் இன்னமும் செயற்படவில்லை. சிறுபிள்ளை அரசியல் செய்துகொண்டுள்ளனர். பொறுப்புள்ள அமைச்சர்கள் என்ற வகையில் இவர்கள் செயற்படவில்லை. விளையாட்டு வீடுகளுக்கான அரசே இந்த அரசு. இப்போதாவது மாற்றிக்கொள்ள வேண்டும்-என்றார். (எ-22)

அட்சய...

கொள்வனவு செய்திருந்தனர்.

நாட்டில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்து ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக அட்சய திருதிக்கு மக்கள் நகைக் கடைகளுக்கு வருவார்களா,

வழமைபோன்று வியாபாரம் நடக்குமா என்று ஏங்கியிருந்த நகைக் கடைக்கடை உரிமையாளர்களை வாடிக்கையாளர்கள் கைவிடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வழமைபோன்று அட்சய திருதியை நேற்றும் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நியூ லலிதா நகைக்கடை உரிமையாளர் ஏ.நகுலேஸ்வரன் தாக்குதல் சம்பவங்களை அடுத்து ஏற்பட்டுள்ள நிலைமையில் மக்கள் வருவார்களா என்று அஞ்சியிருந்தோம். ஆனால் அப்படி நடக்கவில்லை. வழமையாக அட்சய திருதியைக்கு வரும் மக்கள் கூட்டம் நேற்றும் எமது கடைகளுக்கு படையெடுத்திருந்தனர் -என்றார்.

யாழ். நகரம் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் வழமைபோன்றே அட்சய திருதியை வியாபாரம் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-21,9)

தமிழரை...

வேண்டாம். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று 21ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலையடுத்து சுற்றுலாத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த சபை ஒத்திவைப்புவேளை விவாதம் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் சபைக்கு வந்த அரச தலைவர் மைத்திரிபால சிறப்புரையை நிகழ்த்தினார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 21 ஆம் திகதி தாக்குதலின் போது அதிகமாக பேசப்பட்ட விடயமாக எனது வெளிநாட்டுப் பயணம் இருந்தது. நான் சிங்கப்பூரில் இருந்தபோது எனக்கு இந்தச் சம்பவம் தெரிய வந்தது. இந்தத் தாக்குதல் எவ்வாறு இடம் பெற்றது என்பதை யோசித்தேன். பன்னாட்டு பயங்கரவாத அமைப்பால் இது நடத்தப்பட்டது என்று அப்போது எனக்கு புரியவில்லை. எமது பாதுகாப்பு தரப்பின் கடிதம் ஒன்றும் அப்போது சமூக வலைத் தளங்களில் பரவியது, அதனை நான் அவதானித்தேன். அப்போது எனக்கு புரிந்தது, இந்த சம்பவம் குறித்து பாதுகாப்பு தரப்புக்கு தெரிந்துள்ளது என்பது. இதற்கு யார் காரணம் என்பதை கண்டறிய விசாரணை குழுவை உருவாக்க நினைத்தேன். நான் நாட்டுக்கு வர முன்னர் விசாரணை ஆணைக்குழுவை நியமிக்க நடவடிக்கை எடுத்துவிட்டேன்.

அடுத்த நாள் காலை பாதுகாப்பு குழு கூட்டப்பட்டது. அதற்கு முன்னர் விசாரணை ஆணைக்குழு உறுப்பினர்களை நிய மித்தேன். பாதுகாப்புச் சபையில் இதுகுறித்து பேசினேன். தலைமை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு பிரதானிகளை தொடர்பு கொண்டு அடுத்த கட்டம் குறித்துப் பேசினேன். இனியொரு சம்பவம் இடம்பெறாது இருக்கவும் இதற்கு பொறுப்பானவர்கள் யார் என்பதை கண்டறிய சகல நடவடிக்கைகளையும் நான் முன்னெடுத்துள்ளேன்.

பாதுகாப்பு அமைச்சின் பிரதான பதவிகளில் மாற்றங்களை செய்துள்ளேன். பாதுகாப்புப் படைகளுக்குச் சிறப்பு அதிகாரங்களை கொடுத்துள்ளேன். குற்றவாளிகளை கைது செய்யும் சகல நடவடிக்கைகளையும் முன்னேடுத்துள்ளேன். இன்று பாதுகாப்பு சிறப்பாக உள்ளது. எனினும் விமர்சனங்கள் இன்னும் உள்ளன. ஆனால் இது குறித்து முழுமையான அறிவுடன் அனைவரும் பேச வேண்டும்.

இந்த பிரச்சினை இலங்கையின் பிரச்சினை அல்ல, இது பன்னாட்டுப் பிரச்சினை, இந்த பிரச்சினை குறித்து பின்னணி தெரியாது பலர் பேசுகின்றனர். கண்மூடித் தனமாக இந்த பிரச்சினை குறித்துப் பேசுகின்றனர். இது குறித்து அனைவரும் முதலில் அறிந்து கொண்டு செயற்படவேண்டும். ஊடகங்கள் இந்த விடயத்தில் பொறுப்பாக செயற்பட வேண்டும்.

இதுவரை கைது செய்யப்பட்டவர்களில் 12 பேர் முக்கியமான பயங்கரவாதிகள். கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் குண்டுகள் தயாரிக்க பயன்படுத்தும் பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தப் பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய 41 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. அவர்களின் வீடுகள், சொத்துக்கள் அனைத்தும் அரச உடைமையாக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு சிறு உதவிகளை செய்த நபர்களுக்கு பிரதான பயங்கரவாதிகளால் ஒரு நபரிடம் 20 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. புலனாய்வுதுறையால் இந்த விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. 15 வாகனங்கள், 4 உந்துருளிகள் இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டு கைப்பற்றப்பட்டுள்ளன.

நாம் 30 வருடங்கள் போருடன் வாழ்ந்த மக்கள். குண்டுகளுடன் வாழ்ந்துள்ளோம். இப்போது இந்தத் தாக்குதல் தான் எமது முதல் தாக்குதல் அல்ல. இந்த நாட்டில் 6ஆவது அரச தலைவர் நான். எனக்கு முன்னர் இருந்த 5 அரச தலைவர்களின் காலத்தில் குண்டுகள் வெடித்துள்ளன. அதனை மறந்து விட வேண்டாம். இந்த தாக்குதல் இலங்கையில் உருவாக்கப்பட்ட ஒன்றல்ல. இந்த தாக்குதலில் இயக்குநர் எங்கிருந்தோ தாம்தான் காரணம் என்கிறார். இது குறித்து நாம் கவனமாகச் சிந்திக்க வேண்டும். எம்மை விட பலமான நாடுகளுக்கு இது பெரும் நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

முஸ்லிம் மக்களை பார்த்தால் சிங்கள மக்கள் அச்சத்தில் உள்ளனர். அதேபோல் முஸ்லிம் மக்களும் அதே அச்சத்தில் உள்ளனர். இந்த தாக்கம் தமிழ் மக்களையும் பாதித்துள்ளது என்பது அறிந்துகொள்ள முடிகின்றது. இந்தத் தாக்குதலுடன் தொடர்புபட்ட 150க்கும் குறைவான பயங்கரவாத நபர்கள் உள்ளதாக புலனாய்வு அறிக்கை கூறுகின்றது. அவர்களுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் பயங்கரவாதத்துக்குள் தள்ளுவதா என்பதை யோசிக்க வேண்டும். விடுதலைப்புலிகள் காலத்தில் சகல தமிழரும் புலிகள் என்ற கருத்து உருப்பெற்றது. அதனால் எமக்குள் பிரிவு ஏற்பட்டது. 83 கலவரத்தில் தமிழர்களின் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டதை அடுத்து தமிழ் இளைஞர்கள் புலிகளில் இணைந்தனர். நாம் தமிழர் மீதான அவநம்பிக்கை கொண்டமையே 30 ஆண்டுகாலப் போரை உருவாக்க காரணமாக அமைந்தது. இப்போது நாம் பொறுப்புடன் செயற்பட வேண்டும். விடுதலைப் புலிகள் என தமிழர்களை பார்த்ததைப்போல் முஸ்லிம்களை பயங்கரவாதிகள் எனப் பார்க்க வேண்டாம். பயங்கரவாதம் என்பது உலகத்தில் எங்கு எப்போது உருவாகும் என்பதை எவராலும் தெரிவிக்க முடியாது. உலக தலைவர்கள் எவராலும்அதைஎதிர்பார்க்கமுடியாது.எம்மால்செய்ய முடிந்த அனைத்தையும் நாம் செய்ய வேண்டும். இப்போது நாட்டில் இன ஒற்றுமையே வேண்டும். சகல மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டும்- என்றார். (எ-22)

யாழ்.பாடசாலை...

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, சென்ஜோன்ஸ், பக்ரிஸ், கொன்வென்ட், ஆகிய பாடசாலைகளுக்கே வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொசான் பெர்னாண்டோ, யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ராஜித சிறிதமிந்த ஆகியோர் நேற்று நேரில் சென்றனர்.

பாடசாலைகளின் பாதுகாப்பு, மாணவர்கள் வரவில் உள்ள சிக்கல் போன்ற விடயங்களை பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடி அவர்கள் ஆராய்ந்தார்கள். தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இடம் பெற்றத்தைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழல் காரணமாக பாடசாலைகளின் இரண்டாம் தவணைக்கான ஆரம்பம் பிற்போடப்பட்டது. கடந்த 6ஆம் திகதி நேற்று முன்தினமே பாடசாலைகள் ஆரம்பித்தன. பலத்த சோதனைகளின் பின்னர் மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலைக்குள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பாடசாலைகள் ஆரம்பித்த போது மாணவர்களின் வரவில் வீழ்ச்சி ஏற்பட் டிருந்தது. இந்த நிலையிலேயே பொலிஸ் மா அதிபர்கள் பாடசாலைகளுக்குச் சென்று கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர். (எ-21,26)

மகிந்தவுடைய...

வேண்டும் என்று விரும்புகின்றார் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குடையவர் மகிந்த ராஜபக்ச. எனினும் 19ஆவது அரசமைப்புத் திருத்தம் காரணமாக அவர் அரச தலைவர் வேட்பாளராகப் போட்டியிட முடியாது. அதனால் நான் போட்டியிட வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கின்றார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

என்னால் பல விடயங்களைச் செய்ய முடியும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். நான் அமெரிக்கக் குடியுரிமையையும் கைவிட்டுள்ளேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

நான் பாதுகாப்புச் செயலராக இருந்திருந்தால் தீவிர மயமாதலைக் கண்காணித்து எங்களிடம் இருந்த பொறிமுறைகளைப் பயன்படுத்தி அவற்றைக் கட்டுப்படுத்தியிருப்போம். இலங்கை அரசு இவற்றைக் கண்காணித்திருந்தால் தீவிரவாதிகளைக் கைது செய்து அந்த வலையமைப்பை முறியடித்திருக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் எனக்கு அதிர்ச்சியையும் கவலையையும் அளித்துள்ளது. போரை முடிவுக்குக் கொண்டுவந்த முக்கிய நபர்களில் ஒருவர் என்ற அடிப்படையில் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை இவ்வாறான வன்முறைகளை எதிர்கொள்ளும் என ஒருபோதும் நினைத்துப் பார்க்க வில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

கரவெட்டி செயலகம் கபடியில் சாதித்தது!

யாழ்ப்பாணம், மே 8
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச இளை ஞர் கழகங்களுக்கு இடையிலான கபடித் தொட ரில் கரவெட்டி பிரதேச இளைஞர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

பருத்தித்துறை ஜக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இந்த இறுதி யாட்டம் இடம்பெற்றது. இதில் கரவெட்டி பிர தேச செயலக இளைஞர் அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக இளைஞர் அணி மோதியது. விறுவிறுப்பாக நடை பெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச இளைஞர் அணி 26:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)

போராடி வென்றது யுனைற்ரெட் அணி

யாழ்ப்பாணம், மே 7
கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச் சங் கத்தில் பதிவு செய்யப்பட்ட மூன்றாம் பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யுனைற்ரெட் அணி வெற்றிபெற்றது.
கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட் டத்தில் யுனைற்ரெட் அணியை எதிர்த்து உதயதாரகை அணி மோதி யது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற உதயதாரகை அணி முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய உதயதா ரகை அணி நிர்ணயிக்கப்பட்ட 43.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 166 ஓட்டங் களைப் பெற்றது. தேவமகிந்தன் 49 ஓட்டங்களையும், ஜனாந்தனன் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெ டுத்தா டிய யுனைற்ரெட் அணி 31.4 பந்துப்ப ரிமாற்றங்களில் நிறைவில் 9 இலக் குகளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. (ம-23)

கிளிநொச்சி மாவட்ட கபடியில் பச்சிலைப்பள்ளி சம்பியன்

யாழ்ப்பாணம், மே 8
கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கபடித் தொடரில் ஆண்கள் பிரிவில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணி கிண் ணம் வென்றது.
கிளிநொச்சி பொதுவிளையாட்டு அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணியை எதிர்த்து கரைச்சி பிரதேச செயலக அணி மோதி யது. 37:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணி கிண் ணம் வென்றது. (ம-23)

கரைச்சி வலைப்பந்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 8
கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கு இடையி லான வலைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் கரைச்சி பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி கிண்ணம் வென்றது. கிளிநொச்சி பொது விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத் தில் கரைச்சி பிரதேச இளைஞர் கழக அணியை எதிர்த்து கண்டாவளை பிரதேச இளைஞர் கழக அணி மோதியது. 17:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கரைச்சி பிரதேச இளைஞர் கழக அணி கிண்ணம் வென்றது. (ம-23)

தோப்புக்காடு அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மே 8
காரை சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழ கம் காரைநகர் பிரதேச செயலக பிரி வில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் தோப்புக்காடு விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
காரைநகர் இந்துக் கல்லூரி மைதா னத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தோப்புக்காடு விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து காரைநகர் கலாநிதி விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ண யிக்கப் பட்ட நிமிடங்களில் இரண்டு அணிக ளும் கோல்கள் எதையும் பதிவுசெய் யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத்தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சமநி லைத் தவிர்ப்பு உதைகளில் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது தோப்புக்காடு விளையாட்டுக் கழகம். மூன்றாம் இடத்தை அம்பாள் விளை யாட்டுக் கழகம் தனதாக்கியது. (ம-23)

கிளிநொச்சி வலைப்பந்தாட்டம்

ஆண்கள் பிரிவிலும் கரைச்சி சம்பியன்!

யாழ்ப்பாணம், மே 8
கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவிலும் கரைச்சி பிரதேச இளைஞர் கழக அணி கிண்ணம் வென்றது.
கிளிநொச்சி பொது விளையாட்டு அரங்கில் அண்மையில் இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச இளைஞர் கழக அணியை எதிர்த்து பளை பிரதேச இளைஞர் கழக அணி மோதியது.
12:02 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கரைச்சி பிரதேச இளைஞர் கழக அணி கிண்ணம் வென் றது. (ம-23)

'பிபா'வில் இரு புதிய விருதுகள்

பன்னாட்டு மகளிருக்கான கால்பந்தாட்ட போட்டிகளில் இரண்டு புதிய விருதுகளை கால் பந்தாட்ட சம்மேளனமான 'பிபா' அறிமுகப்படுத்தியுள்ளது.

மகளிருக்கான கால் பந்து விளையாட்டை மேலும் ஊக்குவிக்கும் வகையிலேயே இந்த விருதுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி சிறந்த மகளிருக்கான 'கோல்கீப்பர்', 'சிறந்த மகளிர் அணி' ஆகிய விருதுகள் வழங்கப்படவுள்ளன.

செப்டம்பர் மாதம் மிலன் நகரில் நடைபெறும் 'பிபா' விருது வழங்கும் விழாவில், பெண்கள் பிரிவில் தேர்வு செய்யப்படும் வீராங்கனைகள் இந்த விருதுகளைப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறுதிக்குள் நுழைந்தது மும்பை இந்தியன்ஸ்

12ஆவது ஐ.பி.எல். போட்டியில் முதலாவது தகுதியாட்டம் நேற்று இடம்பெற்றது. இதில் மும்பை -சென்னை அணிகள் மோதின. இதில் மும்பை அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்று நேரடியாக இறுதிப் போட்டிக்கு சென்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் டூ பிளாசிஸ், வற்சன் களமிறங்கினர். அணி 6 ஓட்டங்களைப் பெற்ற போது டூ பிளாசிஸ் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அணி 65 ஓட்டங்களைப் பெற்ற போது 4 இலக்குகளை இழந்துடுமாறியது. பின்னர் ராயுடுவும், டோனியும் இணைந்து அணியை சற்று நிலை நிறுத்தினர். எனினும் அணியின் ஓட்ட எண்ணிக்கையில் வீழ்ச்சியே காணப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் சென்னை அணி 4 இலக்குகளை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. ராயுடு 47 ஓட்டங்களையும், டோனி 37 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

பந்து வீச்சில் சாஹர் 2 இலக்குகளையும், குர்னல் பாண்டியா, யாதவ் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ரோகித், டி குக் அணி 21 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டமிழந்தனர். மறுமுனையில் யாதவ், இஷன்கிஷன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர் மூன்றாவது இலக்குக்காக 80 ஓட்டங்கள் பகிரப்பட்டன. யாதவ் ஆட்டமிழக்காது 10 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 71 ஓட்டங்களைப் பெற்றார். அணி 18.3 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை இலகுவாக எட்டியது.

பந்து வீச்சில் இம்ரான் தாஹீர் 2 இலக்குகளையும், சாஹர், ஹர்பஜன் சிங் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தின் மூலம் மும்பை இந்தியன் அணி நேரடியாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. சென்னை அணி இன்று இடம் பெறும் டெல்லி -ஹைதராபாத் அணிகளுக் கிடையில் இடம்பெறும் விலகல் ஆட்டத்தில் வெற்றி பெறும் அணியுடன் மோதி இறுதி போட்டிக்கானசந்தர்ப்பத்தை கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ண இலங்கை அணி இங். புறப்பட்டது

இங்கிலாந்தில் இந்த மாத இறுதியில் உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையில் இந்தப் போட்டியில் கலந்து கொள்வதற்காக இங்கிலாந்து செல்லவுள்ள இலங்கை கிரிக்கெட் அணியினர் இன்றைய தினம் இலங்கை கிரிக்கெட் தலைமையகத்தில் சமய வழிபாடுகளில் கலந்துகொண்டதுடன், ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் இன்று இலங்கை அணியானது இங்கிலாந்து நோக்கிப் புறப்பட்டதுடன், உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் பயிற்சிப் போட்டிகளிலும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐ.பி.எல். போட்டிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மலிங்க

இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கான இலங்கை அணி புறப்பட்டுள்ளது. இந்த நிலையில் லசித் மலிங்க இந்தியாவில் இடம்பெறும் ஐ.பி.எல். போட்டியிலேயே இன்னமும் விளையாடிக் கொண்டிருக்கின்றார். அவர் இலங்கை அணியின் உலகக் கிண்ண அணியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மலிங்க ஐ.பி.எல். தொடர் முடிவடைய இலங்கை உலகக் கிண்ண அணியில் சென்று இணையவுள்ளார். ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடிய ஏனைய வெளிநாட்டு வீரர்கள் தங்களுடைய அணியில் கடந்த வாரமே சென்று இணைந்துள்ளனர்.

இலங்கை அணியின் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர மலிங்க குறித்து ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். மலிங்க தேசியப் போட்டிகளை விட பணம் சம்பாதிக்கும் ஐ.பி.எல். போட்டிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். இதற்கு பதில் அளிக்கும் வகையில் மலிங்க முரண்பாடான கருத்துக்களை முன் வைத்தால் அவருக்கு இலங்கை கிரிக்கெட் சபை சில் காலங்கள் ஒத்தி வைக்கப்பட்ட தடை விதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சிகள்...

கிரியெல்லவின்...

னர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல சிறப்புக் கூற்றொன்றை முன்வைத்து, நாட்டில் இடம்பெற்ற கடந்த கால சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு தனது அமைச்சு ஊடாக பிரிவால் விகாரைகளுக்கு அனுப்பத் திட்டமிட்ட கடிதம் தொடர்பில் விளக்கமளித்தார்.

அந்தக் கடிதத்தில் எந்த இனவாத தூண்டுதலும் இல்லை. எதிர்க்கட்சியினரே அதனை திரிபுபடுத்தி ஊடகங்களில் பொய்ப் பரப்புரை மேற்கொண்டு வருகின்றனர். விகாரைகளுக்கு அனுப்பிய இந்த கடிதம் தொடர்பில் ஆராய்பவர்கள் அன்று ஏப்ரல் 4ஆம் திகதி வழங்கப்பட்ட தகவலுக்கு முக்கியத்துவம் வழங்கியிருந்தால் நாட்டில் இந்த பேரழிவு ஏற்பட்டிருக்காது என்று அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் பியல் நிஷாந்த தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இராணுவத்தினர் 11பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவித்தார். இது இனவாதத்தை தூண்டும் செயலாகும். ஆனால் இது தொடர்பில் விசாரணை நடத்தி அவருக்கு பிணை வழங்கப்பட்டிருக்கின்றது. அவசரகால சட்டம் நாட்டில் நடைமுறையில் இருக்கும்போது எப்படி பிணை வழங்க முடியும்? இவர் எப்படி நாடாளுமன்றத்துக்கு வரமுடியும்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அப்போது பியல் நிஷாந்த எம்.பி. ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்துக் கருத்துத் தெரிவித்தார். எனது கூற்று தொடர்பில் நான் உடனடியாக திருத்தம் மேற்கொண்டேன். குற்றப் புலனாய்வு பிரிவில் இதுதொடர்பாக நான் வாக்குமூலம் அளித்துவிட்டே நாடாளுமன்றத்துக்கு வந்தேன். ஆனால் அரச தலைவருக்குச் சேறு பூசும்வகையில் கடிதம் அனுப்பிய அமைச்சின் ஊடகப் பிரிவுக்குச் சொந்தமான அமைச்சராக லக்ஸ்மன் கிரியெல்லவே இருக்கின்றார். அவரை இதுவரை விசாரணைக்கு அழைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார். அப்போது தயாசிறி ஜயசேகர எழுந்தார். பியல் நிஷாந்தவிடம் வாக்கு மூலம் பெறப்பட்டதுபோல் லக்ஸ்மன் கிரியெல்ல விடமும் வாக்கு மூலம் பெறவேண்டும் என்று அவர் கோரினார். அதன்பின்னர் ஆளுங்கட்சி உறுப்பினர் மனுஷ நாணயக்கார கருத்துத் தெரிவித்தார். அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவின் ஊடக பிரிவு அனுப்ப திட்டமிட்ட கடிதத்தில் என்ன தெரிவிக்கப்பட்டிருப்பது என்று யாருக்கும் தெரியாது. அதனால் கடிதத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவேண்டும். அப்போது அனைவரும் அதிலிருந்தவற்றை அறிந்துகொள்ளலாம் - என்றார். (எ-31)

தீவிரவாதத்...

பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரட்ண தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்புச் செயலர், முப்படைத் தளபதிகள் இடையிலான சந்திப்பு நடைபெற்றது. **அதிலேயே பதில் பொலிஸ் மா அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த மாதம் 21ஆம் திகதி தொடக்கம் தற்போது வரையில் பாதுகாப்புத் தரப்பினர் தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். தீவிரவாதத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் பெருமளவில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பல தீவிரவாதிகள் கைது செய்யப்படுவதற்கு முன்னர் தற்கொலை செய்து கொண்டனர். வெடி பொருள்கள் தொடர்பில் சிறப்பு தேர்ச்சி பெற்ற இரண்டு தீவிரவாதிகள் தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் ஊடாக உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும் கடந்த இரண்டு வாரகாலமாக முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது பெருமளவிலான வெடி பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மக்களின் வாழ்க்கை தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட ஊரடங்கு சட்டம் தற்போது நீக்கப்பட்டுள்ளது.

மதத் தலங்கள் மற்றும் பொது இடங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மக்களும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும. உறுதிப்படுத்தப்படாத போலியான செய்திகளை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்வதால் பிறிதொரு விதத்தில் பிரச்சினைகள் தோன்ற வாய்ப்புண்டு. மக்கள் பாதுகாப்புத் தொடர்பான தகவல்களைப் பொறுப்பான பிரிவுகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்- என்றார். (எ-71)

வோர்னரை ஆரம்ப வீரராக களமிறக்கவும்

ஆஸி. முன்னாள் வீரர் மார்க் வாக் தெரிவிப்பு

உலகக் கிண்ணப் போட்டிக்கான ஆஸ்திரேலிய அணியில் டேவிட் வோர்னர், சிமித் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். நேற்று பிரிஸ்பேனில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் ஓராண்டுக்குப்பின் ஆஸ்திரேலிய அணிக்காக இருவரும் களம் இறங்கினர்.

ஆனால் டேவிட் வோர்னர் ஆரம்ப வீரராக களம் இறங்கவில்லை. ஆரோன் பிஞ்ச், கவாஜா ஆகியோர்தான் ஆரம்ப வீரர்களாக களம் இறங்கினர். வோர்னர் 3ஆவது வீரராக களம் இறங்கினார்.

இந்த நிலையில் நான் டேவிட் வோர்னரைத்தான் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களம் இறக்கியிருப்பேன் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரரும், தேர்வாளருமான மார்க் வாக் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

என்னைப் பொறுத்தவரைக்கும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர்தான். ஆகவே, ஆரோன் பிஞ்ச் உடன் அவர் ஆரம்ப வீரராக களம் இறங்க வேண்டும். அவர் 'பவர் பிளேயில்' மிகவும் வேகமாக அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தக் கூடிய அபாயகரமான வீரர்-என்றார்.

வலன்சியா அசத்தலாட்டம்

ஸ்பானிய கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லாலிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியொன்றில் வலன்சியா அணி 6:2 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. அந்த அணி முதல் பாதி ஆட்டத்திலேயே 5 கோல்களை அடித்து அசத்தியது.

வலன்சியா - ஹஸ்கே அணிகளுக்கிடையே இடம்பெற்ற முதல்பாதி ஆட்டத்தின் 2ஆவது நிமிடத்தில் வலன்சியா அணி வீரர் டானியல் வாஸ் ஒரு கோலைப் போட்டார். 16ஆவது நிமிடத்தில் அந்த அணியின் மற்றுமொரு வீரர் றொட்றிகோ ஒரு கோலைப் போட்டார். 20ஆவது, 32ஆவது நிமிடத்தில் திரும்பவும் அந்த அணியின் இன்னுமொரு வீரர் சன்ரி மினா தொடர்ந்து இரு கோல்களைப் போட்டு அசத்தினார். மீளவும் அந்த அணியின் சார்பாக எற்றிக்ஸ்ரா 40ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட வலன்சியா அணி முதல் பாதி ஆட்ட நேர முடிவில் 5 கோல்களைப் போட்டு ஹஸ்கே அணி வீரர்களை நிலைகுலையச் செய்திருந்தனர்.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் ஹஸ்கே அணி வீரர்கள் விறுவிறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தனர். எனினும் ஆட்டம் ஆரம்பித்து 6ஆவது நிமிடத்தில் வலன்சியா அணி வீரர் றொட்றிகோ மீளவும் ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தார். இதன் பின்னர் ஹஸ்கே அணி வீரர்கள்ஆக்ரோசமாக ஆட ஆரம்பித்தனர். 66ஆவது நிமிடத்தில் ஹஸ்கே அணி வீரர் மெலிறோ ஒரு கோலைப் போட அந்த அணியின் வீரர்கள் தன்னம்பிக்கையுடன் ஆட ஆரம்பித்தனர். ஆட்டத்தின் இறுதி நிமிடம் வரையிலும் ஹஸ்கே அணி வீரர்கள் போராடினார்கள் என்றே சொல்லலாம். அந்த அணிக்கு ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் 90ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பொன்று கிடைக்கப் பெற அந்த அணியின் வீரர் வ்வல்குற கோலாக மாற்ற இறுதியில் வலன்சியா அணி 6:2 என்ற கணக்கில் அபார வெற்றி பெற்றது.

உலகக் கிண்ண இந்தியா – பாக். ரிக்கெட்டுக்கள் விற்றுத் தீர்ந்தன

உலகக் கிண்ணப் போட்டி இந்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளதால் இதற்கான ரிக்கெட் விற்பனை கூடு பிடித்துள்ளது. இந்த நிலையில்இந்தியா- பாகிஸ்தான் மோதும் போட்டிகளின் ரிக்கெட்டுகள் விற்று முடிந்துள்ளது பலரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டியை ரசிகர்கள் எப்போதுமே ஆவலுடன் எதிர் பார்ப்பார்கள். இரு நாட்டு எல்லை பிரச்சினை காரணமாக இரு அணிகள் இடையே நேரடி போட்டி தொடர் நடை பெற வில்லை. பன்னாட்டு கிரிக்கெட் சபையின் போட்டி தொடரில் மட்டும் மோதி வருகின்றன.

தற்போது உலககோப்பை போட்டியில் இந்தியா பாகிஸ்தான் ஆட்டம் இந்த வருடத்தின் மிகப் பெரிய போட்டியாக பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே இந்தியா -பாகிஸ்தான் மோதும் போட்டிக்கான ரிக்கெட் விற்பனை தொடங்கியது. இதன் விற்பனை தொடங்கிய 48 மணி நேரத்தில் அனைத்து ரிக்கெட்டுகளும் விற்று தீர்ந்து விட்டதாக மைதான நிர்வாகம் தெரிவித்தது. இதன்மூலம் இந்தப் போட்டிக்கு ரசிகர்களிடையே பலத்த எதிர்பார்ப்பு நிலவுகிறது என்று கிரிக்கெட் வல்லுநர்கள் தெரிவித்தனர்.

புல்வாமாவில் தாக்குதலில் 40 இந்திய ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். இதையடுத்து உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று பலர் வலியுறுத்தி வந்தனர். ஆனால் இதில் இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இதற்கிடையே போட்டிக்கான அனைத்து ரிக்கெட்டுகளும் விற்று தீர்ந்துள்ளன. இதனால் இந்தியா-பாகிஸ்தான் போட்டி கண்டிப்பாக நடைபெறும் என்று ரசிகர்கள் நம்பிக்கையுடன் உள்ளனர்.

உலகக் கிண்ண தென்னாபிரிக்கா அணியில் மோரிஸுக்கு வாய்ப்பு

உலகக் கிண்ண தென்னாபிரிக்கா அணியில் இடம் பிடித்திருந்த அன்ரிச் நோர்ட்ஜ் காயம் காரணமாக விலகியதால், கிறிஸ் மோரிஸ் இடம் பிடித்துள்ளார்.

இந்த மாத இறுதியில் உலகக் கிண்ணப் போட்டி இங்கிலாந்தில் இடம்பெறவுள்ளது.உலகக் கிண்ண தென்னாபிரிக்கா அணியில் வேகப் பந்து வீச்சாளர் அன்ரிச் நோர்ட்ஜ் இடம் பிடித்திருந்தார். இலங்கைக்கு எதிரான தொடரின்போது இவருக்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இருந்தாலும் உலகக் கிண்ணப் போட்டி தொடங்குவதற்கு முன்னர் காயம் குணமடைந்து விடும் என எதிர்பார்த்த தென்னாபிரிக்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, அவரது பெயரை 15 பேர் கொண்ட பட்டியலில் சேர்த்தது.

இந்த நிலையில் அன்ரிச்நோர்ட்ஜின் காயம் அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு குணமடையாததால் அந்த இடத்துக்குகிறிஸ் மோரிஸ் இடம்பிடித்துள்ளார். கிறிஸ் மோரிஸ் ஐ.பி.எல். தொடரில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். இவர் சிறந்த பந்து வீச்சாளர். அதனோடு சிறப்பான துடுப்பாட்டத் திறனையும் கொண்டுள்ளார்.

விற்பனைக்கு
ரொசிபா போட்டோ கொப்பி மிஷின் விற்பனைக்குண்டு.
E - ஸ்ரூடியோ - 181
077 250 8751

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.